
கல்கி
KALKI 25.6.2000 ரூ. 5.00
“யாரைக் கண்டும் பயமில்லை!”
– எல். கணேசன் சூடான பேட்டி!
சன் நியூஸ் சானல்
சாதித்தது என்ன?

பாதுகாப்பான முதலீடு – நிலையான வருமானம்

பவர்ஃபைனான்ஸ்

தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்

முதலீடுகளுக்கு வழங்கப்படும் வட்டி விகிதங்கள்

காலம்	முறையான வட்டி வழங்கும் திட்டம் (RIPS)			திரள் வட்டி வழங்கும் திட்டம் (CIPS - I)		
	வழங்கப்பட உள்ள ஆண்டு வட்டி விகிதம்		அதிகபட்ச முதலீடு (வரிப்பிடித்தம் இல்லாமல்)	முதிர்வுத் தொகை ரூ. 5,000/-த்திற்கு	ஒரு ஆண்டிற்கு பெறக்கூடிய வருவாய் விகிதம்	அதிகபட்ச முதலீடு (வரிப்பிடித்தம் இல்லாமல்)
	மாதத்திற்கு	காலாண்டிற்கு				
12 மாதங்கள்	–	10.59%	ரூ. 47,000/-	ரூ. 5,551/-	11.02%	ரூ. 45,000/-
24 மாதங்கள்	–	11.10%	ரூ. 45,000/-	ரூ. 6,224/-	12.24%	ரூ. 38,000/-
36 மாதங்கள்	12.00%	12.12%	ரூ. 41,000/-	ரூ. 7,155/-	14.37%	ரூ. 31,000/-
48 மாதங்கள்	12.00%	12.12%	ரூ. 41,000/-	ரூ. 8,061/-	15.31%	ரூ. 27,000/-
60 மாதங்கள்	12.00%	12.12%	ரூ. 41,000/-	ரூ. 9,085/-	16.34%	ரூ. 24,000/-

திரள் வட்டி வழங்கும் திட்டம் (CIPS - II)

காலம்	குறைந்த அளவு டெபாசிட் ரூ.	முதிர்வுத் தொகை ரூ.	ஒரு ஆண்டிற்கு பெறக்கூடிய வட்டி விகிதம்	அதிகபட்ச முதலீடு (வரிப்பிடித்தம் இல்லாமல்) ரூ.
60 மாதங்கள்	550/-	1,000/-	16.34%	23,650/-

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)

(தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்)

பதிவு அலுவலகம் : எண் 84, டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.

தொலைபேசி : 4997689, 4995648. ஃபேக்ஸ் : 044-4982894 மின் அஞ்சல் : powerfin@md3.vsnl.net.in

Visit us at : www.tnpowerfinance.com / www.tninfrafinance.com

"Also available on the Internet" www.tn.gov.in / www.chennaionline.com / www.aaraamthinai.com / www.southindia.com



• விட்டல்

இல்லை. எனவே யாருக்கும் பயம் இல்லாமல் போய் விட்டது'' என்று விஜயன் பொங்கினார்.

எம்.எஸ். உதயமூர்த்தி, திலகவதி என விழாவில் பல விஐபிகள்



• விஜயன்



• நிர்மல்



• உதயமூர்த்தி

தொடக்க விழா நடைபெற்ற ராணி சீதை அரங்கம் நிரம்பி வழிய, நிகழ்ச்சி தொடங்கிய அரை மணி நேரத்தில் இரண்டாயிரம் பேர் உறுப்பினரானார்கள்!

தொடங்கப்பட்டது ஐந்தாவது தூண் என்ற அமைப்பு. லட்சியம்– ஊழலைக் களைவது. அமைப்பாளர் எக்ஸ்னோரா நிர்மல். தலைவர், வழக்கறிஞர் விஜயன்.

''முதலில் 1947ம் வருடம்,

பேசி முடித்து, விட்டல் பேச வந்தபோது மணி இரவு ஒன்பது நாற்பத்தைந்து. யாரும் இருக்கையை விட்டு எழவில்லை. இலக்கியத் தமிழில் வெளுத்து வாங்கினார் விட்டல்.

''ஊழல் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் பட்டியலை இண்டர்நெட்டில் வெளியிட்டேன். ஆனால், 'இன்னும் எனக்குக் குற்றப் பத்திரிகை வந்து சேரவில்லையே'

திருநாட்டில் ஊழலே இல்லையாம்!

என்று ஜோக் அடிக்கிறார்கள்

பிறகு 1988ம் வருடத்தில் லஞ்ச ஒழிப்புச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் சட்டங்கள் இருப்பது மக்களுக்குத் தெரியவில்லை, லஞ்சம் வாங்குபவனுக்கும் தெரியவில்லை. ஊழல் செய்பவர்களுக்கு எதிராக இங்கு தண்டனைச் சட்டம் கடுமையாக


– அவரவருக்கு அவர்கள் துறையே பாதுகாப்பு கொடுக்கிறது. வங்கிகளின் வராக் கடன் ஐம்பத்து ஓராயிரம் கோடி என்று சொல்கிறார்கள். கடன் வாங்கியவர்கள் பட்டியலைக் கேட்டால் அது வங்கியின் தொழில் ரகசியம்; அதைத் தர முடி

ஏழை மாணவர்களுக்குக் கல்வி உதவி ரூ. 1,50,000! பார்க்க – பக். 36



• மேடையில்...

கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
ஈ மெயில் : kalkiweekly@vsnl.com



வேறு வெங்கி!

சன் டி.வி.யில் வரும் 'பூம் பூம் ஷக்கலக்க' தொடரில் மொத்தமே நாலரை இன்ச் அளவில் வரும் நடிகை ரேவதியைப் பார்த்து ஆச்சர்யப்படாத சிறுவர்களே இருக்க மாட்டார்கள். இந்த மாதிரி ட்ரிக் வேலைகளுக்குக் காரணம் வெங்கி என்பவர். சினிமாவில் கிராபிக்ஸில் கலக்கிக் கொண்டிருக்கும் 'வெங்கி'க்கும் இவருக்கும் சம்பந்தமில்லை. இது வேறு வெங்கி!

— கிங்

யாது என்கிறார்கள்.

"இங்கே லஞ்சம் வாங்குவதைப் பற்றிப் பேசுகிறார்களே ஒழிய கொடுப்பதைப் பற்றிப் பேசுவதில்லை. ஐம்பது ரூபாயை நியாயமான லஞ்சம் என்றும் அதிகத் தொகை என்றால் அநியாயமான லஞ்சம் என்றும் மக்களே லஞ்சத்தை அங்கீகரிக்கிறார்கள்!

"நூறு கோடி இந்தியர்களில் பத்து கோடிப் பேர் வாங்கும் லஞ்சம் மீதமுள்ள தொண்ணூறு கோடி பேரைப் பாதிக்கிறது. நாட்டுப் பொருளாதாரத்தையும், ஏழைகளையும் அதிகம் பாதிக்கிறது. ஐந்தாவது தூண் போன்ற பொது அமைப்புகள் மக்கள் சக்தியைத் திரட்டினால் ஐம்பது வருடத்தில் லஞ்சத்தை, ஊழலை ஒழித்து விட முடியும்" என்றார் விட்டல்.

லஞ்சம வாங்காத அதிகாரிகளுக்கு 'ஜீரோ கரப்ஷன் ஆபீசர்' என்ற அடையாள அட்டையை வழங்கி, பணி நேரத்தில் அணிந்து கொள்ளச் செய்யப் போவதாகச் சொன்னார் நிர்மல்.

அதே போல் லஞ்சம் வாங்காத அலுவலகங்களுக்கு 'குவாலிட்டி ஆபீஸ்' என்ற அடையாளப் பலகையும் ஊழல் இல்லாத ஊருக்கு 'ஜீரோ கரப்ஷன் சிட்டி' என்ற விருதையும் வழங்கப் போகிறார்களாம்.

ஐந்தாவது தூண் தேர்வு செய்திருக்கும் முதல் ஐ.ஏ.எஸ். அதிகாரி திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் உமா சங்கர். ஊழல் இல்லாத ஊர் திருவாரூர்!

எல்லாம் சரி; ஜெயலலிதா போன்றவர்கள் தேர்தலில் போட்டியிடாமல் இருக்க, ஐந்தாவது தூண் உச்ச நீதிமன்றத் தடை வாங்குமா...?

"அது குறித்து இன்னும் யோசிக்கவில்லை. ஆனால் சட்டப்படி ஒரு எம்.பி. அல்லது அரசியல் தலைவர் ஊழல் செய்து நீதிமன்றத்தில் தண்டனை பெற்றால், தீர்ப்பு அமுலுக்கு வர அறுபது நாள் இடைவெளி தரப்படுகிறது. அதற்குள் அவர்கள் உச்சநீதிமன்றத் தடை வாங்கிவிடுகிறார்கள். அப்புறம் வழக்கு 10 வருடம் இழுக்கும்... இந்த அறுபது நாள் சலுகை ஒழிக்கப்பட வேண்டும் என்பதே எங்கள் முதல் போராட்டம்" என்றார், விஜயன்.

— லியோ

படங்கள் : வெங்கடேஷ்



"பொண்ணு வீட்டுக்கும், மாப்பிள்ளை வீட்டுக்கும் என்ன தகராறு?"

"கல்யாணத்தை 'அம்மு'வீட்டு கல்யாணம் மாதிரி நடத்தணும்னு பொண்ணு வீட்டுக்காரங்க சொல்றாங்க. 'வல்லு'வீட்டுக் கல்யாணம் மாதிரி நடத்தணும்னு மாப்பிள்ளை வீட்டுக்காரங்க சொல்றாங்க!"

– நெல்லையப்பபுரம் செல்வன்



இதுக்கு மேலும் லஞ்சம் ஒரு கோடி?

ஒரு கிரிக்கெட் வீரர் நம் நாட்டில் தற்போது எவ்வளவு சம்பாதிக்க முடியும்?

ஒரு டெஸ்ட் பந்தயத்துக்கு அளிக்கப்படும் தொகை ஒன்றரை லட்சம் ரூபாய். ஒருநாள் பந்தயமென்றால் ஒவ்வொருவரும் பெறுவது ஒரு லட்ச ரூபாய். ஸ்பான்சர் நிறுவனத்தின் லோகோவை அணிந்து கொள்வதற்கும் சேர்த்துத்தான் இந்தத் தொகை. இதில் ஒரு டெஸ்ட் மேட்ச்சுக்கு நாலாயிரம் ரூபாயும், ஒரு நாள் பந்தயமென்றால் இரண்டாயிரம் ரூபாயும் கிரிக்கெட் வீரர்களின் நல நிதிக்கு அளிக்க வேண்டும்.

சமீபத்தில், ''சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன் நாங்கள் விளையாடிய போது ஒரு டெஸ்ட் பந்தயத்துக்கு ஏழாயிரமும், ஒருநாள் பந்தயத்துக்கு ஐந்தாயிரமும்தான் அளித்தார்கள். லோகோவை அணிவதெல்லாம்... மூச்'' என்று பெருமூச்சு விட்டிருக்கிறார் வெங்சர்கார்.

விளம்பரங்களில் நடிப்பதற்காக சச்சின் டெண்டுல்கர் வாங்கிய தொகை 1996ல் நாற்பது லட்சம் ரூபாய். இப்போது அது ஒன்றரைக் கோடி ரூபாயாக அதிகரித்திருக்கிறது. மற்றவர்கள் அவர்களது புகழுக்கு ஏற்பத் தொகை பெறுகிறார்கள். சவுரவ் கங்குலி ஒரு விளம்பரத்தில் தோன்ற ஐம்பது லட்சம் ரூபாய் பெற்றுக் கொள்வதாகக் கேள்வி.

பிரபல நாளிதழ்கள் மற்றும் விளையாட்டுப் பத்திரிகைகளுக்கு 'காலம்' (column) எழுதுவதன் மூலமும் எக்கச்சக்கமாக சம்பாதிக்க முடியும். அணியில் உள்ளவர்களில் கேப்டன் மட்டுமே இப்படி எழுத இப்போது கிரிக்கெட் போர்ட் அனுமதி அளிக்கிறது. ஒரு சிறப்புக் கட்டுரைக்கு ஐம்பதாயிரம் ரூபாய் பெறுகிறார் இந்திய கேப்டன். தென்னாப்பிரிக்கா அணி இங்கு நம்மோடு மோதிய போது, 'கேம் பிளான்' என்ற பத்திரிகை ஹான்ஸி க்ரோனியேவுக்கு ஒரு 'காலம்' எழுத 25,000 ரூபாய் வீதம் டூர் மொத்தத்துக்குமாகச் சுமார் இரண்டரை லட்ச ரூபாய் கொடுத்ததாம்.

துபாய் அல்லது ஷார்ஜாவில் ஸ்பெஷல் பார்ட்டிகளுக்கு அழைக்கப்பட்டால் கிரிக்கெட் பிரபலங்களுக்கு வழங்கப்படும் அன்பளிப்பு பத்து லட்சம் ரூபாய் அல்லது ஒரு கார். உள்ளூரில் கடை திறக்க வேண்டுமென்றால் கூட பத்தாயிரத்திலிருந்து ஐந்து லட்சம் ரூபாய் வரை வழங்கப்படுகிறது.

இந்த அழகில் ஆஸ்திரேலிய விளையாட்டு வீரர்களைப் பார்த்து நம் அணிக்காரர்கள் பொறாமைப்படுகிறார்களாம். காரணம், நம்மவர்களைப் போல ஆறு பங்கு ஆண்டு வருமானம் அவர்களுக்கு.

இதைப் படித்து முடித்ததும் உங்கள் மனத்தில் எழும் கேள்வியை, தலைப்பில் காண்க.

— ஜி.

கா. காளிமுத்து (அ.தி.மு.க)

ஜெயா டி.வி.யில் செய்தி இல்லாத மற்ற நேரங்களில்தான், சன் நியூஸ், பி.பி.சி, ஸ்டார் நியூஸ் போன்ற செய்தி சானல்களைப் பார்க்கிறேன். குறிப்பாக சன் நியூஸ் சானல் தொடங்கப்பட்ட நாள் முதல் இன்றுவரை கொஞ்சமும் முன்னேற்றம் இல்லை. தொடர்ந்து பார்க்க முடியாதபடி எரிச்சலூட்டுகிறது. காரணம், ஒளிபரப்பிய ஒரே செய்திகளைத் திரும்பத் திரும்ப ஒளிபரப்புகிறார்கள். பி.பி.சி.யிலும் திரும்பத் திரும்பக் காட்டினாலும் ஒவ்வொரு முறையும் சுவை கூட்டி, ஒரே செய்திக்கு விதவிதமான விஷுவல்களைக் கொடுக்கிறார்கள். அந்த அளவுக்கு இவர்கள் சாதிக்க நீண்ட காலம் பிடிக்கலாம்.

எஸ். திருநாவுக்கரசு (எம்.ஜி.ஆர். அ.தி.மு.க)

சன் நியூஸ் தொடங்கப்பட்ட முதல்நாள் பார்த்தேன். அதன்பிறகு ஒருமுறை பார்த்தேன். தமிழில் நல்ல முயற்சி. செய்திகளை உடனுக்குடனும், காட்சிகளோடும் கொடுப்பதுதான் செய்தித் தொலைக் காட்சிகளின் தனிச்சிறப்பு. அதில் 'சன் நியூஸ்' வெற்றி பெறும் என்று நினைக்கிறேன்.

சன் நியூஸ் சானல் சாதித்தது!

"சன் நியூஸ் சானல் ஆரம்பித்து ஒரு மாதமாகிறது. ஆனால் நடத்துவது லேசுப் பட்ட விஷயமாக இல்லை. இருபத்து நாலு மணி நேர நியூஸ் சானல், தினம் இருபத்தி நாலு கல்யாணம் பண்ணுவதற்கு ஒப்பானது" என்கிறார் சன் டி.வி.யின் கலாநிதி மாறன்.

"டில்லிதானே இந்தியாவின் அரசியல் மையம்? சென்னையில் இருந்துகொண்டு, இருபத்து நாலு மணி நேர நியூஸ் சேனல் நடத்துவது சிரமமாக இல்லையா?"

"இண்டர்நெட்டெல்லாம் வந்துவிட்ட இந்தக் காலத்தில் உலகமே ஒரு கிராமமாகச் சுருங்கிவிட்டது. அப்படி இருக்கும் போது டெல்லியும் சென்னையும் ஒன்றுதான். சென்னையில் இருந்துகொண்டுதானே, முழு சூரியகிரகணத்தை லண்டனில் தொடங்கி துருக்கி வரை நேரடியாக ஒளிபரப்பு செய்தோம்! வேறு எந்தத் தனியார் சேனலும் அதை ஒளிபரப்பவில்லையே!" என்கிறார் சிரித்துக்கொண்டே.

சன் நியூஸின் செய்தி ஆசிரியர் மாலன் தரும் விவரம் சுவாரசியமானது:

"மே மாதம் ஒன்பதாம் தேதி முற்பகல் 10.43 மணிக்கு கம்ப்யூட்டர் உலகையே கதி கலங்க வைத்த காதல் வைரஸ் சதிக் கும்பல் கைது செய்யப்பட்டது. சன் நியூஸ் சானலின் பகல் பன்னிரண்டு மணி செய்தியில் அது ஒளிபரப்பானது. மே பத்தொன்பதாம் தேதி காலை ஏழு மணிக்கு பிஜி தீவில் கிளர்ச்சி நடந்தது. புரட்சிக்காரர்கள் அதிரடியாக ஆட்சியைக் கைப்பற்றிய சம்பவம் நடந்தது. எட்டு மணி சன் நியூஸ் சானல், செய்தி அறிக்கையில் அந்தச் செய்தி இடம் பெற்றது. முந்நாள் மத்திய அமைச்சர் ராஜேஷ் பைலட் விபத்தில் மரணமடைந்த செய்தியை, சம்பவம் நடந்த



ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் (த.நா.காங்.)

பொழுதுபோக்குக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்த சன் டி.வி இப்போது தகவல் துறையிலும் இறங்கி, செய்திக்கு ஒரு தனிச் சானலே கொண்டு வந்திருப்பதை முதலில் பாராட்ட வேண்டும். வளரும் செய்தி சானல் என்ற முறையில் தொடக்கத்தில் பல குறைபாடுகள் இருக்கத் தான் செய்யும். அதை அவர்கள் சுலபமாகச் சமாளித்து விடுவார்கள். சன் தொலைக்காட்சி போலவே சன் நியூஸ் தனக்கென்று தனி யிடம் பிடித்து விடும் என்று நம்புகிறேன்.

கிருபாநிதி (பா.ஜ.க)

சுற்றுப்பயணங்களிலேயே வாழ்க்கை ஓடிக் கொண்டிருப்பதால் 'சன் நியூஸ்' தொடர்ந்து பார்க்க முடியவில்லை. பார்த்தவரையிலும் சிறப்பாக இருக்கிறது. தென்னக மாநிலங்களிலேயே தமிழில்தான் செய்திக்கென்று தனித் தொலைக்காட்சி வந்திருக்கிறது. இது தமிழர்களாகிய நாம் பெருமைப்பட வேண்டிய விஷயம். நமது இந்த கர்வத்தை சன் நியூஸ் நடுநிலையுடன் செய்திகள் ஒளிபரப்பி, காப்பாற்றும் என்று நம்புகிறேன்.

ஒன்றேகால் மணி நேரத்தில் உலகிற்குச் சொன்னோம்" என்கிறார் மாலன்.

உடனுக்குடன் செய்திகளை வழங்குவது எப்படிச் சாத்தியமாகிறது?

சன் டி.வி.யின் செய்திக்காக ஏற்கெனவே தமிழகத்தின் அனைத்து மாவட்டத் தலை நகரங்களிலும் நிருபர்கள் உண்டு. சன் நியூஸ்

என்ன?

ஆரம்பிக்கப்பட்டவுடன், தமிழகம் முழுவதும் ஒவ்வொரு முப்பது கிலோமீட்டர் தூரத்துக்கும் ஒரு நிருபர் என்று ஏராளமான பகுதி நேர நிருபர்களையும், கேமராமேன்களையும் நியமித்து இருக்கிறார்கள். இந்த முப்பது கிலோமீட்டர் என்பது, எந்த இடத்தில் எந்தச் சம்பவம் நிகழ்ந்தாலும், ஒரு மணி நேரத்துக்குள் ஸ்தலத்துக்குப் போய்விட வசதியாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் உருவான திட்டம்.

பல்வேறு ஊர்களிலும் நடப்பவை நிருபர்களால் ஒளிப்பதிவு செய்யப்பட்டாலும் அவை சென்னைக்கு எப்படி வந்து சேருகின்றன?

மதுரையிலும், கோவையிலும் இவர்களுக்கு செய்தி மையங்கள் உள்ளன. எஸ்.என்.ஜி என்று அழைக்கப்படும் 'சேடிலைட் நியூஸ் கேதரிங்' கருவிகள் இவ்விரு மையங்களிலும் இருக்கின்றன. இதன் வழியே, ஒளிப்பதிவு செய்யப்பட்ட செய்திகள், சென்னையில் உள்ள சன் நியூஸ் சானலின் செய்தி அறைக்கு நேரடியாகவே வந்து சேருகின்றன. விரைவில், இது போன்ற உபகரணங்கள் கொண்ட செய்தி மையங்கள் திருச்சியிலும், திருநெல்வேலியிலும் அமைக்கப்படவுள்ளன.



மாலன்

இவை தவிர சன் நெட் ஒர்க்கின் அங்கங்களான உதயா (கன்னடம்), சூர்யா (மலையாளம்) ஜெமினி (தெலுங்கு) ஆகியவற்றிலும் செய்தி ஒளிபரப்பு உண்டு. இதற்கென அந்தந்த மாநிலங்களில் நிருபர் படையும் உண்டு. மேலும், டெல்லியிலும் இவர்களுக்குச் செய்திக்குழு உள்ளது. இவர்கள் சேகரித்து அனுப்பும் செய்திகளும் வந்து சேருகின்றன.

மேலும், அகில இந்திய அளவில் ஏ.என்.ஐ என்ற செய்தி நிறுவனத்துடனும், அகில உலக அளவில் ராய்டர், அசோசியேடட் பிரஸ் டெலிவிஷன் நெட் ஒர்க்





• எடிட்டிங் பிரிவு...

(ஏ.பி.டி.என்) ஆகிய நிறுவனங்களுடனும் ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதால், அவர்களும் செய்திகளை சாடிலைட் மூலமாக அனுப்பி வைத்த வண்ணம் இருக்கின்றனர். இவற்றுக்கும் மேலாக இன்டர்நெட்டும் கை கொடுக்கிறது.

இப்படியாக வந்து குவியும் செய்தி மற்றும் வீடியோ படங்களைச் செப்பனிடுவதற்கு என்றே மூன்று ஷிப்டுகளில் வேலை நடக்கிறது. வரும் செய்திகளைப் படித்து, அவற்றைத் தமிழில் மொழி பெயர்த்து, உரிய விஷுவல்களைச் சேர்க்கும் பணியும் நடக்கிறது. ஒவ்வொரு செய்திக்கும் உரிய விஷுவல்களுக்குப் பின்னணியாக, செய்தியின் ஒரு பகுதி படிக்கப்பட்டு, ஒலிப்பதிவு ஆகிறது. கூடவே, சம்பந்தப்பட்ட நபர், நேரடியாகப் பேசும் பகுதியும் அவசியமானால், சேர்க்கப்படுகிறது.

செய்திப் பிரிவு, செய்தி அறிக்கையை முழுமையாகத் தயாரித்து முடித்ததும், செய்தி ஒளிப்பதிவு நடக்கிறது. இங்கே கையாளப்படுவது டிஜிடல் தொழில் நுட்பம். ஏற்கெனவே, செய்திகளுக்குரிய விஷுவல் கிளிப்பிங்குகள் கம்ப்யூட்டரில் சேமிக்கப்பட்டிருக்கும். செய்தி வாசிப்பவர் ஒவ்வொரு செய்தியையும் படித்து முடிக்க, ஆங்காங்கே அதற்குரிய விஷுவல்களைச் சேர்க்கிறார்கள். இதனால் விரைவாக செய்தியை ஒளிப்பதிவு செய்ய முடிகிறதாம்.

செய்தி வாசிப்பவர், செய்திகள் எழுதப்பட்ட தாள்களைப் பார்த்துப் படிக்கிற காலமும் மலையேறிவிட்டது. டெலிபிராம்ப்டர் என்று ஒரு கருவியைத்தான் இன்று அனைவரும் பயன்படுத்துகிறார்கள். கேமராவுடன் இணைந்த இக் கருவி, செய்தி வாசிப்பவரின் முன் சௌகரியமாக நிற்கிறது. அதில் உள்ள திரையில், செய்திகள் சீரான வேகத்தில் ஓடிக் கொண்டிருக்க, நியூஸ் ரீடர் அதைப் பார்த்துப் படிக்கிறார்.

எத்தனையோ பல டெக்னீஷியன்களின் உழைப்பில் செய்திகள் உருவானாலும் நேயர்களைப் பொறுத்தவரை, செய்தி வாசிப்பவர்கள்தானே முக்கியம்! இங்கேதான் சிக்கல்.

"செய்தி வாசிக்கத் தகுதியான நபர்கள் கிடைப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. இருநூறு பேர் விண்ணப்பித்தால் நாலு பேர்தான் தேறுகிறார்கள். ஆங்கிலத்துக்காவது சுலபமாக ஆட்கள் கிடைத்து விடுகிறார்கள். ஆனால் தமிழுக்குத்தான் செய்தி வாசிப்பாளர் பஞ்சம் கடுமையாக இருக்கிறது" என்கிறார் கலாநிதி மாறன் (வாழ்க தமிழ்!)

"இதற்கு என்ன காரணம்?"

"டி.வி மீடியம் என்பதே இங்கு தனியார் சானல்களின் வருகைக்குப் பிறகுதான் வளர்ந்தது. எனவே இதைப் பற்றிய விழிப்புணர்வு இங்கே அதிகம் இல்லை. டி.வியில் செய்தி வாசிப்பதற்குரிய பர்சனாலிடி இருந்தால், உச்சரிப்பு உதைக்கிறது. உச்சரிப்பு நன்றாக இருந்தால், பர்சனாலிடி தேறுவதில்லை."

சன் நியூஸ் சானலில் இருபத்து நாலு மணி நேரமும் செய்தி ஒளிபரப்பானாலும் சன் டி.வியின் இரவு எட்டு மணி செய்திகளுக்கு பாபுலாரிடி குறையவில்லை என்கிறார் கலாநிதி மாறன். இன்னமும் சன் டி.வியின் செய்திப் பிரிவு தனியாகவே இயங்கி வருகிறது.

"ஒன்றின் மறு ஒளிபரப்பாக மற்றொன்று அமைந்து விடக் கூடாது என்பதில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கிறோம். விஷுவல்களிலும் வித்தியாசம் கடைபிடிக்க முயற்சி செய்கிறோம்" என்கிறார் மாறன்.

சன் டி.வியின் செய்திகளும், சன் நியூஸ் சானலில் ஒளிபரப்பாகும் செய்திகளும் வெவ்வேறு என்பது நேயர்கள் மனதில் ஆழமாய்ப் பதிய வைக்க வேண்டும் என்பது கொள்கை ரீதியில் எடுக்கப்பட்டுள்ள முடிவு. இதனால்தான் சன் டி.வியில் செய்தி வாசிப்பவர்கள் சன் நியூஸ் சானலில் செய்தி வாசிக்க அனுமதிக்கப்படுவதில்லை. (இப்போது ஆள் தட்டுப்பாடு காரணமாக, ஒரு சிலர் இரண்டும் வாசிக்கிறார்கள்)

அடுத்தது என்ன?

"தமிழைத் தொடர்ந்து, கன்னடத்தில் இருபத்து நாலு மணி நேர நியூஸ் சானல் ஆரம்பித்தாகி விட்டது. வரும் ஓணம் பண்டிகையிலிருந்து மலையாளத்திலும் முழு நேர நியூஸ் சானல் ஆரம்பிக்கப் போகிறோம்! அதனைத் தொடர்ந்து தெலுங்கில் ஒரு நியூஸ் சானல்."

"அப்புறம்?"

"வடக்கே போக வேண்டியதுதான்!"

— எஸ். சந்திரமௌலி

அட்டை வண்ணப்படம், பிற படங்கள்: **யோகா**

ம.தி.மு.க மாநாட்டை ஒட்டி எல். கணேசன் சிறப்புப் பேட்டி

மதிமுகவின் மாவட்ட மாநாடு ஈரோட்டில் ஜூலை ஒன்று, இரண்டு தேதிகளில் நடக்கிறது. இலங்கை இனப்பிரச்னையில் அதிக சர்ச்சைகள் கிளம்பியிருக்கும் இந்த நேரத்தில் கலைஞரும் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதால் அது கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது. மாநாடு குறித்தும் மதிமுகவின் தேர்தல் நிலைப்பாடுகள் குறித்தும் அக்கட்சியின்

குறிப்பாக, தமிழகத்தில் தீர்க்கப்பட வேண்டிய உடனடிப் பிரச்னைகள் குறித்து, ம.தி.மு.கவின் நிலைப்பாடு என்ன என்பதைத் தீர்மானங்கள் மூலம் அறிவிக்கவும் இந்த மாநாடு ஒரு வாய்ப்பாக அமையும்."

மாநாட்டிற்கு நிதி எங்கிருந்து வருகிறது?

"கட்சியில் நிதி குவிந்து கிடக்கவில்லை. மக்களிடம் வசூலித்துத்தான் மாநாட்டை நடத்தப் போகிறோம். அதுதான் உண்மை. கலைஞரின் ஒப்புதலைப் பெற்ற பிறகே

"யாரைக் கண்டும்

அவைத்தலைவர் எல். கணேசனைச் சந்தித்துக் கேட்டோம்:

இப்போதைய மாநாடு எதற்காக? ஏன் ஈரோட்டைத் தேர்வு செய்திருக்கிறீர்கள்?

"பெரியாரும், அண்ணாவும் இல்லாமல் திராவிட இயக்கம் இல்லை. எனவேதான் முதல் மாவட்ட மாநாட்டை காஞ்சியில் நடத்தினோம். இரண்டாவது மாநாட்டை பெரியார் பூமியில் நடத்துகிறோம். கழகத்தை மேலும் மேலும் வலுப்படுத்தவே மாநாடுகள்.

மாநாட்டுப் பணிகளை விரைவாகச் செய்து வருகிறோம். மொத்தம் இருபத்து இரண்டு லட்சம் தொண்டர்கள் கலந்து கொள்வார்கள். தி.மு.க. தொண்டர்களும் ஆர்வத்தோடு பங்கேற்கிறார்கள். மாநாட்டின் பொறுப்பு ஈரோடு மாவட்டச் செயலாளர் கணேசமூர்த்தியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது."

மாநாட்டுத் தீர்மானங்கள் குறித்த ஒரு முன்னோட்டம் தர முடியுமா?

"திராவிட இயக்கங்களின் அடிப்படை லட்சியங்களான மாநில சுயாட்சி, தேசிய ஆட்சி மொழி, தமிழ் வழிக்கல்வி போன்றவை குறித்துத் தீர்மானங்கள் இருக்கும். இவை போக, உடனடிப் பிரச்னைகள் குறித்த தீர்மானங்களுக்கு அதிக முக்கியத்துவம் தருவோம். குறிப்பாக, பெரியாறு பிரச்னை, காவிரி பிரச்னை போன்றவை இடம் பெறும். கொள்கைப் பிரச்னை என்று வருகிறபோது ஜாதி, மத, வருணாசிரமத்தை எதிர்த்து முதல் தீர்மானம் பாயும். தனித் தமிழ் ஈழம் தான் இலங்கை இனப் பிரச்னைக்கு ஒரே தீர்வு என்ற ம.தி.மு.கவின் உறுதியான கொள்கை வழித் தீர்மானமும் மாநாட்டில் அதிக முக்கியத்துவம் பெறும்."

சர்ச்சையைக் கிளப்பிய கலைஞரின் செக்கோஸ்லோவாக்யா அறிக்கையும் தனித்



தமிழ் ஈழத்தைத்தானே வற்புறுத்துகிறது?

''ஒரு போதும் இல்லை. கலைஞர் செக்கஸ்லோவாக்கியா போலத்தான் தீர்வு காண வேண்டும் என்று சொல்லவில்லை. அப்படியும் தீர்வு காணலாம். கூட்டாட்சியாகவும் இருக்கலாம் என்றார். ஆனால் கலைஞர் பூகம்பத்தைக் கிளப்புகிறார் என்று அள்ளி விடுகிறார்கள். ஆனால் நாங்கள் தடுமாறவில்லை. தெளிவாக இருக்கிறோம். கட்சி தொடங்கியபோது மதிமுகவின் செயல் திட்டத்தைப் புத்தகமாக வெளியிட்டோம்.

பயமில்லை!''

அதிலும் சரி, திருச்சி மாநாட்டிலும் சரி, ஈழம்தான் ஒரே தீர்வாக, நிரந்தரத் தீர்வாக இருக்க முடியும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம்.



அதே நேரம், விடுதலைப்புலிகள் தமிழ்நாட்டைக் களமாகக் கொண்டு போரிட வேண்டும் என்று நாங்கள் ஒருபோதும் சொல்லவில்லை. அதுவும் தனித்தமிழ் ஈழத்திற்குக் கொள்கை வழியாகத்தான் குரல் கொடுக்கிறோமே தவிர, ஆறு கோடி தமிழர்களில் அரைகோடி பேரை இலங்கை சென்று சிங்கள ராணுவத்தை எதிர்த்துப் போராடு எனத் தூண்டவில்லை. வங்காளதேசம் போல், இந்திய ராணுவத்தைக் கொண்டு ஈழத்தைப் பிரித்துக் கொடுங்கள் என்று இந்திய அரசிடம் கேட்கவில்லை. இன்னும் சொல்வதென்றால், நாங்கள் நிதிகூட வசூலித்து இலங்கைக்கு அனுப்பவில்லை. கொள்கை வழி நின்று, ஈழத் தமிழின அழிதலை எதிர்ப்பது எப்படி தேசத் துரோக

மாகும்?''

தமிழ் ஈழம் அமைந்தால், இங்கு தனித் தமிழ்நாடு கோரிக்கை மீண்டும் எழலாம் அல்லவா?

''இது அடிப்படையில்லாத கருத்து. இன்றைய நிலை என்ன? கார்கில் நிதியாக இருந்தாலும் தேசிய உணர்வாக இருந்தாலும் சரி இங்கே முன்னணியில் இருப்பது தமிழர்களாகிய நாம். ஈழத் தமிழர்களைப் போல நாம் ஒடுக்கப்படவில்லை. மனித உரிமை நசுக்கப்படவில்லை. இங்கே எல்லா உரிமையும் நமக்குக் கிடைக்கிறது. அப்புறம் நாம் பிரிவினை கேட்பது எப்படிச் சரியாகும்? மாறாக ஈழம் இந்தியாவுக்குப் பாதுகாப்பு அரணாக இருக்கும். இந்தியாவைத் தெற்கெல்லையில் வலுப்படுத்தும்.''

மதிமுக நடத்துவதாக இருந்த தமிழர் ஆதரவுப் பேரணியை ரத்து செய்ய, கலைஞர் கேட்டுக் கொண்டது தவிரவும் வேறு காரணம் உண்டா - குறிப்பாக, பயம்...?

''கலைஞர் மீது எங்களுக்குப் பாசம் உண்டு; மரியாதை உண்டு. ஆனால் பயம் இல்லை. கலைஞர் மட்டுமல்ல; தமிழ் ஈழப் பிரச்னையில் யாரைக் கண்டும் எங்களுக்கு பயமில்லை. பயப்படப் போவதும் இல்லை. அதே நேரம் ஈழப் பிரச்னையில் திமுகவும், மதிமுகவும் எதிரெதிர் திசைகளில் செயல்படுமானால் சந்திரிகாவுக்கு நல்ல வாய்ப்பாக அமைந்து விடுமே!''

திமுகவில் உட்கட்சி ஜனநாயகம் இல்லை என்று சொல்லித்தான் மதிமுக உருவானது. ஆனால் திமுகவுடன் வலுப்பட்டு வரும் உறவு தொண்டர்களின் உணர்வை பாதிக்கவில்லையா? தீக்குளித்து இறந்தவர்களின் தியாகம் விழலுக்கு இறைத்த நீரா?

''தலைமையின் உணர்வையும், கொள்கை வழி முடிவுகளையும் எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய அறிவார்ந்த தொண்டர்கள்தான் மதிமுகவில் இருக்கிறார்கள். ஒவ்வொரு கட்டத்திலும் தலைமையைச் சோதனை செய்து பார்ப்பவர்கள் தொண்டர்கள். கலைஞரை வைத்துத்தான் தி.மு.க என்றால் வைகோவை வைத்துத்தான் ம.தி.மு.க என்பதை நன்கு உணர்ந்தவர்கள் நாங்கள். ஆனால் கொள்கை அளவில் பல்வேறு பிரச்னைகளில் அடிப்படையிலேயே வேறுபடுகிறவர்களாகத்தான் இரு கட்சிகளும் இருக்கின்றன. தேர்தல் உடன்பாடு, கொள்கைகளை ஒருபோதும் சிதைப்பதில்லை.''

வரும் தேர்தலில் திமுக-மதிமுக கூட்டணி உறுதியாகி விட்ட நிலையில் இம்முறை எத்தனை தொகுதிகள் அதிகமாகக் கேட்பீர்கள்?

''அதிகம் கேட்பது எங்கள் உரிமை. கொடுப்பது கலைஞர் கையில் இருக்கிறது. இப்போதைக்கு திமுக-மதிமுக கூட்டணி உறுதி என்பதை மட்டும்தான் சொல்ல முடியும். திமுக தலைமையிலான கூட்டணிதான் தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வரும் என்பதும் உறுதியான ஒன்றுதான்.''

ஜெயலலிதாவுக்கு வாய்ப்புகள் அதிகரித்து வருவதாக வரும் தகவல்கள் பற்றி?


''பணத்தைக் கொண்டு கூட்டுகிற கூட்டம் ஒருபோதும் வோட்டாக மாறாது. தன்னை மட்டுமே கட்சியாக நினைத்துச் செயல்படும் ஜெயலலிதா மீதான ஊழல் வழக்குகளையும், தீர்ப்புகளையும் மக்கள் கவனமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தேர்தலுக்கு முன்பே ஜெயலலிதாவை மக்கள் புறக்கணித்து விடுவார்கள். இதுதான் நடக்கப் போகிறது.''

மதிமுக இதுவரை என்ன சாதித்திருக்கிறது?

''எதிர்க்கட்சியாக இருந்துகொண்டு எதையும் பெரிதாக

'**கா**லச்சுவடு' இதழ் அறக்கட்டளை, வரும் செப்டம்பர் 1,2,3 தேதிகளில் சென்னையில் 'தமிழ் இனி - 2000' என்ற ஒரு பிரம்மாண்ட மாநாடு நடத்தப் போகிறது. நாவல், சிறுகதை, கவிதைத் துறைகளில் இது வரை நிகழ்ந்துள்ள சாதனைகளையும் இனி செய்ய வேண்டியவை பற்றியும் தீவிரமாக அலசவிருக்கிறது இந்த மாநாடு. இதுமட்டுமல்ல; இந்த மாநாட்டில் பல முக்கியமான புத்தகங்களும் வெளியிடப்பட இருக்கின்றன.

தகழி சிவசங்கரன் பிள்ளையின் 'தோட்டியின் மகன்' நாவல், தமிழில் வரப் போகிறது. மொழிபெயர்த்திருப்பவர் சுந்தர ராம



• சுந்தர ராமசாமி

சாதித்து விட முடியாது. ஆனால் ஒவ்வொரு பிரச்னைக்கும் மக்கள் மத்தியில் ஏற்படும் பொதுக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு அதற்காகப் போராடியிருக் கிறோம். அரசுத் தரப்பிலும், மீடியாவிலும் தாக்கத்தை ஏற்படுத்த முயற்சி செய்கிறோம். இது போன்ற பிளாட்ஃபார்ம் அமைப்பதன் மூலம்தான் தீர்வை நோக்கி நகர முடியும். அந்த வகையில் இட ஒதுக்கீடு, காவிரிப் பிரச்னை போன்றவற்றுக்காக டெல்லி வரை சென்று போராடி இருக்கிறோம். இதனால் மக்கள் மத்தியில் எங்களுக்குச் செல்வாக்கு வளர்ந்து கொண்டே இருக்கிறது. இன்று தமிழகத்தில் உள்ள எண்பது சதவிகித கிரா மங்களில் கிளைக் கழகங்கள் செயல்படுகின் றன. வைகோ மற்ற தலைவர்களைவிட இள வயதினராய் இருப்பதால் அதிக தூரம் சுற் றுப்பயணம் செய்ய முடிகிறது. ஈரோடு மாநாடு முடிந்ததும் கழக நிர்வாகிகள் தேர் தல், கிராமம் தொடங்கி, மாவட்டம் வரை நடைபெற இருக்கிறது."

இந்தியாவைப் பொறுத்தவரை விடு தலைப்புலிகள் இயக்கம் ஒரு தடை செய் யப்பட்ட, தீவிரவாத அமைப்பு. இதை நீங்கள் ஆதரிக்கலாமா?

"உயிரைத் துறந்து, ஈழத்தமிழ் மக்களுக்காக அங்கு போராட வேறு யார் இருக்கிறார்கள்? தந்தை செல்வா தலை மையில் அறவழியில் போராடியவர்களுக்கு என்ன கிடைத்தது? 1983 இனக்கலவரத்தில் ஆறாக ஓடிய தமிழ் ரத்தத்தைக் கண்டு பொறுக்க முடியாமல், எல்லா கதவுகளும் அடைக்கப்பட்ட பிறகுதானே புலிகள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலை வந்தது? இன்று பிரபாகரனை விட்டால் வேறு கதி யில்லாமல் ஈழ மக்கள் இருக்கிறார்கள். புலி களின் தியாகமும், உறுதியும் எங்களை வியக்க வைக்கிறது. எனவேதான் அவர் களை ஆதரிக்கிறோம்."

"அமைதி விரும்பிகளையும் மிதவாதி களையும் வஞ்சமாகக் கொல்வது வீரமா?"

"புரட்சி என்று வந்துவிட்டால் இதெல் லாம் நடந்தே தீரும். உலக சரித்திரத்தை யெல்லாம் ஆராய்ந்தால் இது தெரியும்."

சந்திப்பு: **ஆர்.சி. ஜெயந்தன்**
படம்: **ஸ்ரீஹரி**


• வசந்தி தேவி

தமிழ் இனி – 2000

சாமி! க.நா. தமது 19வது வயதிலேயே இதை மொழி
பெயர்த்து வைத்திருந்தாராம். அப்போது இடதுசாரிச்
சிந்தனையாளராக இருந்தார் என்பதும். படைப்பின்
மூலம் சமூக மாற்றங்களை நிகழ்த்த முடியும் என்ற நம்
பிக்கைக் கொண்டிருந்தார் என்பதுமே மொழி பெயர்ப்
பில் ஈடுபடக் காரணங்கள். ஆனால் அன்றைக்கு அதை
வெளியிடும் சூழ்நிலை சாதகமாக இருக்கவில்லை. இப்
போது. அந்தப் புத்தகத்தைக் 'காலச்சுவடு' வெளியிட
இருக்கிறது என்றார் சுந்தர ராமசாமி.

இரண்டாவது நூல், சுந்தர ராமசாமியும், மனோன்
மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழக முன்னாள் துணை
வேந்தர் வசந்திதேவியும் பல மணி நேரங்கள், கல்வி பற்றி
நிகழ்த்திய நீண்ட உரையாடல்களின் தொகுப்பு. கல்வி பற்றி.
இதுவரை இப்படி ஒரு நூல் வந்திருக்குமா என்று தாமே
வியப்பதாகவும் குறிப்பிட்டார். பிரச்னைகள் மட்டுமின்றி,
நடைமுறை சாத்தியங்களும் இந்தப் புத்தகத்தில் விவாதிக்கப்
பட்டிருக்கின்றனவாம்.

மூன்றாவது புத்தகம். சுந்தர ராமசாமியின் அனைத்து சிறு
கதைகள் அடங்கிய தொகுப்பு. இது தவிர. புதுமைப்பித்தனின்
அனைத்து சிறுகதைகளும் அடங்கிய
தொகுப்பும் அம்பையின் சிறுகதைகளும் கூட
வெளிவர உள்ளது.

'காலச்சுவடு' காலாண்டு இதழ் இனி இரு
மாத இதழாக ஜூலை முதல் வெளிவரும்
என்றார் மனுஷ்யபுத்திரன்.

'தமிழ் இனி – 2000' மாநாடு நடத்த
மத்திய – மாநில அரசுகளிடம் நிதி உதவி
கேட்டிருப்பதை 'காலச்சுவடு' பதிப்பாளர்
கண்ணன் தெரிவித்தார்.

மாநாட்டுக்குச் சுமார் 12 லட்ச ரூபாய்
செலவாகும் என எதிர்பார்க்கிறார்கள்.

வள்ளுவர், பாரதி விழாக்கள் நடத்து
வதோடு, கோமல் சுவாமிநாதன் ஆசிரிய
ராக இருந்தவரை 'சுபமங்களா'வையும்
நடத்த உதவிய ஸ்ரீராம் சிட்ஸ் உயர் அதி
காரி கண்ணன், 'தமிழ் இனி–2000'
மாநாட்டுக்கும் தம் நிறுவனம் உதவும்
என்றார்.

— சித்தார்த்



1 கானல்


அமராவதி ஆற்றில் உற்சாகம் புயல் போல வீசிக் கொண்டிருந்தது. நீர் வரத்துக் குறைந்து ஓடையைப் போல ஓடுவதால் மணல் பரப்பு கடற்கரை போலவும், பாலைவனம் போலவும் இருக்கிறது. இரவில் நல்ல நிலா. அமர்ந்திருந்த ஐவரும் இப்போதுதான் வேட்டிக்கு வந்தவர்கள் போல இருந்தார்கள். +2 மாணவர்கள். பார்த்திபன், பிரகாஷ், மோகன் குமார மங்கலம், லோக நாதன், அன்வர் அலி.

தலைக்கு மேலாகப் பறந்த ஒற்றைக் காகம் வெள்ளை நிறத்தில் தெரிந்தது. மணி இரவு பத்தரைக்கு மேல் ஆகி விட்டது. அருகிலேயே தான் பார்த்திபனின் வீடு. அங்கே சென்று உறங்குவதாய்த் திட்டம். யாருக்கும் அங்கு போகவும் விருப்பமில்லை. விடிய விடிய பேசிக் கொண்டிருந்துவிட்டு அப்படியே ஸ்கூலுக்குப் போய் 'ஏற்பாடு'களைச் செய்ய வேண்டும் என்பது மாதிரியான துடிப்பில் இருந்தார்கள்.

உற்சாகத்துக்குக் காரணம் ஸ்கூலுக்குப் போவதிலில்லை. வரும் திங்கட்கிழமை 'ஸ்டிரைக்' அடிக்க வேண்டும். ஸ்டிரைக் செய்ய வலுவான காரணம் ஏதும் உண்டா என யோசித்ததில் பக்கம் பாட்டிலுள்ள பள்ளப்பட்டி, அரவக்குறிச்சி, வெள்ன கோவில், மூலனூர் எல்லா ஸ்கூலும் ஸ்டிரைக் அடித்தாகி விட்டது. ஏதாவது காரணத்தை முன்னிட்டு, நாம் இன்னும் சும்மாயிருந்தால் என்னதான் ஆவது மரியாதை? ஆசிரியர்களைக் கண்டித்து ஒரு ஸ்டிரைக் அடிக்காவிட்டால்அதிகார வரம்புக்கு வரம்பில்லாது போய்விடும்.

பதினொன்றாம் வகுப்பு இளங்கோ பத்தாம் வகுப்பு காயத்ரிக்கு லவ் லெட்டர் கொடுத்ததை ஹெச்.எம். அவ்வளவு கண்டித்திருக்க வேண்டியதில்லை. அதைவிட அவர் உயரம் உள்ள அவனை அடித்திருக்க வேண்டியதில்லை. இளங்கோவை காயத்ரியே அடிக்காத போது எச்.எம். ஏன் அடிக்க வேண்டும்! மாணவர்கள் மத்தியில் நாளைக்கு நமக்கும் இதே

தெரு



'மாத்து'தான் என்ற எண்ணம் உருவாகி அது வன்மமான பகைமையைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தது. பள்ளியின் மேல். பன்னிரண்டாம் வகுப்பின் 'ஏ' பிரிவு மாணவர்களான ஆற்றில் கண்ட ஐவரும் ஸ்டிரைக் திட்டத்திற்கு வந்தாயிற்று. மாணவர்களை மிகவும் பாதித்த, பாதிக்கிற சில நிகழ்ச்சிகளையும் நிகழ்வு முறைகளையும் கூறலாம்.

காணாத இடத்தில் 'மேக்னெட் பெல்' என்றறியப்பட்ட காந்தாமணி டீச்சர். அவரது பாடப் பிரிவு வேளையின் போது 10-ஏ ராமலிங்கம் கெட்ட புத்தகம் படித்துக் கொண்டிருந்ததைக் கையும் மெய்யுமாகப் பிடித்து விட்டார். குணம் மணமாகக் கண்டித்திருக்கலாம் - சுமுகமாக, கண்டும் காணாதது போல விட்டுத் தொலைத்திருக்கலாம். அனைத்து மாணவ, மாணவியர் முன்னிலும் வைத்து அவமானம் மீதூரும் அளவு கணைகளைச் செலுத்தினார்.

வாழ்வின் பாவ மன்னிப்பற்ற குற்றத்தைத் தான் புரிந்து விட்டதாக எண்ணி மறுகி நான்கு தூக்க மாத்திரைகளால் தன் குறுவாழ்வை அஸ்தமிக்கச் செய்ய முயற்சித்தான். தப்பித்து விட்டான். மரணத்துக்கு வந்தது தூக்கத்தோடு போனது.

நூலகம். பன்னீராயிரம் புத்தகங்களும் அதற்குத் துணையாக நூலகரும் உறங்கிக் கொண்டிருந்தனர். ஆசிரியர்கள் தாம் படிக்க வேண்டிய அவசியமில்லை. மாணவர்கள் படிக்க வேண்டாமா! அன்றைக்கு பார்த்திபன் சென்று, 'காவல்கரின் சன்னி டேய்ஸ்' புத்தகம் இருக்கிறதா எனக் கேட்க, நூலகர் உண்டா இல்லையா எனச் சொல்லாமல் 'அது இங்கிலீஷ் புத்தகமாச்சே' எனக் கேட்டிருக்கிறார்.

இங்கிலீஷ் என்ன சீனம், ஜப்பான் - எந்த மொழியிலிருந்தாலும் எடுத்துக் தா

க.சீ. சிவகுமார்

வேண்டியதுதானே. ஆங்கிலத்தை மறுதலிக்கிற வேலையை இங்கிலீஷ் வாத்தியார் மட்டும் பார்த்தாலே போதும். பொருட் பால் விளக்கம், அப்பர் பாடல்கள் என பேப்பரும் அட்டையும் ஒரே கனமுள்ள ஐந்தாறு புத்தகங்களை டேபிளில் பரத்திப் போட்டு விடுவார். பன்னெடுங்காலமாக நூலகத்தின் பயன்பாடுள்ள புத்தகங்களாய் அவையே வழங்கப்பட்டும், அவற்றின் கனம் குறைந்த அட்டை கூடக் கிழியவில்லை. சிறப்புறப் பாதுகாக்கிறார் நூல்களை, நூலகர்.

ஆங்கில ஆசிரியர் நாகராஜன், இனிஷியலுடன் சேர்த்து கே.என். என்று அறியப்படுகிறார். அவரைப் போன்ற இன்னும் பல மகான்கள் தோன்றினால்தான் ஆங்கில மோகத்தைக் கொல்ல முடியும். உண்மையில் அவர் தாவரவியல் ஆசிரியராக இருந்திருக்க வேண்டியவர். மலர்ப் பாதுகாப்பு, மரப் பாதுகாப்பு போன்றவற்றில் அக்கறை செலுத்தி வந்தார். மரப்பாதுகாப்புத் திறனுக்கு ஒரு எ.கா. உண்டு. ஸ்கூல் மைதானத்தின் விளிம்புகளில் பல குழிகள் வெட்டி, வேப்பங்கன்று நடப்பட்டன. தொடர்ந்த பராமரிப்பில் அவை செழித்தும் வளர்ந்தன. மந்திரிகள் யாரும் மரம் நடும் வைபவத்தைத் துவக்கி வைக்கவில்லையாதலால் அவை மகிழ்வுடன் வளர்ந்தன. மாணவர்கள் அனைவரும் வள்ளலாரைப் போன்ற மனநிலையில் இருக்கவில்லை. திராட்சை நிறமுள்ள கொழுந்திலைகளை அதன் குளிர்த் தளதளப்பைக் கண்ட சிலர் அதைக் கொய்து போட்டனர். இப்படி ஒரு படையெடுப்பைக் கண்ணுற்ற கே.என். அடுத்த நாள் வகுப்புகள்தோறும் விசிட் செய்தார்.

"அருமை மாணவர்களே...!" எனத் துவங்கி மரம் வளர்த்தால் மழைபொழியும் என்ற அறிவியல் உண்மையில் தொடங்கி பல விஷயங்களைப் பேசி விட்டு இறுதியாக, "அதில் ஒரு குச்சியை ஒடிப்பது எனது விரலை ஒடிப்பதற்குச் சமமாகும்" என்றார். இந்த ஓவர் செண்டிமெண்டாகப் பட்டது. பசுமை இயக்கத்துக்கு எதிராகத் திரும்பி விட்டது. பேசிக்கொண்டே நடக்கிற மாணவன் திடீரென, "டேய்... நான் கே.என்., விரலை ஒடிக்கப் போகிறேன்" எனச் சூளுரைத்து விட்டு இளம் மரத்தின் குச்சிகளை ஒடிக்க ஆரம்பிக்க, இரண்டு நாளில் கணிசமான மரக்கன்றுகள் மொட்டையாகின.



"கட்சி சொத்தை விற்க தலைவருக்கு அதிகாரம் தந்தது வம்பாப் போச்சு!"
"ஏன்?"
"ஆயிரம் தொண்டர்களை வேற கட்சிக்கு விலை பேசியிருக்கார்!"
– அம்பை தேவா

அவரோ மாணவர்களை மிகவும் நம்புகிறவராகவே இருந்தார். வகுப்புகளில் பொதுவாக 'இங்க் பாட்டில்' வாங்கிப் போட்டு அலமாரியில் அதற்குப் பக்கத்திலேயே காலி சாக்பீஸ் பெட்டி ஒன்றை வைக்குமாறு வகுப்புத் தலைவர்களிடம் ஆணையிட்டார். இங்கைப் பேனாவில் ஊற்றிக் கொண்டு காசை 'சாக்' பெட்டியில் போட்டு விட வேண்டியது. பரிசோதனை முயற்சியின் உச்சம் இது. அதில் ஒன்றரை ரூபாயை விட அதிகம் சேர்த்தால் கண்ணுக்குத் தெரியாத மாயக் கரத்தை நீட்டி அதை லபக்கரிக்கிற வல்லவர்கள் இருந்தார்கள். அந்த மாயக்கரங்கள் நடு விரலுக்கும் ஆட்காட்டி விரலுக்குமிடையே சிகரெட்டைப் பிடிக்கத் தெரிந்த கரங்களாயுமிருந்தன. நீல இங்க்கை வெள்ளை சிகரெட்டாய் மாற்றுகிற விந்தை.

தங்களுக்கும் தங்கள் உணர்வுகளுக்கும் மிக எதிரானது என மாணவர்கள் எண்ணும்படியான 'பாதுகாப்பு வளைய'த் திட்டத்தை உண்டாக்கியது கே. என்.தான். இளங்கோவனின் காதல் கடிதத்துக்குப் பின் அதையே காரணங்காட்டி பாதுகாப்பு வளையத்துக்கு ஹெச்.எம்.மிடம் ஒப்புதல் வாங்கினார். இந்த வளைய ஏற்பாடு, +1, +2 மாணவிகளுக்கு மட்டும் உண்டானது.

மாணவிகளுக்கென தனி கட்டடமாக ஒரு கோடவுன் ஒதுக்கப்பட்டது. அதில் நெருக்கி நூறு மாணவிகள் இருந்தனர். பழைய மீட்டிங் ஹால்தான் அது. அங்கிருந்து பார்த்தால், +1, +2வில் தலா நான்கு பிரிவாக எட்டு வகுப்பறைகளிலும் ஆசிரியர்கள் நுழைவது காட்சிக்குத் தெரியும். ஆகவே அந்தக் கட்டடம் கண்காணிப்புக் கூண்டு போலவும் பக்தவச்சலம் முதல் அமைச்சக் காலத்திலேயே இத்திட்டத்தின் பொருட்டே கட்டப்பட்டது போலவும் இருந்தது.

ஆசிரியர்கள் வகுப்பறைக்குள் நுழைவதைப் பார்த்த பின்னரே மாணவிகள் கிளம்பி வகுப்புக்கு வருவார்கள். மணி அடித்து வகுப்பு முடிந்ததும் அவர்களை கோடவுனுக்கு அனுப்பி விட்டு ஆசிரியர் அடுத்த வகுப்புக்குச்

செல்வர். இந்தப் புதிய ஏற்பாட்டினால் மாணவிகள் நாள் ஒன்றுக்குப் பதினாலு சிங்கிள் அதாவது ஏழு டிரிப் அடிக்க வேண்டியதாயிற்று. ஆசிரியரைப் பார்த்து விட்டுப் புறப்பட்டு வரும் அவசரத்தில் புத்தகத்தை மறந்து விட்டு வந்தால் 'கட்' டிரிப் வேறு அடிக்க வேண்டும்.

மாணவர்கள் ஸ்டிரைக் அடிக்க விரும்புவதற்கு ஆதார மையம் இதுவாக இருக்கலாம்.

பெண்களின் கோட்டவுன் முறை பற்றி பேங்க் மேனேஜரின் வீட்டில் வைத்து அனிதாவையும் ஜோதியையும் பிரகாஷும் பார்த்திபனும் பேட்டி கண்டனர். இது சம்பந்தமாக ஸ்டிரைக் அடிக்க எண்ணம் இருப்பதாகவும் பார்த்திபன் சொன்னான்.

ஸ்பைடர் லில்லிப் பூந்தொட்டியருகே நின்றிருந்த அனிதா, "நீங்க வேண்ணா ஸ்டிரைக் பண்ணுங்க" என்றாள்.

"இதை ஒரு காரணம்னு சொல்லி நாம ஸ்டிரைக் பண்ண முடியாது" என்றாள் ஜோதி. தாக்கங்களின் குழந்தை.

பிரகாஷ், "வேற என்ன? ஒவ்வொருத்தரையும் ரூமுல போட்டு அடைச்சு வச்சிடறதா?" என்றான் கோபமாக.

"நீ சொல்ற மாதிரி அது ஜெயிலெல்லாம் கிடையாது. அங்கே நாங்க எவ்வளவு ஃப்ரியா இருக்கம் தெரியுமா? இது ரொம்ப வசதி" என்றாள், ஜோதி.

மதிய உணவை உரிமைச் சண்டையிட்டுப் பங்குபோட்டுக் கொள்வது. ஆசிரியர் வராத பீரியட் எனத் தெரிந்தால் ஒய்யாரமாகப் படுத்துக் கிடப்பது. கிடையை விட உயரமான தளத்தில் காலை வைத்துக் கொள்வது. தோழியர் மடியில் தலைவைத்துத் தூங்குவது. நெடுங் கூந்தற்காரிகளின் முடியை இழுத்து விளையாடுவது. நொடியில் பின்னலைக் கலைத்து விடுவது. பிறகு தறி ஓட்டுகிறவரின் லாகவத்தோடு இழை இழையாய் நிமிடக்கணக்கில் பின்னிச் சேர்ப்பது. இரண்டடுக்கு டிஃபன் பாக்ஸில் மேல் தட்டில் இரண்டு சென்டி மீட்டர் தண்ணீர் ஊற்றிப் போட்டு வைத்த ரோஜாவை கலைந்து சீர்பெற்ற கூந்தலில் சூடிச் சிலிர்ப்பது எனப் பல காரியங்களை உத்தேசமாக்கிச் சொன்னாள். சமயங்களில் உலகம் பலருக்கு நீதியான ஒன்றைச் செய்கிறது.

வந்து இருந்தாலும், வந்து போனாலும் பக்கெட் கணக்கிலான அன்புக்கு மட்டும் பஞ்சமிருக்காது இருபாலருக்கும் இடையே.

"ஆனா ஸ்டிரைக் பண்ணியே ஆகணும் ஜோதி" என்றான் பார்த்திபன்.

அனிதா சொன்ன பிறகு ஸ்டிரைக் அடிக்காமல் எப்படி? ஸ்டிரைக் பற்றிப் பேசிப் பேசியே ஆர்வம் அதிகமாகி விட்டது. ஸ்டிரைக் என்றால் என்னதான் என்று பார்த்து விட வேண்டும். தவிர பள்ளியும் நூறுபதாண்டு வரலாற்றில் ஸ்டிரைக்கைச் சந்திக்கவேயில்லை ஒருமுறை கூட...

எதிர்பார்த்த லீவுகளை மட்டும் ஏன் கரும் பலகைகளும், பெஞ்சுகளும், சாக்பீஸ்களும் சந்திக்க வேண்டும்? அந்த எதிர்பாராத வெறுமை பள்ளிக்கு எதைக் கற்பிக்கும்?

கோடை விடுமுறையின்போது மைதானத்தில் புரளும் கானலை வேடிக்கை பார்த்துக் கொண்டு 'ஹோ'வென விரிந்து பிரியவார்த்துகளின்றி ஏங்கிக் கொண்டிருக்கிறது பள்ளி. வருடங்களின் பழக்கத்தில் அதன் சுவரினுள் கற்கள் ஏதேனும் ஓர் உணர்வைத் தன்னுள் தேரையைப் போல வைத்திருக்கும்.

இதோ... இதோ... வந்து என் பெஞ்சில் அமர்வார்கள் என எதிர்பார்த்த ஒரு நிமிடத்தில் மாணவர்கள் வெளியேறி எதிர்பாராத



''அவர் பாட ஆரம்பிச்சா சங்கீத சபா லோக்சபா ஆயிடுமா...எப்படி?''

''ரொம்ப பேரு வெளிநடப்பு செஞ்சிடுவாங்க!''

– தஞ்சை தாமு

வெறுமையைப் பரிசளித்து விட, தேரையின் இதயத்தில் ஒரு செல் மரிக்கிறது. மரித்த அதன் செல்லைச் சுற்றி தடவலின் அசைவு முத்தங்கள். நாளை வருவார்கள் என் கண்ணே. நம் கண்ணான கண்மணிகள். பின்னும் மரித்த ஒரு செல் உயிர்க்கிறது காலத்தின் ரசவாதத்தில்.

ஸ்டிரைக்குக்கான முஸ்தீபு பூரணமாக உருக்கொண்டது வேதியியல் வகுப்பில்தான். உடனடியாக செய்து முடிக்க வேண்டிய சாகசம் அது என்ற எண்ணத்தை உருவாக்கி ஸ்டிரைக் தன்பால் ஈர்த்துக் கொண்டிருந்தது. சைக்ளோட்ரான் வினை போல சுழன்று சுழன்று இடையில் தகரும் இடைவெளிகளால் வேகம் கூடி, கடைசியில் உட்கருவில் ஒரு தாக்கு. எட்டுத் திக்கும் மத யானையென பிளிறிப் படர்கிறது அணு வெடிப்பு. போட்டுத் தாக்கு.

"அடுத்த வாரத்திலிருந்து சனிக்கிழமை ஸ்பெஷல் கிளாஸ் வச்சுக்கலாமா?" என்று கேட்டார் கெமிஸ்ட்ரி ஆறுமுகம்.

"சார், சனிக்கிழமை வேணாம் சார்" அன்வர் அலிதான் அப்படிச் சொன்னான். அவன் சனிக்கிழமை துணி துவைக்கவும் இஸ்திரி போடவும் ஒதுக்கியிருந்தான்.

அவனுக்காக ஞாயிற்றுக்கிழமையெல்லாம் ஸ்பெஷல் கிளாஸ் வைக்க முடியுமா? உலகில் நாட்களை அதிகப்படுத்தி அங்கள், பெனி என எட்டாவது, ஒன்பதாவது கிழமைகளை உற்பத்தி செய்தல் நல்லது. ஸ்பெஷல் கிளாஸ் வைத்து கல்வியான கல்வி கற்று, கற்றுத் துறை போக வசதியாயிருக்கும். அன்வர் அலியின் வாக்கையே ஆண் குரலின் மொத்தத் தீர்மானமாகவும் தேவ வாக்காகவும் எடுத்துக் கொண்டு ஆறுமுகம்.



"என்னங்க இந்த வருஷம் நான் புடைவையே எதுவும் எடுத்துக்கலை..."

"வெரிகுட், இப்படித்தான் சிக்கனமா இருக்கணும்."

"புடைவைக்குப் பதிலா பத்து சுடிதார், இருபது நைட்டி எடுத்துக்கறேங்க..."

– வந்தவாசி பா. ஜெயக்குமார்

"அப்படின்னா ஸ்பெஷல் கிளாஸுக்கு கேர்ள்ஸ் மட்டும் வாங்க. பையங்க வேணாம்" என்றார்.

ஏன் சார்? என ஒரு பயலும் கேட்கவில்லை. விட்டது 'சனி' என கம்மென்றிருந்து விட்டனர். ஆனாலும் பெண்களுக்கு மட்டும் என்ன தனி வகுப்பு? என்ற கேள்வி அரித்தெடுத்து பின் குடையவும் ஆரம்பித்து விட்டது. ஒரு ஸ்பெஷல் கிளாஸ் வேறு நடந்து முடிந்து விட்டது. இனி பொறுப்பதில்லை. திட்டமிட்ட தாக்குதலாய் ஆசிரியர்களின் அராஜகப் போக்கு எதுவானாலும் கண்டித்து விட வேண்டும். முதல் உபாயம் ஸ்டிரைக்.

நெடுநேரம் அமர்ந்திருந்ததால் இரவிலும் அமராவதியின் குளிர் மணல் இருக்கைக் குழியில் வெப்பம் கொண்டிருக்கிறது.

"ஸ்டிரைக்குக்கு நோட்டிஸ் அடிப்பமா?" பார்த்திபனிடம் கேட்டான் அன்வர்.

"தங்கு அச்சகத்துல அடிச்சிட வேண்டியதுதான். போற வர்ற பஸ்ஸுல எல்லாம் ஒட்டணும். ஊரெல்லாம் வீசணும். கரூர் வரைக்கும் எங்கே கேட்டாலும் சொல்லணும். நம்ம ஸ்கூல் ஸ்டிரைக்கை" என்றான். விழிகள் விரிந்து பளபளத்ததில் இரவில் நத்தை ஓடு போல இருந்தன கண்கள். ஸ்டிரைக்கை அவன் 'சந்தனக் கூடு' திருவிழா போல எண்ணி எண்ணிப் புளகத்திலிருந்தான்.

"நோட்டீஸ் சரி. ஸ்டிரைக்குக்குத் தமிழில என்ன?"

லட்சம் பொற்கழஞ்சு மதிப்புள்ள கேள்வி கேட்கப்பட்டாயிற்று.

"ஐயய்யோ... ஆமா... ஸ்டிரைக்னா வேலை நிறுத்தம்."

"இதென்ன மலைக்கோவிலூர் மில்லாடா வேலை நிறுத்தம்னு சொல்ல."

"அப்படின்னா என்ன சொல்றது?"

"அதெல்லாம் போகட்டும். படிக்கிறது ஒரு வேலையா?"

"பின்ன என்ன?"

"படிக்கிறது ஒரு வேலைன்னா... சம்பளம்?"

"ஆஹ்ஹா... நீங்க கிழிக்கிற கிழிக்கு சம்பளம் வேறயாடா?"

"படிச்சு முடிச்சதுக்கப்புறம்தான் சம்பளமும் வேலையும் கிடைக்கப் போறதில்ல. படிக்கும்போதாவது சம்பளம் குடுத்தா என்ன கவர்மெண்டுல?"

மோகனை இவ்வளவு தூரம் சம்பளக் கவலை சூழ்ந்திருக்க வேண்டியதில்லை.

"சரி மேட்டருக்கு வாங்கப்பா."


உரையாடல் முடிவில் தமிழின் போதாமையால் 'ஸ்டிரைக்' என்றே சொல்லிவிட முடிவாயிற்று. பொருளாதாரக் காரணங்களால் நோட்டீஸ் அடிப்பதும் இல்லை என்றாகி விட்டது. பதிலாக ஸ்டிரைக்கை பெரிய ஊர்வலம் நடத்தி ஊர்வலத்தின் முடிவில் அறிவிப்பதாக திட்டம் ஆனது.

மாணவர்கள் ஸ்டிரைக்குக்கான காரணத்தை விலாவாரியாகப் புரிந்து கொள்ளும்படி எடுத்துரைத்தபின் அவர்கள் ஸ்டிரைக் செய்ததன் மீதான நியாயப்பாட்டின் கர்வத்துடன் வீடு திரும்பலாம். அல்லது ஏற்கெனவே குறிவைத்தபடி சினிமாவுக்கோ வேறு எங்காவதோ செல்லலாம்.

ஐந்து பேரும் பார்த்திபனின் வீடு நோக்கி நடந்தார்கள்.

ஆனால் அடுத்த திங்கட்கிழமை - அதாவது ஸ்டிரைக் தினத்தில் லோகநாதன் சரித்திரத்தையே இருட்டடிப்பு செய்தான்.

(தொடரும்)





2000 ஜூன் 25
விக்ரம ஆனி 11
மலர் : 58
இதழ் : 48

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



ஜஸ்வந்த் சிங்கின் ஜாலி ட்ரிப்!

நூறு மில்லியன் டாலர் கடன்! 'நிச்சயமாக ராணுவ உபகரணங்களுக்கு அதில் ஒரு துளி கூட செலவிடப்படாது' என்று இலங்கை அரசு கூறாவிட்டாலும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரே முந்திக் கொண்டு கூறிவிட்டார். கடனுதவியை முதலில் எதிர்த்த வைகோ கூட பிரதமர், உயர் அதிகாரிகள் முன்னிலையில் அளிக்கப்பட்ட விளக்கத்தைக் கேட்டுத் திருப்தியடைந்துவிட்டார்!

கடனாகத் தரப்படும் தொகை நூறு மில்லியன் இந்திய ரூபாயல்ல; நூறு மில்லியன் டாலர்! அப்படியிருக்க அதை இலங்கை எங்கே, எப்படி செலவு செய்கிறது என்பதைக் கண்காணிப்பது சாத்தியமில்லை. இந்திய நிதியுதவி, நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக ராணுவ தளவாடங்களுக்குச் செலவிடப்படுவதைத் தடுக்க முடியாது. உதாரணமாக, இந்தியா வழங்க முன்வரும் தொகைக்கு அத்தியாவசியப் பொருட்கள் வாங்கப்பட்டாலும், அதன் விளைவாக மிச்சமாகக்கூடிய தொகை ராணுவ தளவாடங்களுக்கு திசைதிருப்பப் படலாம்.

மனிதாபிமான நோக்கில் உதவி அளிக்கப்படுகிறது எனில், அது பணமாக அன்றி பண்டங்கள் வடிவில் கூடத் தரப்பட்டிருக்கலாம்.




ஜஸ்வந்த் சிங்கின் இலங்கை விஜயமும் கடனுதவி அறிவிப்பும் சந்திரிகாவின் கரங்களைத் தாற்காலிகமாக பலப்படுத்த உதவியிருக்கலாமேயொழிய, இலங்கை யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரவோ, அங்கே நீடிக்கும் தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காணவோ எந்தவிதத்திலும் உதவவில்லை.

யாழ்ப்பாணத்தில் யுத்தம் அடங்கிப் போயிருக்கிற இத்தருணத்தில் புலிகளையும் இதர தமிழர் அமைப்புகளையும் பேச்சு வார்த்தையில் ஈடுபடுத்தி, பிரச்னைக்கு அரசியல்ரீதியான தொரு தீர்வைக் கண்டாக வேண்டும் என்று இலங்கை அரசிடம் இந்திய அரசு அடித்துச் சொல்லி வற்புறுத்தியிருக்கலாம். அதற்கான ஒரு நல்ல சந்தர்ப்பத்தைக் கைநழுவ விட்டு விட்டு நூறு மில்லியன் டாலர் உதவியை மட்டும் உத்தரவாதம் செய்து வந்திருக்கிறார் அமைச்சர்.

நூறு மில்லியன் டாலர் என்பது இந்தியாவுக்குக் கணிசமான பளு. ஏற்கெனவே நம் அயல்நாட்டு வர்த்தகம் மகிழ்ச்சி கொள்ளும் நிலையில் இல்லை. மனிதாபிமான அடிப்படையில் உதவும்போது இவ்வாறு கணக்குப் பார்க்கக்கூடாதுதான். ஆனால், இலங்கையில் மக்கள் அவதியுறுவது இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட பாதிப்பு அல்ல. இனவெறியால் முளைத்த பிரச்னை, இன்று வறட்டுப் பிடிவாதத்தாலும் குருட்டுத் தீவிரவாதத்தாலும் சிக்கலுற்று, சராசரி மக்களுக்குச் சொல்லொணாத் துயரை ஏற்படுத்தி வருகிறது.

பிடிவாதமும் தீவிரவாதமும் ஒருங்கே கைவிடப்பட வேண்டும் என்று இந்தியத் தரப்பில் உலகறிய வற்புறுத்தல் அறிக்கை தரப்பட்டிருக்க வேண்டும். இலங்கை அரசு தமிழர்களுக்கு என்னென்ன உரிமைகளை எந்த காலகட்டத்துக்குள் எந்த முறையில் தரவிருக்கிறது என்பது



பற்றிய விரிவான அறிக்கையும் சந்திரிகா அரசிடம் வற்புறுத்திப் பெறப்பட்டிருக்க வேண்டும். இலங்கை அரசு தமிழர்களுக்குச் சம உரிமைகள் பிரகடனப்படுத்திய பிறகு புலிகளின் வன்முறை தொடருமாயின், அந்த இயக்கம் அனுதாபம் இழந்து அர்த்தமற்றுப் போகும். இலங்கை அரசும் அந்நாட்டின் இதர கட்சித் தலைவர்களும் கௌரவம் பாராமல் செயல்பட வேண்டிய காலகட்டம் இது என்பதை ஜஸ்வந்த் சிங் அடித்துச் சொல்லியிருப்பாரேயானால், இந்தியாவின் மதிப்பு உயர்ந்திருக்கும்; சந்திரிகாவின் பொறுப்பு அதிகரித்திருக்கும்; இலங்கைத் தமிழர்களுக்கும் இந்திய, இலங்கை அரசுகளிடம் நம்பிக்கை ஏற்பட்டிருக்கும்.

'இலங்கையின் உள்நாட்டுப் பிரச்னையில் நாம் தலையிட முடியாது' என்று ஒரு பக்கம் பிரகடனப்படுத்திவிட்டு, மறுபக்கம் நூறு மில்லியன் டாலர் கடன் உதவி அளிப்பது பெருத்த முரண்பாடாகும்.

கடனளித்ததால் மட்டுமின்றி, தமிழின மக்கள் இலங்கையில் வசிப்பதாலும் அகதிகளாக அவர்கள் இங்கே குடிபெயர்வதாலும் இந்தியாவின் பளுவும் பொறுப்பும் அதிகரிக்கின்றன. ஆகவே, இலங்கைப் பிரச்னையில் தலையிட்டு நிரந்தரத் தீர்வுக்கு வழிகாட்டும் கடமை இந்தியாவுக்கு நிச்சயமாக இருக்கிறது. அண்டை நாட்டின் தீவிரவாத இயக்கம் நம் நாட்டை எத்தனை தூரம் சீர்குலைக்க முடியும் என்பதற்கு ராமேஸ்வரத்தை விடப் பெரிய சாட்சியம் தேவையில்லை.

தொடர்பில்லாத விவகாரங்களில் தலையிடுவதால், தீமைகள் விளைவதைப் போலவே, நியாயமாய்த் தலையிட்டுத் தீர்க்க வேண்டியவற்றைக் கவனிக்காமலிருப்பதாலும் பிரச்னைகள் வரும். இதனை மனத்தில் கொண்டு மத்திய அரசு செயல்பட வேண்டும்.

எங்கே பாஸ் செய்தோம்?



• ஸ்ரீஜா



• சவீதா

மும்பையிலிருந்து இறக்குமதியாகும் நடிகைகளுக்குக் கொஞ்சு தமிழில் குரல் கொடுப்பவர்களை தமிழ் ரசிகர்கள் அறிந்திருக்க நியாயமில்லை. இதோ இரு முன்னணி டப்பிங் கலைஞர்களின் ஒப்பனையற்ற நிஜமுகங்கள் :-

ஸ்ரீஜா :

''ஷாலினி, தேவயானி, சுவலட்சுமி, ரோஜா இவர்களுக்கெல்லாம் குரல் கொடுக்கிறேன். என் அம்மா மலையாளத்தில் ஒரு டப்பிங் ஆர்ட்டிஸ்ட். நல்ல நடிகையாகவும் இருந்திருக்காங்க. அவங்க காட்டிய வழியிலதான் நானும் இதே துறைக்கு வந்தேன். இருபது வருடம் ஓடியதே தெரியவில்லை. எனது மகளும் இப்போதே டப்பிங் பேசத் தொடங்கிவிட்டாள். டப்பிங் செய்யக் குரல் மட்டும் இனிமையாக இருந்தால் போதாது. அந்தக் குரலை ஏற்ற இறக்கங்களோடு மாடுலேட் செய்யத் தெரியணும். அதற்கு ஒவ்வொரு டப்பிங் ஆர்டிஸ்டுக்கும் நடிக்கத் தெரிஞ்சிருக்கணும். குறிப்பாக, வயதுக்குத் தகுந்த மாதிரி, கேரக்டருக்குத் தகுந்த மாதிரி குரலைப் பயன்படுத்தணும். காதலுக்கு மரியாதையில் ஷாலினிக்கு மென்மையான குரலில் பேசினேன். போலீஸ் ஆபீசராகவே வரும் விஜயசாந்திக்குக் கொஞ்சம் அதட்டலாகப் பேசுவேன். படத்தில் நடிகைகள் நிஜமாகவே தமிழ் பேசுவதுபோல இருந்தால் தான் அது சிறந்த டப்பிங்!

''ஒரு படத்திற்கு

டெல்லியில், விஷயமறிந்த வட்டாரம் மத்திய அமைச்சர் அருண் ஷோரியைப் பாராட்டுகிறது. அரசு செலவினத்தைக் குறைப்போம் என்று மேம்போக்குக்குச் சொல்லிக் கொண்டு இருக்காமல், அந்த வகையில் வெகு பிரயத்தனப்பட்டு, மத்திய அரசில் பத்து செயலாளர்கள், ஏழெட்டு கூடுதல் செயலர்கள், பதினெட்டு இணைச் செயலர்கள் பதவிகளைக் குறைத்திருக்கிறார். இதற்கு அதிகாரிகள் மத்தியில் அதிருப்தி இருந்



தாலும், சம்பந்தப்பட்ட அமைச்சர், பிரதமர் ஆகியோருடன் விவாதித்து, கன்வின்ஸ் செய்து, பதவி ஒழிப்புப் பணியை வெற்றிகரமாக சாதித்து விட்டார் ஷோரி!

- எம்

ஐயாயிரம் ரூபாயிலிருந்து ஏழாயிரத்து ஐந்நூறு வரைக்கும் சம்பளம் வாங்கலாம் என்று சங்கம் நிர்ணயித்திருக்கிறது. ஆனால் அதுபோல நாங்கள் கேட்பதில்லை. டப்பிங் கலைஞர்களுக்கு இன்னும் தமிழ்நாட்டில் அங்கீகாரம் கிடைக்கவில்லை. எங்களுக்குத் திரையில் பெயர் வருவதோடு எல்லாம் முடிந்துவிடுகிறது. கேரள அரசு கடந்த ஒன்பது வருடங்களாக எங்களுக்கு மாநில விருது வழங்குகிறது. ஆனால் தமிழக அரசு கண்டு கொள்வதே இல்லை. முதல்வரையும், அமைச்சர் முல்லைவேந்தனையும் இரண்டு முறை சந்தித்து மனு கொடுத்தோம். இதுவரை பதில் இல்லை.

"இந்த வருடம் எங்களுக்குச் சரியான பதிலைத் தமிழக அரசு தராவிட்டால் துணிந்து போராட்டத்தில் குதிக்கப் போகிறோம்!"

சவிதா :

"என் பாட்டி பத்மாவதி ஒரு கர்நாடக இசைப் பாடகி. அதோடு அவர் ஒரு டப்பிங் ஆர்ட்டிஸ்ட். பாட்டியுடன் சிறு வயதில் டப்பிங் தியேட்டர்களுக்குப் போவேன். என்னையும் பேச வைத்து விட்டார்கள். அப்போது எனக்கு நான்கு வயதுதான். அதன்பிறகு டப்பிங் உலகிற்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் எம்.பி.ஏ. படித்துக் கொண்டிருந்தபோது ஜீன்ஸ் படத்தில் பேச எனக்கு அழைப்பு வந்தது. என் பாட்டியை ஞாபகம் வைத்து என்னை அழைத்தார்கள். முதன் முதலில் ஐஸ்வர்யா ராய்க்குக் குரல் கொடுத்தேன். ஜீன்ஸ் படத்தால் எனக்குப் புகழ் கிடைத்தது. ஆனால் 'வாலி' படத்தில் சிம்ரனுக்குப் பேசிய பிறகுதான் என்னையும் ஒரு டப்பிங் ஆர்ட்டிஸ்ட் என்று ஏற்றுக் கொண்டார்கள்.


"இப்போது ஜோதிகாவிற்கும் சிம்ரனுக்கும் தொடர்ந்து குரல் கொடுக்கிறேன். ஒவ்வொரு நடிகைக்கும் ஒரு ஸ்டைல் இருக்கும். ஜோதிகா வேகவேகமாக, துரு துரு என்று பேசுவார். சிம்ரன் கொஞ்சம் நிதானமாகப் பேசுவார். பைலட் டிராக்கில் அவர்கள் ஹிந்தி, இங்கிலீஷ், இல்லையானால் தமிங்கலீஷில் பேசி நடித்திருப்பார்கள். அதைப் போட்டுப் பார்த்துவிட்டு அவர்களது பாணியைப் பின் பற்றி என் குரலில் பேசுவேன்.

"சேது படத்தில் அபிதாவுக்குக் குரல் கொடுத்ததற்காக 'ஃபேஸ்' அமைப்பு இரண்டாயிரம் ஆண்டுக்கான டப்பிங் கலைஞர் விருது அளித்தது.

"இதைவிட சந்தோஷமான விஷயம், ஜோதிகா வீடுதேடி வந்து கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்து வாழ்த்தியது! அதை மறக்கவே முடியாது!" என்கிறார்.

"பத்திரிகைகளோ, டிவிக்களோ சினிமா விமர்சனத்தில் எங்களைக் கண்டு கொள்வதே இல்லை. நாங்கள் என்ன பாவம் செய்தோம்?" என்று கேட்கிறார்கள் இந்தப் பின்னணிக் கலைஞர்கள்!

- ஜெயன்



IT'S MONSOON AGAIN!
- WILL IT RAIN ENOUGH THIS YEAR?
THE BOY WHO RAN AWAY
- A NEW SERIAL
THE IDLI CHAMP
A GAME FOR CRICKET LOVERS
GOKULAM
The monthly magazine for children
47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 97
JULY 2000
Rs.6/-



• ராஜேஷ் பைலட்

1998ம் ஆண்டு பொதுத் தேர்தல் சமயம். அப்போதைய காங்கிரஸ் தலைவராக இருந்த சீதாராம் கேசரியின் மீது ஏற்பட்ட அதிருப்தி காரணமாகக் கட்சியின் பல பெருந்தலைகள் பிரிந்து போக, அவமானகரமான தோல்வியைத் தவிர்க்க சோனியா கட்சிப் பிரசார மேடைகளில் ஏறத் தொடங்கிய தருணம்.

புதுதில்லி - அக்பர் சாலையிலுள்ள காங்கிரஸ் கட்சி அலுவலகத்துக்கு சீதாராம் கேசரி வந்தாலும் சரி; வெளியே கிளம்பிப் போனாலும் சரி - 'ஜிந்தாபாத்' போடவும், 'முர்தாபாத்' போடவும் இரு கோஷ்டிகள் வாசலில் தயாராக டீ குடித்துக் கொண்டு எப்போதும் கூடியிருந்தனர். (எதிர்ப்பாளர் கூட்டம் தான் எக்கச்சக்கம்.)

கேசரி தலைமையிலான காங்கிரஸ் படுதோல்வி அடைந்தால்தான், சோனியாவின் பிரவேசத்துக்கு ஒரு அழுத்தமான காரணமும் ஆரவாரமான வரவேற்பும் கிடைக்கும் என்று கட்சி அலுவலகத்தில் பல கேசரி அதிருப்தியாளர்கள் பேசிக் கொண்டிருக்கக் கேட்டேன்.

இருபுறமும் பலமாகச் சாய்ந்து விடாத, (ஓரளவேனும்) நடுநிலை வகிக்கும் யாரிடமாவது இதுகுறித்துப் பேசலாம் என்று முடிவு செய்து, அப்போது யு.என்.ஐ. செய்தி நிறுவனத்தின் உயரதிகாரியாக இருந்த கணபதியிடம், யாரிடம் பேசலாம் என்று கேட்டேன்.

சற்றும் யோசிக்காமல், ''ராஜேஷ் பைலட்டைப் பிடியுங்கள்'' என்று அவர் சொன்னார். அவரை மாதிரி பத்திரிகையாளர்களுடன் இணக்கமாகப் பழகக் கூடிய அரசியல்வாதிகள் வெகு சொற்பம் என்றும் கூறினார்.

காங்கிரஸ் கட்சி அலுவலகத்தின் பின்புறமுள்ள செயலாளர்கள் அறைகளில் ஒன்றிலிருந்து ஏதோ மிக அவசர காரியமாக, கையில் ஏழெட்டு ஃபைல்களுடன் (அல்லது தடிமனான நோட்டுகளாயிருக்கலாம்; நினைவில்லை) வேகமாக வெளியேறி வந்த பைலட்டை குறுக்கே மறித்து, ''மன்னிக்கவும். உங்களிடம் இரு நிமிடம் பேசலாமா?'' என்றேன்.

''நீங்கள் யார்?'' என்று அவர் கேட்கவில்லை. ''எந்தப் பத்திரிகை?'' என்று கேட்டார்.

''தமிழ்நாட்





டிலிருந்து வருகிறேன். கல்கி..." என்று முடிப்பதற்குள் "பெயர்?" என்றார்.

"ராகவன்" - மறுபடியும் முடிப்பதற்குள் "வாட்? வாட்?" என்று, நின்று கேட்க முடியாத பரபரப்பு அவர் குரலில் தெரிந்தது.

அச்சடித்துக் கொடுத்தாலும் நினைவிருக்கப் போவதில்லை என்பதால் இரண்டாம் முறை, "ஔரங்கசீப்" என்று புனைபெயரைச் சொன்னேன்.

மாற்றிச் சொன்னது பற்றிய சிறு சலனம் கூட அவர் முகத்தில் தெரியவில்லை. நடந்தபடியே பேசினார். "பாருங்கள், அவசர வேலையாகப் போய்க் கொண்டிருக்கிறேன். முடிந்தால் நாளை பேசலாம்..." வாக்கியத்தை முடிக்கவில்லை அவர்.

அந்தப் பக்கமாகச் சென்ற கட்சி ஊழியர் ஒருவரைப் பெயர் சொல்லி அழைத்து, "இவருக்கு சாய் கொடுங்கள்" என்று உரக்க உத்தரவிட்டு விட்டு, "நீங்கள் டீ குடித்து விட்டுத்தான் போக வேண்டும். நாளை நாம் பேசுவோம் - எதுவாக இருந்தாலும்" என்றபடியே போய் விட்டார்.

ஐந்து நிமிடங்கள் நின்ற பிறகும் டீ வரவில்லை. ஆகவே கிளம்பி விட்டேன்.

பைலட் கூறியது போல மறுநாள் என்னால் காங்கிரஸ் அலுவலகத்துக்குச் செல்ல முடியவில்லை. அன்று உ.பி.யில் ஒரு சிறு டவுனில் சுஷ்மா ஸ்வராஜ் பேசவிருந்த கூட்டத்துக்குப் போய்விட்டேன்.

மூன்றாம் நாள் காங்கிரஸ் அலுவலகத்துக்குச் சென்ற போது அலுவலக வெளிப்புறம் முழுவதுமே தலைகளால் நிரம்பி, உள்ளே நுழையக்கூட முடியாத நெரிசல். உள்ளே, சோனியா வந்திருக்கலாம்; அல்லது வேறேதாவது முக்கியக் கூட்டம்.

சில நிமிடங்கள் வாசலிலேயே நின்றிருந்தேன். சட்டென்று கூட்டம் விலகி இரண்டு கார்கள் வெளியேறின. ஒன்றில் பைலட் இருந்தார்; நான் கவனிக்கவில்லை.

கதவைக் கடக்கும்போது கார் வேகம் குறைந்து, பாதி இறங்கிய கண்ணாடி வழியே பைலட் கை காட்டினார்.

"ஹலோ! அன்று டீ சாப்பிட்டுவிட்டுப் போனீர்களா?"

பைலட்டைப் பற்றி நான் போட்ட கணக்கு பெரும் பிசகாகி விட்டது.

அவருக்கு நிச்சயம் என் பெயர் நினைவிருந்திருக்கும். இரண்டாம் முறை மாற்றிச் சொன்ன புனைபெயருங்கூட!

யு.என்.ஐ. கான்டீனில் அன்று மாலை திரு. கணபதியிடம் இச்சம்பவத்தைச் சொல்லி வியந்தேன்.

பிறகு மறந்துவிட்டது. பைலட் இறந்த செய்தி கிட்டிய போது மீண்டும் இது ஞாபகத்துக்கு வந்தது.

பகிர்ந்து கொள்ளலாம் என்றால் இப்போது கணபதியும் உயிருடன் இல்லை.

— பா. ராகவன்

ராஜேஷ் பைலட்டின் திடீர் மரணம், காங்கிரஸ் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. காரணம், எதிர்வரும் கட்சித் தேர்தலில் சோனியாவை எதிர்த்து அவர் போட்டியிடப் போவதாக பலமான வதந்தி உருவாகியிருந்ததுதான்.

அது வதந்தியல்ல என்று நிரூபிப்பது மாதிரி, சில நாட்கள் முன்பு சோனியாவே ராஜேஷை அழைத்துத் தனியாக ஒரு பேச்சுவார்த்தை நடத்தினார். காரணம், கட்சி அதிருப்தியாளர்கள் அத்தனை பேரும் புலம்பித் தீர்க்கவும் ஆலோசனை செய்யவும் பைலட்டைத்தான் சமீப காலமாக அணுகி வந்தார்கள். போதாக்குறைக்கு ராஜேஷும்



• அஞ்சலி செலுத்த வாஜ்பாய் வந்தபோது...

ஜிதேந்திரப் பிரசாத் போன்றோருடன் சேர்ந்து உ.பி.யில் பல பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டு, சோனியாவை விமர்சிக்க ஆரம்பித்திருந்தார்.

"சோனியாவை எதிர்த்து, நான் தலைவர் பதவிக்குப் போட்டியிடும்



பட்சத்தில் நீங்கள் ஆதரவு தர வேண்டும்'' என்று வடமாநிலத் தலைவர்கள் ஒவ்வொருவரிடமும் நேரில் சென்று கேட்டு வந்த பைலட், விரைவில் தென்னிந்தியாவுக்கும் வருவதாகவே இருந்தார்.

ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள தமது தொகுதியான தௌஸாவிலிருந்து ஜெய்ப்பூர் விமான நிலையத்துக்குக் காரில் (தாமே ஓட்டிக்கொண்டு) வந்து கொண்டிருந்தவர், விபத்தாகி இறந்து போனார்!

பைலட், திரளான மக்கள் ஆதரவு பெற்ற தலைவர் என்பது, அவரது இறுதி ஊர்வலத்துக்குத் திரட்டாமலேயே கூடிய கூட்டத்திலிருந்தே தெரிந்தது. பல காங். தலைவர்களே அசந்து போகுமளவுக்கு ஊர்வலம் அத்தனை நீண்டிருந்தது!

திரட்டாமல் திரண்ட கூட்டம்!

ராஜேஷ் பைலட்டின் நிஜப் பெயர் ராஜேஷ்வர் பிரசாத். இளம் வயதிலேயே தந்தை இறந்து விட, தம் அண்ணனுடன் பால் வியாபாரம் செய்தபடியே படிப்பைத் தொடர்ந்து முடித்து, விமான பைலட் ஆனவர்.

பலர், ராஜீவ்காந்தியும் பைலட்டாக இருந்தார்; அவர்தான் ராஜேஷை அரசியலுக்கு அழைத்து வந்தார் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில் ராஜேஷ் பைலட், அரசியலில்



• ரமா பைலட்

ராஜீவுக்கு சீனியர். 1979ல் இந்திரா காந்தி மூலம் கட்சிக்கும் அரசியலுக்கும் வந்தவர்.

1980ல் தமது முதல் பாராளுமன்றத் தேர்தலில் வென்ற பைலட், 1989 தவிர பிற தேர்தல் எதிலும் தோற்றதில்லை.

பைலட்டின் உடல் டெல்லியில் அவரது அக்பர் சாலை இல்லத்துக்கு எடுத்து வரப்பட்டபோது அலை மோதிய கூட்டத்தில், பிரதமர் வாஜ்பாய் 'கேரோ' செய்யப்பட்டார். கேரோ செய்தவர்களின் கோரிக்கை, 'கிஸான் கட்'டில் சரண்சிங் சமாதி அருகே பைலட்டுக்கு இடம் ஒதுக்க வேண்டும் என்பது.

''நான் கணவரை இழந்த நிலையில் அவரது இறப்பையும் அரசியலாக்கி விடாதீர்கள்!'' என்று காட்டமாக, பைலட்டின் மனைவி ரமா பைலட் (ராஜஸ்தானில் இவர் ஒரு எம்.எல்.ஏ.) குரல் கொடுக்க, கூட்டம் கப்சிப் ஆகியது.

இந்த நிலையில் பைலட் மரணம் குறித்து ஒரு விசாரணை நடத்த மம்தா பானர்ஜி கோரியிருக்கிறார். சு. சாமி தன் பங்குக்கு, 'பைலட் மரணத்தில் மர்மங்கள் இருக்கின்றன' என்று கூறியிருக்கிறார்.

தொடர்ந்து தௌஸா தொகுதியில் ரமா பைலட் காங்கிரஸ் வேட்பாளராக நிற்பார் என்று செய்திகள்.

அரசியல் தொடரத்தானே வேண்டும்? யார் இறந்து அது நின்றிருக்கிறது?

புதுடில்லியிலிருந்து : வெங்கட்



ஹலோ, ராஜ்!

மாதுரி

"**சா**ர், இது ரொம்ப விபரீதம்!"

"டெலிபோன் டிபார்ட்மெண்ட் ஊழியர்களுக்கு டெலிபோன் இலவசம். இதுல என்ன விபரீதம்?"

"ப்ளீஸ், யோசிச்சு முடிவு எடுங்க."

"முடிவு செஞ்சிட்டு யோசிச்சேன், சரியாத்தான் படுது!"

"மந்திரி பிடிவாதத்திற்காக ஒத்துக்காதீங்க. அவர் மூணு லட்சம் ஊழியர் குடும்பத்துல இருக்கும் சுமார் பத்து லட்ச வோட்டுக்களை மனசுல வைச்சுக்கிட்டுச் சொல்றார்."

"நமக்கு வோட்டு முக்கியமில்லையா?"

"இந்த செலவுலயா? வோட்டுக்கு நூறு ரூபான்னு வைச்சாலும் பத்து லட்சம் வோட்டுக்குப் பத்து கோடி. அதை 800 கோடி, 1800 கோடின்னு இழுத்தா எப்படி?"

"ம்..."

"அதோட இல்ல சார். இலவச திட்டம்னு ஒருத்தருக்கு ஆரம்பிச்சா புற்றீசல் மாதிரி எல்லா டிபார்ட்மெண்டும் கிளம்பும். சமாளிக்க முடியாது."

"அதை யோசிச்சுட்டேன். போக்குவரத்து, பஸ், ரயில், விமானத் துறைகளுக்கு ஏற்கெனவே இலவச பாஸ் இருக்கு. உரம், இரும்புத் துறை கேட்க எதுவுமில்லை. உணவு, மருத்துவத் துறைகளுக்குக் கொடுக்கிற பொருளோட தரம் தெரியும். அதனால கேட்க தைரியம் வராது."

"சார், மின்சாரம், தண்ணீர்...?"

"மின்சாரம் விட்டு விட்டு வருது. தண்ணி சொட்டு சொட்டா வருது... கொடுத்திருவோம்!"

"தபால்..."

"இலவச கவர், ஸ்டாம்ப் கேட்க மாட்டாங்க. ஏன்னா அவங்களே அதிகமா கூரியர்களை நம்புறதா ரகசியத் தகவல் வந்திருக்கு. பெட்ரோலியம் இருக்கு..."

"இந்தத் தலைவலிக்கு பதிலா சம்பளத்தில் பேசாம இரு நூறு ரூபா கூட்டிக் கொடுத்திரலாமே...!"

"அதான் பெரிய தப்பு! பணமா கொடுத்தா எல்லாரும் கேட்பாங்க. செலவு பிச்சுக்கும். அதுக்குத் தனியா உலக வங்கி கடன் தேவைப்படும்..."

"சார்... நீங்க சொல்றது நியாய



மாப்படுது.''

"இதுல இன்னொரு சூட்சுமம் இருக்கு தெரியுதா?''

"இல்லையே சார்''

"இலவச டெலிபோன் கொடுக்கிறதால, ஒவ்வொரு ஊழியருக்கும் அவங்க டிபார்ட்மெண்ட் சர்வீஸ் எவ்வளவு மோசமாயிருக்குன்னு நேரடியா தெரிய வரும். மாசம் நாற்பதுநாள் வீட்டுல டெலிபோன் **'dead'** ஆனா, 'கொற கொற'ன்னா என்னாகும்? பெண்டாட்டி புள்ளைங்க இடிப்பாங்க! தாங்க முடியுமா?''

"சார்... சார்... பாச்சுலரா இருந்துகிட்டு பொண்டாட்டியைப் பத்தி இவ்வளவு கச்சிதமா தெரிஞ்சு வைச்சிருக்

நம்பர்தானே?



கிங்களே சார்...''

"அத விடுங்க! தொல்லை தாங்காம டெலிபோனை சரி செய்வாங்களா, சர்வீஸ் உருப்படுமா... வீட்டுக்கு சர்வீஸ் உருப்பட்டா...''

"நாட்டுக்கே பெருகும் சார்! நாட்டுல டெலிபோன்கள் சரியா வேலை செய்யப் போகுதுன்னா எத்தனை ஆயிரங்கோடி செலவு செஞ்சாலும் தப்பில்லை... பயங்கர ஐடியா சார்...''

(திடீரென அறைக்கு வெளியே ஓரே கூச்சல்)

"அடிக்கிறோம்! அடிக்கிறோம், நாட்டுக்கு நோட் அடிக்கிறோம்! இலவசமா கொஞ்சம் வீட்டுக்கும் கேக்கிறோம்! அடிக்கிறோம்...''

"என்னப்பா அது கோஷம்?''

"சார்... ரிசர்வ் பாங்க் ஊழியர்கள்...!'' ●



“தொண்டர்களே முதலீடு!”

கார்ல்மார்க்ஸ், டால்ஸ்டாய், மாக்ஸிம் கார்க்கி உள்ளிட்ட ரஷ்ய சிந்தனையாளர்களெல்லாம் தமிழ்நாட்டை எட்டிப் பார்க்கக் காரணமாயிருந்தது, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். இன்று இதற்குப் பொன் விழா.

சமீபத்தில் நடைபெற்ற விழாத் தொடக்க நிகழ்ச்சியில் நிறுவனத்தின் நான்கு ஆரம்ப காலத் தூண்கள் கௌரவிக்கப்பட்டார்கள். அவர்களில் ஒருவரான ராதாகிருஷ்ணமூர்த்தியிடம் பேசினோம். இன்று NCBH ன் நிர்வாக இயக்குநராகச் செயல்பட்டு வருகிறார் இவர்.

“இரண்டாம் உலகப் போருக்கு முன், அந்நிய ஆதிக்கத்தில் இந்திய மக்கள் ஏழைமையில் வாழ்ந்து கொண்டிருந்தனர். அப்போது உலகம் முழுவதும் சிந்தனைப் புரட்சி நடந்துகொண்டிருந்தது. இந்த மறுமலர்ச்சியை இங்குள்ள மக்களும் அறிந்து, புதிய யுகத்திற்குத் தயாராக வேண்டும் என்ற நோக்குடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ‘பீப்பிள்ஸ் பப்ளிஷிங் ஹவுஸ்’ என்ற மக்கள் நூல் வெளியீட்டகத்தை நிறுவி இந்தியாவெங்கும் நடத்தியது. அதன் கிளை சென்னையிலும் நிறுவப்பட்டது. சுதந்தரம் கிடைத்த பிறகு காங்கிரஸ் அரசு கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தடை விதித்தது. தடை விதிக்கப்பட்ட மூன்றாண்டுக் காலம், செயலிழந்து கிடந்த சென்னை இளை, தடை



• சுப்ரமணியம் •



• நான்கு தூண்கள்

நீக்கப்பட்ட பிறகு, 1951ல் நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் என்ற புதிய பெயருடன் மீண்டும் பிறந்தது. 'நியூசெஞ்சுரி' என்ற பெயரை உருவாக்கியவர் பி.ஜி. ரெட்டி.

"கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை உள்ளிட்ட அதன் கட்சி இலக்கியங்களை இருபத்தைந்து பைசா, ஐம்பது பைசா விலையில் வெளியிட்டு இளைஞர்களிடம் இடதுசாரிச் சிந்தனையைப் பரப்புவதில் தீவிர பிரசாரப் பதிப்பகமாக நியூசெஞ்சுரி விளங்கியது. இந்தக் கால கட்டத்தில் புத்தகங்களை மூட்டையாக கட்டித் தலையில் சுமந்து சென்று கல்லூரிகள், முக்கிய சாலை சந்திப்புகள், அலுவலகங்கள் முன்பு கடை பரப்பி கூவிக்கூவி விற்போம். இப்படி தொண்டர்களையே முதலீடாகக் கொண்டு வளர்ந்தது இந்தப் பதிப்பகம். இந்த நிறுவனத்திற்காக ஆரம்ப நாளில், உழைத்த பலரில் பி.ஜி. ரெட்டி, எஸ். ராதாகிருஷ்ணன், விஜயபாஸ்கரன் போன்ற சிலர்தான் இன்று உயிருடன் இருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு தலைமுறையிலும் இந்த நிறுவனத்திற்குப் புதிய அர்ப்பணிப்பாளர்கள் வந்து சேர்ந்து விடுகிறார்கள்.

"தற்போது நிறுவனத்தின் செயலராக இருக்கும் மேகலிங்கம் சுப்ரமண்யம் அப்படி வந்தவர்தான். எட்டயபுரத்தைச் சேர்ந்த அவர் இளம்பிள்ளை வாதத்தால் இரண்டு கால்களையும் இழந்தவர். முப்பது ஆண்டுகளுக்கு முன் தமது இளம்பிள்ளைவாத நோய்க்கு எந்த மருத்துவரை அணுகுவது என ஆலோசனை பெற இந்தப் புத்தக நிறுவனத்திற்கு வந்தார். அவருக்கு இங்கே ஆலோசனை மட்டுமல்ல, உதவியாளர் வேலையும் கொடுத்தோம். தமது உழைப்பால் உயர்ந்து, இன்று நிறுவனத்தின் செயலாளராக இருக்கிறார். இவருக்கு மத்திய அரசு ஜனாதிபதி விருதும், மாநில அரசு அண்ணா விருதும் வழங்கியுள்ளது" என்கிறார் ராதாகிருஷ்ண மூர்த்தி.

என்.சி.பி.எச். சமீபத்தில், மார்க்ஸின் 'மூலதனம்' நூலின் அசல் பிரதியை அப்படியே தமிழில் மொழி பெயர்த்து ஆறு பாகங்களாகவும் அம்பேத்கர் படைப்புகளைப் பதினைந்து பாகங்களாகவும் குறைந்த விலையில் வெளியிட்டிருக்கிறது.

வியப்பளிக்கும் விஷயம், இவை உடனே விற்றுத் தீர்ந்திருப்பதுதான். பொன்விழா சமயத்தில் இதைவிட மகிழ்ச்சி தரும் விஷயம் வேறில்லை என்கிறார், ராதாகிருஷ்ணமூர்த்தி.

— லியோ

படங்கள்: வெங்கடேஷ்



சினிமாக்காரர்கள் அரசியலில் குதிப்பது ஒருபுறமிருக்க, அரசியல்வாதிகள் சினிமாவில் நடிக்கிற சீசன் இது. போதும்!

முலாயம்சிங் யாதவின் சமாஜ்வாதி கட்சியின் பொதுச்செயலாளர் அமர்சிங் (44). இவரது நண்பர்களுள் ஸ்ரீதேவியின் கணவர் போனிகபூரும், அமிதாபும் முக்கியமானவர்கள். அமர்சிங், போனிகபூர் கேட்டுக் கொண்டதன் பேரில், அவருடைய ஹமாரா தில் ஆப்கே பாஸ் ஹை' என்ற இந்திப்படத்தில் நடிக்கிறார்.

'வோட்டுக் கேட்டு, மக்களிடம் போகிறபோது ஈசியாக இருக்கும் என்று, காரணம் சொல்கிறார் இவர்!

— எம்

நீங்கள் பார்ப்பது நிஜமான சிங்கம்தான். இரண்டு காலில் நின்றுகொண்டு அட்டகாசமாய் போஸ் கொடுக்க, கைக் குழந்தையும், அம்மாவும் தைரியமாகச் சிரிக்கிறார்களே என்கிறீர்களா? சிங்கத்துக்கும், அந்தப் பெண்மணிக்கும் இடையே ஒரு அங்குல பருமன் கொண்ட கண்ணாடி இருக்கிறது. ஐரோப்பாவில் விசிதா என்ற ஊரில் உள்ள செட்விக் கவுண்டி மிருகக் காட்சி சாலையில் எடுக்கப்பட்ட படம் இது.

— எம்





பெ. நாயகி

நிரை நேர் நேர்

அடையாளம் தெரியாத ஓர் இளைஞன் தொலைக்காட்சியில் பேசிக் கொண்டிருந்தான். திரையின் அடிப்புறத்தில் துணைத் தலைப்பாக அவனுடைய பெயர் 'எழுத்தாளர் மதியழகன்' என்று போடப்பட்டிருந்தது.

மனத்திற்குள் அந்தப் பெயரை ஒருமுறை உச்சரித்துப் பார்த்தேன். பலமுறை பத்திரிகைகளில் பார்த்த ஞாபகம் மட்டும் இருந்தது.

குறிப்பிட்ட ஏதாவது கதையைப் படித்த ஞாபகம் இல்லை.

அவனுக்கு முப்பத்தைந்து வயது இருக்கலாம். உற்சாகம் கொப்பளிக்கப் பேசிக் கொண்டிருந்தான்.

"என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். நான் பளிச்சென்று பல பேர் கவனத்தைக் கவர்ந்தது என்னுடைய தமிழாசிரியர் சாயலுடன் ஒரு பாத்திரம் படைத்து எழுதிய கதையால்தான். இன்னும் சொல்லப் போனால் என்னை ஓர் எழுத்தாளனாக்கியதே அவர்தான் என்பேன்..."

அவன் பேச்சு எனக்கு மிகுந்த சந்தோஷத்தை அளித்தது. நானும் ஒரு தமிழாசிரியன்; மனைவியை இழந்தவன்; ஓய்வு பெற்றுப் பத்து வருடங்கள் ஆகிவிட்டன. வாழ்க்கையில் இவை மூன்றும் என்னுடைய வயதின் இருபதுகளில், நாற்பதுகளில், அறுபதுகளில் ஏற்பட்ட பேரிடிகள்.

மொழியியல் ஆசிரியர் என்றாலே இளக்காரம்தான் என்றொரு பொது விதி இருந்தால் கூட ஆறுதல் இருந்திருக்கும். தமிழாசிரியனுக்கு மட்டுமே இந்த நிலை. நான் பள்ளியில் இருந்த காலத்தில் கூட ஆங்கில ஆசிரியர்களுக்கு இருந்த மரியாதையே தனி. இந்த நாட்களிலோ சொல்லவே வேண்டாம். தமிழாசிரியர்கள் என்றாலே வேண்டாத பிறவிகளாகப் பார்க்கப்படுகிறார்கள். இங்குள்ள குழந்தைகள் எல்லாம் பெரும் கணினிப் பொறியாளர்களாக ஆகி அமெரிக்கா பெயர்ந்து போக இருக்கும் வாய்ப்பைக் கெடுக்கின்ற மொழிக்கு ஓர் ஆசிரியனா என்கிற சிந்தை வளர்ந்து விட்ட நிலையில் எனக்கு என்ன மரியாதை இருக்கும்? பல சமயங்களில் நான் ஒரு மனிதன் என்பதற்கும் வயதானவன் என்பதற்கும் கிடைக்கின்ற மரியாதை கூட அடுத்தகணம் நான் தமிழாசிரியன் என்று தெரிந்த மாத்திரத்தில் ஒரு பரிதாபமாக எதிராள் கண்களில் உருமாறுவதைக் கண்டிருக்கிறேன். இவ்வளவு ஏன், என் மருமகளே பேத்தியை அதிக நேரம் என்னுடன் பேச விடுவதில்லையே. அவளுடைய ஆங்கிலப் பேச்சுப் பயிற்சியை நான் கெடுத்து விடுகிறேனாம்!

விரக்தியை மட்டும் சுவாசித்தபடி வாழ்ந்து கொண்டிருக்கிறேன். தமிழ், தமிழாசிரியர் போன்ற சொற்கள் காதில் விழும் போது மட்டும் கொஞ்சம் சிலிர்ப்பு ஏற்படுவதுண்டு. அப் போதைய மூச்சு மட்டும் கொஞ்சம் உயிர்ப்போடு இருப்பதாக



'ஆமியா என்றால் ரொம்ப மிருதுவான என்று அர்த்தம். எங்கள் பெண், தன் பெயருக்கு ஏற்ப ரொம்பவும் மிருதுவானவள்' என்கிறார் ரோமி கபில்தேவ்.

உணர்வேன்.

மதியழகன் பேசிக் கொண்டிருந்தான்.

"என்னுடைய உயர்நிலைப் பள்ளிப் பருவத்தில் ஒரு தமிழாசிரியர் இருந்தார். வெறுமனே பாடங்கள் மட்டும் எடுக்க மாட்டார். கூடவே நிறைய விஷயங்கள் சொல்வார். தமிழில் அப்படி ஓர் ஆளுமை அவருக்கு இருந்தது. மரபுக் கவிதை சம்பந்தமாக நிறைய விஷய ஞானம் இருந்தது. அவர் எடுத்த இலக்கணம்தான் என் மனத்தில் இன்றும் ஆழப் பதிந்திருக்கிறது. நான் இலக்கணப் புத்தகங்களோ நோட்ஸோ வாசித்ததே கிடையாது. அவர் போட்ட அஸ்திவாரம் அவ்வளவு அழுத்தம்..."

எனக்குப் பெருமையாக இருந்தது. யாரந்தத் தமிழாசிரியர் இவ்வளவு ஆழ்மனப் பாதிப்பை இவனுக்குள் ஏற்படுத்தியது என்கிற கேள்வி எழ, அந்த நிகழ்ச்சியை இன்னும் கவனமுடன் பார்க்க ஆரம்பித்

தேன்.

மிக அரிதாகத்தான் இப்படி தொலைக் காட்சிகளில் காலை நிகழ்ச்சிகள் பார்க்க வாய்ப்புக் கிடைக்கும் எனக்கு. பொதுவாக அலுவலகம் கிளம்பும் பரபரப்பில் இருக்கும் மகனுக்கும் மருமகளுக்கும் பள்ளிக்குக் கிளம் பிக் கொண்டிருக்கும் பேத்திக்கும் நடுவில் காலை நேரங்களில் எனக்கு ஒரு வேலையும் இருக்காதுதான். ஆனாலும் நான் சும்மா உட்கார்ந்திருந்தால் அது அம்மூவரில் யாருக் காவது ரத்த அழுத்தத்தை அதிகரிக்கச் செய் யும். சில சமயங்களில் நானாகவே முன் சென்று பேத்திக்குப் புத்தகப் பை தயார் செய்வது போலவோ, மகனுடைய வாகனத் தைத் துடைப்பது போலவோ செய் யப் போனால், 'எம்ப்பா, சும்மா ஒரு இடத் தில் இருக்க மாட்டீங்களா? ஏன் இப்படி குறுக்கும் நெடுக்குமா வந்து எங்களுக்கு உதவி செய்யறதா நினைச்சு தொந்தரவு பண்றீங்க?' என்றும் வார்த்தைகள் கேட்க வேண்டி வரும். வயசும் ஆகிப் போய் மனைவியும் போய் விட்டால் இப்படித் தான். எனக்குப் பழக்கமாகவும் சகஜமாகவும் ஆகிப்போன ஒன்று இது.

இன்று அதிகாலையில் ஒரு நண்பர் வீட் டுத் திருமணம் என்று எல்லோரும் போயி ருப்பதால் தொலைக்காட்சியும் அதன் தொலை இயக்கியும் என் கட்டுப்பாட்டில்.

எழுத்தாளர் மதியழகன் தொடர்ந்து பேசினான்.

''.....எட்டாம் வகுப்பா ஒன்பதாம் வகுப்பா என்று தெளிவாக நினைவில்லை. அவர் சிலப்பதிகாரம் நடத்திக் கொண்டிருந் தார். கோவலன் கண்ணகி திருமணக் காட்சி. அதுதான் எப்போதும் பாடத்தில் இருக்கும். அது நடத்தும் போது டிரமாடிக் ஐரனி என் றால் என்ன என்று சொன்னார். 'காதலர் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல்' என் றொரு வரி வரும். இளங்கோ அடிகள் காவி யத்தின் முதல் சாப்டரிலேயே இந்த வரி வைத்ததற்குக் காரணம், பின்னாளில் கோவ லன் கைவிடப் போகிறான்; காதலர்கள் பிரியப் போகிறார்கள் என்று சூட்சுமமாகத் தெரிவிக்கும் எதிர்மறை வித்தையாகும் இது. இதற்குப் பெயர்தான் டிரமாடிக் ஐரனி என்று அவர் சொன்ன போதுதான் கதை எழுதுவது குறித்த முதல் பொறி என் எண் ணத்தில் விழுந்தது என்பேன்...''

எனக்குள் ஏதோ குறுகுறுவென்றது.

நானும் வகுப்பெடுக்கும் போதெல் லாம் தவறாமல் சொன்ன விஷயமாகும் இது. ஆனால் நானென்று இல்லை; எல்லா தமிழாசிரியர்களுமே இதைச் சொல்லித்தானி ருப்பார்கள். சிலப்பதிகாரத்தில் முக்கிய வரி களாக வருடந்தோறும் இடஞ்சுட்டிப் பொருள் விளக்குமாறு கேள்வி கேட்கப்படும் இடமாயிற்றே இது.

பேட்டி எடுத்துக் கொண்டிருந்த பெண், தன் அலங்காரம் குறித்த பிரக்ஞை குறையா மல் போலியாகக் கண்களை விரித்தபடி, ''ஸோ உங்களுக்குள் ஓர் எழுத்தாளரை உசுப்பி விட்டது அந்த இன்ஸிடன்ட்தான், என்று சொல்லலாமா?'' என்று கேட்டாள்.

''எக்ஸாக்ட்லி. அன்று முழுதும் அதே சிந்தனையில் இருந்தேன் நான். டிரமாடிக் ஐரனி என்கிற பதம் ரொம்பவே யோசிக்க வைத்தது என்னை. மறுநாள் தமிழ் வகுப் பில் அவரிடம், 'ஐயா நீங்கள் சொன்ன வரி களுக்கு முன்பாகவே ஒரு வரி வருகிறதே 'தீவலம் செய்வது காண்பார்கண் நோன் பென்னை' என்று. அது கூட இன்று கண்ணகி தீயைச் சுற்றுகிறாள், பின்பொரு நாள் தீ அவள் சொல்படி சுற்றப் போகிறது என்று காட்டுகிற டிரமாடிக் ஐரனி என்று எடுத்துக் கொள்ளலாமா?' என்று கேட் டேன்...''

திருமணமாகி, பதினாறு வருடங்கள் கழித்துப் பிறந்த குழந்தை என்பதால், இரண்டு பேருக்கும் தம் குழந்தை மீது அதிக பாசம்.

''எங்கள் வாழ்க்கையின் சரியான தருணத்தில்தான் ஆமியா பிறந்திருக்கிறாள். கபில், கிரிக்கெட்டில் ரொம்ப பிஸியாக இருந்த காலத்தில் பிறந்திருந்தால், அப்பாவின் அரவணைப்பை அவள் இதுபோலப் பெற்றிருக்க முடியாதல்லவா?' என்று கேட்கிறார் ரோமிதேவ்.

கபில் மீது மனோஜ் பிரபாகர் கூறியுள்ள குற்றச் சாட்டுகள் குறித்து ரோமி என்ன சொல்லுகிறார்?

''கிரிக்கெட்டால் எங்களுக்கு ஏராளமாகப் பேரும், புகழும், பணமும் கிடைத்திருக்கிறது. இப்போது அதே கிரிக்கெட்டால் அவப் பெயர் ஏற்பட்டுள்ளது. யாரோ சிலர், சொந்த லாபம் பெறுவதற்காக, இத் .தகைய அபாண்டமான பழியைக் கூறியுள்ளனர்.''

– சி.எம்.



அமரர் கல்கி

ஏழை மாணவர்களுக்கு உதவி: ரூ. 1,50,000

சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டதைக் காட்டிலும் இந்தக் கல்வி ஆண்டுக்கு (2000 - 2001) ரூ. 25,000/- அதிகரித்து, மொத்தம் ரூ. 1,50,000/- உதவித் தொகை வழங்கப்படவிருக்கிறது. உதவித் தொகைகள் பின் வருமாறு விநியோகமாகும்.

- ஒருவருக்கு ரூ. 2,000 வீதம் ஆறு பட்ட மேற்படிப்பு அல்லது ஆராய்ச்சி மாணவர்களுக்கு ரூ. 12,000/-
- ஒருவருக்கு ரூ. 1,500 வீதம் இசை அல்லது நாட்டியம் பயிலும் இரு மாணவர்களுக்கு ரூ. 3,000/-
- ஒருவருக்கு ரூ. 1,500 வீதம் 34 கல்லூரி மாணவர்களுக்கு ரூ. 51,000/-
- ஒருவருக்கு ரூ. 1000 வீதம் 60 மேல் நிலைப்பள்ளி அல்லது பாலிடெக்னிக் மாணவர்களுக்கு ரூ. 60,000/-
- ஒருவருக்கு ரூ. 750 வீதம் 32 உயர் நிலைப் பள்ளி மாணவர்களுக்கு ரூ. 24,000/-

---

அவன் மேற்கொண்டு பேசியது எதுவும் என் காதுகளில் விழவில்லை. எனக்குள் தீப்பற்றிக் கொண்டாற்போலிருந்தது. இது எப்போதோ என் வகுப்பில் நடந்த நிகழ்ச்சி தான் என்று நினைவலைகள் கிளர்ந்து தெரிவித்தன. அடடே, கடைசியில் இந்தப் பிரபல எழுத்தாளன் என் பழைய மாணாக்கனா என்கிற எண்ணம் பீறிட்ட மாத்திரத்தில் உதடுகள் கோண, கண்கள் பொங்கின. பிரயத்தனப்பட்டு பேட்டியைத் தொடர்ந்து கவனித்தேன்.

"நீங்க படிச்ச ஸ்கூல், இந்த அளவு உங்களை பாதிச்ச தமிழாசிரியர் பெயர் எல்லாம் சொல்லுங்களேன்..."

என் செவிகள் கூர்மையாயின. இதோ என் பெயரைச் சொல்லப் போகிறான்.

"அவர் பெயர் க..." என்று அவன் சொல்ல ஆரம்பிக்க, பொசுக்கென்று மின்சாரம் போய் விட்டது.

கனகசபை என்கிற என் பெயரையும் நான் தமிழாசிரியராகப் பணியாற்றிய செங்கல் பட்டுக்குப் பக்கத்தைய ஊர்ப் பெயர், பள்ளியின் பெயர் எல்லாம் சொல்லியிருப்பானே. இந்த இழவெடுத்த மின்தடைக்கு

நினைவு அறக்கட்டளை

இவற்றுள் அமரர் கல்கி படித்த மூன்று பள்ளிக் கூடங்களில் மூன்று மாணவர்களுக்கு மூன்று உதவித் தொகைகள் ஒதுக்கப்படுகின்றன. மீதமுள்ள உதவித் தொகையைப் பெற மாணவர்கள் விண்ணப்பிக்க லாம்.

- விண்ணப்பங்களை மாணவர்கள் தங்கள் கைப்பட எழுத வேண்டும். பார்வையற்ற மாணவர்களுக்கு மட்டும் இதில் விதிவிலக்கு உண்டு.
- தபால் மூலம் மட்டுமே அனுப்பலாம்.
- அரசு அங்கீகாரம் பெற்ற ஒரு கல்வி நிலையத்தில் சேர்ந்து படிக்க அனுமதி பெற்றிருக்க வேண்டும்.
- படிப்பில் சிறந்தவர்களாக விளங்கி, பெற்றோர் உதவியுடன் மட்டுமே கல்வியைப் பின்தொடர முடியாத நிலையில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாக இருக்க வேண்டும்.
- மேற்கூறிய அனைத்தையும் உறுதிப்படுத்த கல்வி நிலையத்தின் முதல்வருடைய சான்றிதழை இணைக்கவும்.
- சென்ற கல்வி ஆண்டின் இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண் நகலை முதல்வருடைய கையொப்பத்துடன் அனுப்பவும்.
- ஊனமுற்றவர்கள் மேற்படி சான்றிதழ்கள் தவிர, தங்கள் ஊனம் பற்றிய விவரத்தையும் முதல்வருடைய சான்றிதழாக அனுப்புதல் வேண்டும். இத்தகையோருக்கு முன்னுரிமை உண்டு.

நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும். தேவைப்படாத சான்றிதழ்களை அனுப்ப வேண்டாம்.

உதவித் தொகை பெறத் தகுதியுடைய மாண வர்களைத் தேர்ந்தெடுப்பதில் அறங்காவலர்களின் முடிவே இறுதியானது.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு விவரம் தெரிவிக்கப்படும். மற்றபடி கடிதப் போக்குவரத்து கிடையாது. சான்றிதழ்களைத் திருப்பி அனுப்பு வதற்கில்லை.

விண்ணப்பங்கள் வந்து சேரக் கடைசி தேதி : ஜூலை 31, 2000.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி :

நிர்வாக அறங்காவலர்,
கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை,
நெ. 1, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

வேறு நேரம் கிடைக்கவில்லையா? சே!

அடுத்த நான்கைந்து நாட்கள் நான் வீட்டில் கிடந்த எல்லாப் பழைய பத்திரி கைகளையும் பிரித்துப் பிரித்து மதியழகனின் படைப்புகள் வந்துள்ளனவா என்று தேடிப் படித்தேன். அவை நன்றாக இருந்தனவா அல்லது சுமார் ரகம்தானா என்று இனம் பிரிக்க முடியாதபடி, என்னுடைய மாண வன் - அதுவும் என்னை இன்னும் ஞாபகத் தில் நன்றியுடன் நினைத்திருக்கும் மாண வனின் எழுத்தாயிற்றே என்கிற முற்சாய்வு எண்ணம் மேலோங்கி நின்றது. ஒவ்வொரு படைப்பிலும் எங்காவது ஓரிடத்தில் என்னு டைய சாயல் இருக்கிறதா என்கிற ஆரா ய்வும் கூடவே செய்வதைத் தவிர்க்க முடியவில்லை.

எந்தப் பத்திரிகையிலாவது அவனைப் பற்றியக் குறிப்புகள் போட்டிருக்கிறார்களா என்று தேடி ஓய்ந்தேன். ஏதாவது பத்திரிகை முகவரிக்கு அவன் பெயரில் கடிதம் எழுதிக் கேட்கலாமா, அல்லது சென்னைக்கு ஏதாவது வாய்ப்பில் போக நேர்ந்தால் முகவரி அறிந்து நேரில் போய்ச் சந்தித்து

விடலாமா என்றெல்லாம் எண்ண ஓட்டங்கள்.

"என்னாச்சு உங்களுக்கு? எதையோ பறிகொடுத்திட்டுத் தேடற மாதிரி தெரியறது" என்று கேட்ட மகனிடம் அந்தத் தொலைக்காட்சிப் பேட்டி குறித்து உளற இருந்து சுதாரித்தேன்.

இவனிடம் சொல்வதால் என்ன பயன்? பேட்டியின் முக்கியப் பகுதியை நானே கேட்டிருக்கவில்லை. அது தெரிந்தால் இவன் இகழ்ச்சியாய்ப் புன்னகைப்பான். 'பெரிய ஆளுங்கள்லாம் பேட்டின்னு சொல்றதுல பல விஷயங்கள் மிகைப்பட்டதா இருக்கும். சுவையா இருக்கறதுக்காக கொஞ்சம் பொய் கூடச் சேர்த்துச் சொல்லுவாங்க. அதையெல்லாம் அப்படியே எடுத்துக்கிட்டு உங்களையே ஏமாத்திக்கக் கூடாது' என்று அறிவுரை சொல்ல ஆரம்பிப்பான். புத்தகமே படிக்காத மருமகள் 'அந்த எழுத்தாளர் நாகர்கோவில்காரர், அவர் படிச்சது எல்லாம் அங்கேதான்னு ஒரு பத்திரிகைல படிச்சிருக்கேன், உங்க அப்பாகிட்ட சொல்லி வைங்க, நம்மிடம் சொன்னதை வெளி ஆட்கள் யாரிடமாவது சொல்லிடப் போறார்; எல்லோரும் நம்மைப் பார்த்துச் சிரிக்கப் போறாங்க' என்று ஜாடையாய்க் கேலி பேசுவாள்.

சரி, அந்த எழுத்தாளன் உன் பழைய மாணவன்தான் என்று நினைத்துக் கொள்வதில் சந்தோஷம் கிடைக்குது என்றால் அப்படியே இருந்துவிட்டுப் போகட்டுமே, விடேன் என்று உள்ளூர ஒரு குரல் சொன்னாலும் விட முடியவில்லை. யாராவது ஒருவர் அந்தப் பேட்டியை முழுவதுமாகப் பார்த்தவராக 'என்ன கனகசபை சார், எழுத்தாளர் மதியழகன் உங்க பழைய ஸ்டூடன்ட்டாமே. உங்களைப் பற்றி இவ்வளவு பெருமையா சொல்றார் பேட்டிகல்ல' என்று சொன்னால் மனம் திருப்தி அடையும் என்று பட்டது.



பின்னொரு நாளின் விடுமுறை மாலையில் தொலைக்காட்சி முன் அமர்ந்து தொலை இயக்கியால் அலைவரிசைகளை மாற்றி மாற்றி விளையாடிக் கொண்டிருந்த மகன், திடீரென்று குரல் கொடுத்தான், ''எல்லோரும் வாங்க. என் ஃபேவரிட் ரைட்டர் மதியழகனின் பேட்டி'' என்று.

வேகமாக ஓடினோம். எனக்குத் தெரிந்து விட்டது அதே பேட்டியின் மறு ஒளிபரப்புதான் என்று.

எனக்குள் தடங்தடங் என்று ரயில் ஓடும் ஓசை. எவ்வளவு முயன்றும் இயல்பாய் இருக்க முடியவில்லை. இம்முறை தெரிந்துவிடும், அவன் என்னுடைய மாணவன் தானா என்று.

அமர்ந்திருப்பவர்கள் பாராட்டு மழையை என் மீது பொழியவோ, கேலிச் சகதியில் அழுத்தவோ காத்திருப்பது போன்ற எண்ணத்தை என்னால் தவிர்க்க முடியவில்லை. லேசாக மூச்சுத் திணறுவது போல் உணர்ந்தேன்.

மெல்ல எழுந்து வீட்டின் முன்பகுதிக்குச் சென்று உட்கார்ந்து கொண்டேன். அதுவும் சரிப்படாமல் விறுவிறுவென்று தெருவில் இறங்கி நடக்க ஆரம்பித்தேன். குறைந்தது ஒரு மணி நேரம் கழித்துத்தான் வீடு திரும்ப வேண்டும். ○

புரொபசர் கிளிண்டன்!

அமெரிக்க அதிபர் பதவிக்காலம் முடிந்த பின், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் மாணவர்களுக்கு பாடம் நடத்தப் போகிறார் கிளிண்டன். முப்பதாண்டுகளுக்குமுன் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் படித்த கிளிண்டனுக்கு 1994ல் அப்பல்கலைக் கழகம் கௌரவ டாக்டர் பட்டம் அளித்துப் பெருமைப்படுத்தியது. விசிடிங் புரொபசராக அவ்வப்போது வந்து பாடம் நடத்த வேண்டும் என்ற பல்கலைக் கழகத்தின் வேண்டுகோளைக் கிளிண்டன் ஒப்புக் கொண்டு விட்டார்!

-சி.எம்.



டாக்டரா? ஹிட்லரா?

'தென்னாப்பிரிக்காவில் இனவெறிக் கொள்கை நீக்கப்பட்டு விட்டது' என்கிற நல்ல செய்தி, பல வருடங்களுக்கு முன்பே வந்து விட்டது. என்றாலும் ஹிட்லரின் சர்வாதிகார ஆட்சியில் நடைபெற்ற கொடூரங்களுக்குச் சற்றும் குறையாத வகையில் தென்னாப்பிரிக்காவிலும் அநியாயங்கள் நடந்துள்ளன என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறது டாக்டர் ஓபர் பாஸன் என்பவர் மீது நடந்து கொண்டிருக்கும் விசாரணை!

அங்கோலா, மொஸாம்பிக், நமீபியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த புரட்சியாளர்கள் தென்னாப்பிரிக்காவின் இனவெறிக் கொள்கைக்கு எதிராகப் போரிட்ட சமயம் அது. அப்போது தென்னாப்பிரிக்க ராணுவத்தில் மருத்துவப் பிரிவில் பணியாற்றி வந்தார் பாஸன். போதை மருந்து தயாரிப்பு – விற்பனை, ஏமாற்றுதல் போன்ற சில காரணங்களைக் கூறி ஜனாதிபதி கிளார்க் தலைமையில் ஆன தென்னாப்பிரிக்க அரசு இவரை வேலை நீக்கம் செய்தது. (ஆனால், இப்போது அரசு மருத்துவமனையில் அவர் மீண்டும் பணியாற்றி வருகிறார்.)

கறுப்பர் இன வளர்ச்சியைக் குறைக்கும் வகையில், அவர்களுக்கு வாரிசு ஏற்படாமல் தடுக்க அவர்களின் உடலில் தாம் கண்டுபிடித்த மருந்தை இவர் உட்செலுத்தினார் என்று கூட இந்த வழக்கில் சில சாட்சிகள் குறிப்பிட்டுள்ளனர்.

சுமார் இருநூறு அரசியல் பகைவர்களைத் தமது நச்சு மருந்துகளால் இந்த டாக்டர் இறக்க வைக்க, அவர்களது சடலங்கள் கடலில் தூக்கியெறியப்பட்டன என்று கூறியுள்ளார் இன்னொரு சாட்சி! கறுப்பர்கள் நிறைந்துள்ள பகுதியில் உள்ள நீர்த் தொட்டிகளில் கலக்க, நச்சு மருந்தை இவர் தயாரித்துக் கொடுத்தார் என்று சத்தியம் செய்கிறார்கள் அப்ரூவர்களாக மாறிவிட்ட சில குற்றவாளிகள்.

அத்தனை குற்றச்சாட்டுகளையும் இந்த டாக்டர் மறுக்கிறார் என்றாலும் சந்தர்ப்ப சாட்சியங்கள் இவருக்குப் பெரும் பாதகமாக உள்ளன.

டாக்டர் பாஸன் வேறு ஒரு தீவிர ஆலோசனையையும் தமது நண்பர்களுடன் செய்ததாகச் செய்திகள் வருகின்றன. நெல்சன் மண்டேலா சிறையிலிருந்து விடுவிக்கப்படுவதற்கு முன் அவர் உடலில் நோயை உண்டாக்கும் கிருமி எதையாவது செலுத்தி விடலாமா என்பதே அது!

விசாரணை நடந்து கொண்டிருக்கிறது இப்போது. முடிவு?

அது இழுக்கும், இன்னும் சில ஆண்டுகளுக்கு!

— ஜி.எஸ்.எஸ்.



S.V.முதியோர் இல்லம்



இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED
#8, Janakiraman Colony, Near Arumbakkam Bus Stand,
Arumbakkam, Chennai - 600 106.
Phone: 475 5700; 475 1356. Pager : 9610 - 114668
Web Page : http/www.chennaibiz.com/svhome
Email: svhome@chennaibiz.com

"5 வருட இடுப்பு வலியிலிருந்து ஆப்ரேஷன் இன்றி குணமடைந்தேன்!!!"



Lakshmi Iyer

ஸ்ரீமதி. லக்ஷ்மிஐயர்,
மேட்டூர்டேம் R.S.,
சேலம் மாவட்டம்,
தமிழ்நாடு.

கடந்த ஐந்து வருடங்களாக இடுப்பில் வலி இருந்து வந்தது. இதனால் குனிந்து நிமிரும் பொழுதும், சிறிது தூரம் நடக்கும் பொழுதும், உட்கார்ந்து எழுந்திருக்கும் பொழுதும், மாடிப்படி ஏறி இறங்கும்பொழுதும் , பிடிப்புடன் கூடிய வலி இருந்தது. ஆங்கில மருத்துவரிடம் சென்று **C.T. Scan** எடுத்துப் பார்த்த போது, இடுப்பில் கடைசி இரண்டு எலும்புகள் விலகி இருப்பதாக கூறினார்கள் **(L4, L5, DISC PROLAPSE)** இதற்கு சில மருந்துகளையும், இடுப்பில் போட்டு கொள்வதற்கு **Belt**-ம் எழுதிக் கொடுத்தார்கள். இருப்பினும் வலி நிற்கவில்லை. பின்பு ஆப்ரேஷன் **(Operation)** செய்தால் குணமடையும் என்று கூறினார்கள் அப்பொழுது **"MARC HERBAL CARE(P)LTD."** நிறுவனத்தின் விளம்பரத்தை செய்தித்தாள்களில் கண்டு நானும் எனது கணவரும் அங்கு சென்றோம். டாக்டரின் ஆலோசனைபடி அவர்கள் கொடுத்த மூலிகை பவுல்டிசை (Poultice) வெளிப்பிரயோகமாக தினமும் தவறாமல் தடவி வந்தேன். 9 வார தொடர்ச்சியான சிகிச்சைக்குப் பிறகு தற்பொழுது எனது வலிகள் அனைத்தும் நீங்கி பரிபூரண நிவாரணம் அடைந்தேன். நன்றி.

- ★ காலம் காலமாக வேதமகரிஷிகள் சித்தர்கள் கண்டுபிடித்து பரிசோதித்து அனுபவப்பட்டு வெற்றிகண்ட ஆயுர்வேத மூலிகை மருத்துவமுறைப்படி எங்களது நிறுவனம் ஒரு வெளிப்பிரயோக மூலிகை பவுல்டிசை (Poultice) கொண்டு ஆர்த்திரைட்டீஸ், ஸ்பாண்டிலைட்டீஸ், தோள்பட்டை வலி, முதுகுவலி, குதிக்கால்வலி, கைகால் மூட்டுவலி ஆகியவைகளுக்கு தகுதிவாய்ந்த அனுபவம் மிக்க ஆயுர்வேத, சித்தா மற்றும் அலோபதி மருத்துவர்களின் மேற்பார்வைகளின் கீழ் சிகிச்சை அளித்து வருகிறோம்.
- ★ ஒரு வரைப்போல் மற்றொருவரது உடல்வாகு இருப்பது இல்லை என்பது யாவரும் அறிந்த உண்மை எனவே கால மாற்ற விளைவுகளால் மனிதனின் உடல்வாகில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப சிகிச்சையும் பலன்களும் வேறுபடலாம் என்பதை **MARC HERBAL CARE (P) LTD** நன்கு உணர்ந்துள்ளன.

கலந்து ஆலோசிக்க
இப்போதே
தொடர்பு கொள்க.
தொலைபேசி
0413-346683

காலை 9 மணி முதல், இரவு 7 மணி வரை
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.

MARC ஹெர்பல் கேர் (பி) லிமிடெட்
32, செயின்ட் தெரெஸ் வீதி, பாண்டிச்சேரி – 1
(ராமன் தியேட்டர் எதிர் வீதி, சுபார்சுன் பேக்கரி எதிரில்)
Fax : 91 - 0413 - 346683



ஒன்பதாம் அத்தியாயம்

கரை உடைந்தது!

பழுவேட்டரையரின் மனத்தில் குடி கொண்டிருந்த வேதனையைப் படகிலே இருந்த மற்றவர்கள் உணரக்கூட வில்லை. புயற்காற்றில் படகு அகப்பட்டுக் கொண்டதன் காரணமாகவே அவர் அவ்வளவு சங்கடப்படுவதாக நினைத்தார்கள். பெரிய பழுவேட்டரையர் மனோ தைரியத்தில் நிகரற்றவர் எனப் பெயர் வாங்கியிருந்தவர். அவரே இவ்வளவு கலங்கிப் போனதைப் பார்த்து மற்றவர்களின் மனத்திலும் பீதி குடி கொண்டது. எந்த நேரம் படகு கவிழுமோ என்று எண்ணி, அனைவரும் தப்பிப் பிழைப்பதற்கு வேண்டிய உபாயங்களைப் பற்றி யோசித்துக்கொண்டிருந்தார்கள்.

கடைசியாக, வெகு நேரம் படகு தவித்துத் தத்தளித்த பிறகு, கரை ஏற வேண்டிய துறைக்கு அரைக் காத தூரம் கிழக்கே சென்று, படகு கரையை அணுகியது. "இனிக் கவலை இல்லை" என்று எல்லாரும் பெருமூச்சு விட்டார்கள். அச்சமயத்தில் நதிக்கரையில் புயற் காற்றினால் பேயாட்டம் ஆடிக்கொண்டிருந்த மரங்களில் ஒன்று தடார் என்று முறிந்து விழுந்தது. முறிந்த மரத்தைக் காற்று தூக்கிக்கொண்டு வந்து படகின் அருகில் தண்ணீரில் போட்டது. படகைத் திருப்பி அப்பால் செலுத்துவதற்கு

அமரர் கல்கி

ஓடக்காரர்கள் பெருமுயற்சி செய்தார்கள். பலிக்கவில்லை. மரம் அதிவேகமாக வந்து படகிலே மோதியது. படகு தடால் என்று கவிழ்ந்தது. மறுகணம் படகில் இருந்தவர்கள் அனைவரும் தண்ணீரில் விழுந்து மிதந்தார்கள்.

மற்றவர்கள் எல்லாரும் படகு கவிழ்ந்தால் தப்பிப் பிழைப்பது பற்றியே எண்ணிக்கொண்டிருந்தார்களாதலால் அவ்வாறு உண்மையில் நிகழ்ந்து விட்டதும், அந்த அபாயத்திலிருந்து சமாளிப்பதற்கு ஓரளவு ஆயத்தமாயிருந்தார்கள். கரையை நெருங்கிப் படகு வந்துவிட்டிருந்தபடியால் சிலர் நீந்திச் சென்று கரையை அடைந்தார்கள். சிலர் மரங்களின் மீதும் தொத்திக்கொண்டு நின்றார்கள். சிலர் கையில் அகப்பட்டதைப் பிடித்துக்கொண்டு தண்ணீரில் மிதந்துகொண்டிருந்தார்கள்.

ஆனால் பழுவேட்டரையர் வேறு சிந்தனைகளில் ஈடுபட்டிருந்தபடியால், படகுக்கு நேர்ந்த விபத்தை எதிர்பார்க்கவே இல்லை. படகு கவிழ்ந்ததும் தண்ணீரில் முழுகி விட்டார். அவரைப் பிரவாகத்தின் வேகம் வெகு தூரம் அடித்துக்கொண்டு போய்விட்டது. சிலமுறை தண்ணீர் குடித்து, மூக்கிலும் காதிலும் தண்ணீர் ஏறி, திணறித் தடுமாறி, கடைசியில் ஒருவாறு சமாளித்துக்கொண்டு, அவர் பிரவாகத்துக்கு மேலே வந்தபோது படகையும் காணவில்லை; படகில் இருந்தவர்கள் யாரையும் காணவில்லை. அதுமட்டுமல்லாமல், வெள்ளம் தம்மை அந்த மாநதியின் மத்தியப் பிரதேசத்தை நோக்கி இழுத்துக்கொண்டு போவதைப் பழுவேட்டரையர் அறிந்தார்.

உடனே அந்தக் கிழவரின் நெஞ்சில் பழைய திரத்துவம் தளிர்த்து எழுந்தது. எத்தனையோ போர்களில் மிக ஆபத்தான நிலைமைகளில் துணிவுடன் போராடி வெற்றி பெற்ற அந்த மாபெரும் வீரர் இந்தக் கொள்ளிடத்து வெள்ளத்துடனும் போராடி வெற்றி கொள்ளத் தீர்மானித்தார். சுற்றுமுற்றும் பார்த்தார்; சமீபத்தில் மிதந்து வந்த ஒரு மரக் கட்டையை எட்டிப் பிடித்துக்கொண்டார். கரையைக் குறி வைத்து நீந்தத் தொடங்கினார். வெள்ளத்தின் வேகத்துடனும் புயலின் வேகத்துடனும் ஏககாலத்தில் போராடிக்கொண்டே நீந்தினார். கை சளைத்தபோது சிறிது நேரம் வெறுமனே மிதந்தார். பலமுறை நதிக் கரையை ஏற முயன்றபோது மழையினால் சேறாகியிருந்த கரை அவரை மறுபடியும் நதியில் தள்ளிவிட்டது. உடனே, விட்டு விட்ட கட்டையைத் தாவிப் பிடித்துக்கொண்டார்.

இவ்விதம் இருட்டி ஒரு ஜாமத்துக்கு மேலாகும் வரையில் போராடிய பிறகு, நதிப் படுகையில் நாணற்காடு மண்டி வளர்ந்திருந்த ஓரிடத்தில், அவருடைய கால்கள் தரையைத் தொட்டன. பின்னர், வளைந்து கொடுத்த நாணற் புதர்களின் உதவியைக்கொண்டு அக்கிழவர் தட்டுத் தடுமாறி நடந்து, கடைசியாகக் கரை ஏறினார்.

அவரைச் சுற்றிலும் கானாந்தகாரம் சூழ்ந்திருந்தது. பக்கத்தில் ஊர் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. திருவையாற்றுக்கு எதிரில் கரை ஏற வேண்டிய ஓடத் துறைக்குச் சுமார் ஒன்றரைக் காத தூரம் கிழக்கே வந்திருக்க வேண்டுமென்று தோன்றியது. ஆம், ஆம்! குடந்தை நகருக்கு அருகிலேதான் கரையேறியிருக்க வேண்டும். இன்றிரவு எப்படியாவது குடந்தை நகருக்குப் போய்விட முடியுமா...?

புயல் அப்போதுதான் பூரண உக்கிரத்தை அந்தப் பிரதேசத்தில் அடைந்திருந்தது. நூறாயிரம் பேய்கள் சேர்ந்து சத்தமிடுவது போன்ற பேரோசை காதைச் செவிடுபடச் செய்தது. மரங்கள் சடசடவென்று முறிந்து விழுந்தன. வானத்தில் அண்ட கடாகங்கள் வெடித்து விடுவது போன்ற இடி முழக்கங்கள் அடிக்கடி கேட்டன. பெருமழை சோவென்று கொட்டியது.

"எங்கேயாவது பாழடைந்த மண்டபம் அல்லது பழைய கோயில் இல்லாமலா போகும்? அதில் தங்கி இரவைக் கழிக்க வேண்டியதுதான். பொழுது விடிந்த பிறகுதான் மேலே நடையைத் தொடங்க வேண்டும்'' என்று முடிவு கட்டிக்கொண்டு, தள்ளாடி நடுங்கிய கால்களை ஊன்றி வைத்த வண்ணம் நதிக்கரை

யோடு நடந்து சென்றார்.

நதியில் கரையின் விளிம்பைத் தொட்டுக்கொண்டு வெள்ளம் போய்க்கொண்டிருந்தது. மழை பெய்த படியால் கரை மேலேயும் ஓரளவு தண்ணீராயிருந்தது. இருட்டைப் பற்றியோ சொல்ல வேண்டியதாயில்லை. ஆகவே, அந்த வீரக் கிழவர் நடந்து சென்றபோது, தம் எதிரிலே நதிக்கரையின் குறுக்கே கொஞ்சம் தண்ணீர் அதிகமாக ஓடியதைப் பற்றி அதிக கவனம் செலுத்தவில்லை. திடீரென்று முழங்கால் அளவு ஜலம் வந்துவிட்டதும், சற்றுத் தயங்கி யோசித்தார். தொடையளவு ஜலம் வந்ததும் திடுக்கிட்டார். அதற்கு மேலே யோசிப்பதற்கு அவகாசமே இருக்கவில்லை. மறுகணம் அவர் தலைகுப்புறத் தண்ணீரில் விழுந்தார். கொள்ளிடத்தின் கரை உடைத்துக்கொண்டு அந்த இடத்தில் தெற்கு நோக்கிப் பாய்ந்துகொண்டிருந்த வெள்ளம் அவரை உருட்டிப் புரட்டி அடித்துக்கொண்டு போயிற்று. கரைக்கு அப்பால் பள்ளமான பிரதேசமானபடியால், அவரை ஆழமாக, இன்னும் ஆழமாக, அதல பாதாளத்துக்கே அடித்துக்கொண்டு போவது போலிருந்தது. படகு கவிழ்ந்து நதியில் போய்க்கொண்டிருந்த வெள்ளத்தில் மூழ்கியபோது அவர் சற்று எளிதாகவே சமாளித்துக்கொண்டார். இப்போது அவ்விதம் முடியவில்லை. உருண்டு புரண்டு, உருண்டு புரண்டு கீழே கீழே போய்க்கொண்டிருந்தார். கண் தெரியவில்லை; காது கேட்கவில்லை; நிமிர்ந்து நின்று மேலே வரவும் முடியவில்லை. மூச்சுத் திணறியது. யாரோ ஒரு பயங்கர ராட்சதன் அவரைத் தண்ணீரில் அமுக்கி, அமுக்கித் தலை குப்புறப் புரட்டிப் புரட்டி, அதேசமயத்தில் பாதாளத்தை நோக்கி இழுத்துக்கொண்டு போனான். ஆகா! அந்த ராட்சதன் வேறு யாரும் இல்லை! கொள்ளிடத்தின் கரையை உடைத்துக்கொண்டு, உடைப்பின் வழியாக அதிவேகமாகப் பாய்ந்த வெள்ளமாகிய ராட்சதன்தான்! அவனுடைய கோரமான பிடியிலிருந்து, பயங்கரமான உருட்டலிலிருந்து, தப்பிப் பிழைக்க முடியுமா? கால் தரையில் பாவவில்லையே? கைக்குப் பிடி எதுவும் அகப்படவில்லையே? மூச்சுத் திணறுகிறதே? கழுத்தைப் பிடித்துத் திருகுவது போலிருக்கிறதே? காது செவிடுபடுகிறதே...! துர்க்கா பரமேசுவரி! தேவி! நான் இந்த விபத்திலிருந்து பிழைப்பேனா...! அடிபாவி! நந்தினி! உன்னால் எனக்கு நேர்ந்த கதியைப் பார்! ஐயோ! பாவம்! உன்னை அந்த தூர்த்தர்கள் மத்தியில் விட்டு விட்டு வந்தேனே? சிச்சி! உன் அழகைக் கண்டு மயங்கி, உன் நிலையைக் கண்டு இரங்கி, உன்னை மணந்து கொண்டதில் நான் என்ன சுகத்தைக் கண்டேன்? மன அமைதியை இழந்ததைத் தவிர வேறு என்ன பலனை அனுபவித்தேன்? கடைசியில், இப்படிக் கொள்ளிடத்து உடைப்பில் அகப்பட்டுத் திணறித் திண்டாடிச் சாகப் போகிறேனே! அறுபத்து நாலு போர்க் காயங்களைச் சுமந்த என் உடம்பைப் புதைத்து வீரக் கல் நாட்டிப் பள்ளிப்படை கட்டப் போவதில்லை! என் உடலை யாரும் கண்டெடுக்கப் போவதுகூட இல்லை! எங்கேயாவது படுபள்ளத்தில் சேற்றில் புதைந்து விடப் போகிறேன்! என் கதி என்ன ஆயிற்று என்று கூட யாருக்கும் தெரியாமலே போய்விடப் போகிறது! அல்லது எங்கேயாவது கரையிலே கொண்டு போய் என் உடம்பை இவ்வெள்ளம் ஒதுக்கித் தள்ளிவிடும்! நாய் நரிகள் பிடுங்கித் தின்று பசியாறப் போகின்றன...!

சில நிமிட நேரத்திற்குள் இவை போன்ற எத்தனையோ எண்ணங்கள் பழுவேட்டரையர் மனத்தில் தோன்றி மறைந்தன. பின்னர் அடியோடு அவர் நினைவை இழந்தார்...

திடார் என்று தலையில் ஏதோ முட்டியதும் மீண்டும் சிறிது நினைவு வந்தது. கைகள் எதையோ, - கருங்கல்லையோ, கெட்டியான தரையையோ, - பிடித்துக் கொண்டிருந்தன. ஏதோ ஒரு சக்தி, அவரை மேலே கொண்டு வந்து உந்தித் தள்ளியது. அவரும் மிச்சமிருந்த சிறிது

சக்தியைப் பிரயோகித்து, கரங்களை ஊன்றி மேலே எழும்பிப் பாய்ந்தார். மறுநிமிடம், கெட்டியான கருங்கல் தரையில் அவர் கிடந்தார். கஷ்டப்பட்டுக் கண்களைத் திறக்கப் பிரயத்தனப்பட்டார். இறுக அமுங்கிக்கிடந்த கண்ணிமைகள் சிறிது திறந்ததும், எதிரே தோன்றிய ஜோதி அவருடைய கண்களைக் கூசச் செய்தது. அந்த ஜோதியில் துர்க்கா பரமேசுவரியின் திருமுக மண்டலம் தரிசனம் தந்தது! தேவி! உன் கருணையே கருணை! என்னுடைய அமைதியற்ற மண்ணுலக வாழ்வை முடித்து விண்ணுலகில் உன்னுடைய சந்நிதானத்துக்கே அழைத்துக் கொண்டாய் போலும்...!

இல்லை, இல்லை! இது விண்ணுலகம் இல்லை. மண்ணுலகத்திலுள்ள அம்மன் கோவில். எதிரே தரிசனம் அளிப்பது அம்மனுடைய விக்கிரகம். தாம் விழுந்து கிடப்பது கர்ப்பக் கிருஹத்தை அடுத்துள்ள அர்த்த மண்டபம். அம்மனுக்கு அருகில் முணுக், முணுக்கென்று சிறிய தீபம் எரிந்து கொண்டிருக்கிறது. அதன் வெளிச்சந்தான் சற்று முன் தம் கண்களை அவ்வளவு கூசும்படி செய்தது! வெளியிலே இன்னும் 'சோ' என்று மழை கொட்டிக்கொண்டிருக்கிறது. புயலும் அடித்துக்கொண்டிருக்கிறது. அவ்வளவு புயலும் மழையும் தேவி கோவிலின் கர்ப்பக்கிருஹத்தில் ஒளிர்ந்த தீபத்தை அசைக்க முடியவில்லை! இது ஒரு நல்ல சகுனமோ? துர்க்கா பரமேசுவரி தம்மிடம் வைத்துள்ள கருணைக்கு அறிகுறியோ? எத்தனை பெரிய விபத்துக்கள் வந்தாலும் தமது ஜீவன் மங்கி விடாது என்று எடுத்துக்காட்டுவது போல அல்லவா இருக்கிறது! ஜகன் மாதாவின் கருணையே கருணை! தமது பக்தியெல்லாம், தாம் செய்த பூசனை எல்லாம் வீண் போகவில்லை...

கிழவர் தட்டுத் தடுமாறி எழுந்து நிற்க முயன்றார். அவர் உடம்பு நடுங்கியது. வெகு நேரம் வெள்ளத்திலேயே கிடந்தபடியால் உடம்பு சில்லிட்டு நடுங்குவது இயல்புதான் அன்றோ? அம்மன் சந்நிதியில் திரை விடுவதற்காகத் தொங்கிய துணியை எடுத்து உடம்பை நன்றாகத் துடைத்துக்கொண்டார். தமது ஈரத் துணியைக் களைந்து எறிந்துவிட்டுத் திரைத் துணியை அரையில் உடுத்திக் கொண்டார்.

அம்மன் சந்நிதியில் உடைத்த தேங்காய் மூடிகள், பழங்கள், நிவேதனத்துக்கான பொங்கல் பிரசாதங்கள் - எல்லாம் வைத்திருப்பதைக்





கண்டார். தேவிக்குப் பூஜை செய்வதற்காக வந்த பூசாரியும் பிரார்த்தனைக்காரர்களும் எல்லாவற்றையும் அப்படியே போட்டு விட்டு ஓடிப் போயிருக்க வேண்டும். ஏன் அவர்கள் அப்படி ஓடினார்கள்? புயலுக்கும் மழைக்கும் பயந்து ஓடினார்களா? அல்லது கொள்ளிடத்துக் கரையில் உடைப்பு ஏற்பட்டுவிட்டதைப் பார்த்து விட்டு ஓடினார்களா? எதுவாயிருந்தாலும் சரி. தாம் செய்த புண்ணியந்தான்! துர்க்கா பரமேசுவரி தம்மை உடைப்பு வெள்ளத்திலிருந்து காப்பாற்றியது மட்டுமல்ல; தம்முடைய பசி தீருவதற்குப் பிரசாதமும் வைத்துக்கொண்டு காத்திருக்கிறாள்...

இன்றிரவை இந்தக் கோயிலிலேயே கழிக்க வேண்டியதுதான். இதைக் காட்டிலும் வேறு தக்க இடம் கிடைக்கப் போவதில்லை. உடைப்பு வெள்ளம் இந்தச் சிறிய கோவிலை ஒட்டித்தான் பாய்ந்து செல்ல வேண்டும். அதனால் கோயிலுக்கே ஆபத்து வரலாம். கோயிலைச் சுற்றிலும் வெள்ளம் குழி பறித்துக்கொண்டிருக்கும். அஸ்திவாரத்தையே தகர்த்தாலும் தகர்த்து விடும். ஆயினும் இன்று இரவுக்குள்ளே அப்படி ஒன்றும் நேர்ந்து விடாது. அவ்விதம் நேர்வதாயிருந்தாலும் சரிதான். அன்றிரவு அந்தக் கோவிலை விட்டுப் போவதற்கில்லை. உடம்பில் தெம்பு இல்லை; உள்ளத்திலும் சக்தி இல்லை...

பய பக்தியுடன் பழுவேட்டரையர் தேவியின் சந்நிதானத்தை நெருங்கினார். அங்கிருந்த பிரசாதங்களை எடுத்து வேண்டிய அளவு அருந்தினார். மிச்சத்தைப் பத்திரமாக வைத்து மூடினார்.

தேவியின் முன்னிலையில் நமஸ்காரம் செய்யும் பாவனையில் படுத்தார். கண்களைச் சுற்றிக் கொண்டு வந்தது. சிறிது நேரத்துக்குள் பழுவேட்டரையர் பெருந் துயிலில் ஆழ்ந்து விட்டார்.

பத்தாம் அத்தியாயம்

கண் திறந்தது!

முதலில் நதி வெள்ளத்திலும், பின்னர் உடைப்பு வெள்ளத்திலும் அகப்பட்டுத் திண்டாடியபடியால் பெரிதும் களைப்படைந்திருந்த பழுவேட்டரையர் வெகு நேரம் நினைவற்று, உணர்ச்சியற்று, கட்டையைப் போல் கிடந்து தூங்கினார். வேண்டிய அளவு தூங்கிய பிறகு, இலேசாக நினைவுகளும் கனவுகளும் தோன்றின. ஒருசமயம் துர்க்கா பரமேசுவரி கோவில் விக்கிரகத்திலிருந்து புறப்பட்டு நாலு அடி எடுத்து வைத்து நடந்து அவர் அருகில் வந்தாள். அனல் வீசிய கண்களினால் அவரை உற்று நோக்கிய வண்ணம் திருவாய் மலர்ந்தாள்:

"அடே, பழுவேட்டரையா! நீயும் உன் குலத்தாரும் தலைமுறை தலைமுறையாக எனக்கு வேண்டியவர்கள். ஆகையால் உனக்கு எச்சரிக்கிறேன். உன்னுடைய அரண்மனையில் நீ கொண்டு வைத்திருக்கிறாயே, அந்த நந்தினி என்பவள் மனிதப் பெண் உருக்கொண்ட ராட்சசி. உன்னுடைய குலத்தையும் சோழர் குலத்தையும் வேரோடு அழித்துப் போடுவதற்காக வந்தவள். அதற்குச் சரியான சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாள். அவளை உன் அரண்மனையிலிருந்தும் உன் உள்ளத்திலிருந்தும் அப்புறப்படுத்தி விட்டு மறு காரியம் பார்! இல்லாவிட்டால், உனக்கும் உன் குலத்துக்கும் என்றும் அழியாத அபகீர்த்தி ஏற்படும்...!"

பழுவேட்டரையர் திடுக்கிட்டு எழுந்தார். அவர் உடம்பு கிடுகிடென்று நடுங்கிக்கொண்டிருந்தது. தாம் கண்டது கனவுதான் என்று நம்புவது அவருக்குச் சிரமமாகவே இருந்தது. ஆயினும் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டார்.

பொழுது நன்றாக விடிந்திருந்தது. புயலின் உக்கிரம் தணிந்திருந்தது. மழை நின்று போயிருந்தது. 'சோ' என்ற சத்தம் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது. கோவில் வெளி மண்டபத்தின் விளிம்பின் அருகில் வந்து நின்று சுற்று முற்றும் பார்த்தார். அவர் கண்ட காட்சி உற்சாகமளிப்பதாக இல்லை.

கொள்ளிடத்தின் உடைப்பு இதற்குள் மிகப் பெரிதாகப் போயிருந்தது. நதி வெள்ளத்தில் ஏறக்குறையப் பாதி அந்த உடைப்பின் வழியாகக் குபுகுபுவென்று பாய்ந்து கொண்டிருந்ததாகத் தோன்றியது. கிழக்குத் திசையிலும் தெற்குத் திசையிலும் ஒரே வெள்ளக்காடாக இருந்தது. மேற்கே மட்டும் கோவிலை அடுத்துச் சிறிது தூரம் வரையில் வெள்ளம் சுழி போட்டுக் கொண்டு துள்ளிக் குதித்துக் கொண்டு போயிற்று. அப்பால் குட்டை மரங்களும் புதர்களும் அடர்ந்திருந்த காட்டுப் பிரதேசம் வெகு தூரத்துக்குக் காணப்பட்டது. அது திருப்புறம்பயம் கிராமத்தை அடுத்த காடாயிருக்க வேண்டுமென்றும் அந்தக் காட்டின் நடுவில் எங்கேயோதான் கங்க மன்னன் பிருதிவீபதிக்கு வீரக்கல் நாட்டிய பழைய பள்ளிப்படைக் கோயில் இருக்க வேண்டும் என்றும் ஊகம் செய்தார்.

அந்தப் பள்ளிப்படை உள்ள இடத்தில் நூறு வருஷங்களுக்கு முன்னால் நடந்த மாபெரும் யுத்தம் அவர் நினைவுக்கு வந்தது. அந்தப் போரில் சோழர் குலத்துக்கு உதவியாகத் தமது முன்னோர்கள் செய்த வீர சாகசச் செயல்களையும் ஞாபகப் படுத்திக்கொண்டார். அப்படிப்பட்ட தமது பழம் பெருங்குலத்துக்கு இந்த நந்தினியால் உண்மையிலேயே அவக்கேடு நேர்ந்து விடுமோ? துர்க்கா பரமேசுவரி தமது கனவிலே தோன்றிக் கூறியதில் ஏதேனும் உண்மை இருந்தாலும் இருக்குமோ...?

எப்படியிருந்தாலும் இனி சர்வ ஜாக்கிரதையாகயிருக்க வேண்டும். நந்தினியின் அந்தரங்கம் என்னவென்பதையும் கண்டு பிடித்தேயாக வேண்டும். முதலில், இங்கிருந்து தப்பிச் சென்ற பிறகல்லவா, மற்றக் காரியங்கள்? திருப்புறம்பயம் கிராமத்தை அடைந்தால் அங்கே ஏதேனும் உதவி பெறலாம்.

கவிழ்ந்த படகிலிருந்து தம்மைப் போல் வேறு யாரேனும் தப்பிப் பிழைத்திருந்தால் அவர்களும் அங்கே வந்திருக்கக் கூடும். ஆனால் வெள்ளத்தைக் கடந்து திருப்புறம் பயம் கிராமத்துக்குப் போவது எப்படி?

இந்தக் கோவிலைச் சுற்றி உடைப்பு வெள்ளம் இப்படிச் சுழி போட்டு கொண்டு ஓடுகிறதே? இதில் ஒரு மத யானை இறங்கினால்கூட அடித்துத் தள்ளிக் கொண்டு போய் விடுமே! இதை எப்படித் தாண்டிச் செல்வது?

உடைப்பு வெள்ளம் கோவிலைச் சுற்றிக் கீழே தோண்டிக் குழி பறித்துக்கொண்டிருப்பது திண்ணம். கோவில் எப்போது விழுமோ தெரியாது! துர்க்கா பரமேசுவரியின் சக்தியினால் விழாமலிருந்தால்தான் உண்டு. ஆயினும், அங்கிருந்து வெளியேறுவது எப்படி? உடைப்பு வெள்ளம் வடிந்த பிறகு போவது என்றால், எத்தனை நாள் ஆகுமோ தெரியாது.

நல்லவேளை, வேறொரு வழி இருக்கிறது. கோவிலுக்கு எதிரே பிரம்மாண்டமாக வளர்ந்திருந்த வேப்ப மரம் ஒன்று இருந்தது. புயற் காற்றிலே விழாமல் அது எப்படியோ தப்பிப் பிழைத்தது. ஆனால் கோவிலைச் சுற்றித் துள்ளிச் சென்று கொண்டிருந்த உடைப்பு வெள்ளம், அந்த வேப்ப மரத்தைச் சுற்றிலும் சுழியிட்டுக் குழி பறித்துக்கொண்டிருந்ததால், கோவில் விழுவதற்கு முன்னால், அந்த மரம் விழுவது நிச்சயம். மரம் விழுந்தால் அநேகமாக மேற்குத் திசையிலுள்ள காட்டுப் பிரதேசத்துக்கு ஒரு பாலத்தைப் போல் அது விழக்கூடும். இல்லாவிட்டாலும், வெள்ளம் மரத்தை அடித்துக்கொண்டு போய் எங்கேயாவது கரையோரத்தில் சேர்க்கும். மரம் விழுந்தவுடனே அதன் மேல் தொத்தி ஏறிக் கொண்டால், ஒருவாறு அங்கிருந்து தப்பிப் பிழைக்கலாம்.

அதுவரையில் அக்கோவிலிலேயே இருக்க வேண்டியதுதான். தேவியின் கருணையினால் இன்னும் ஒருநாள் பசியாறுவதற்கும் பிரசாதம் மிச்சமிருக்கிறது. மரம் விழும்வரையில், அல்லது வெள்ளம் வடியும் வரையில் அங்கேயே பொறுமையுடன் காத்திருக்க வேண்டியதுதான். அதைத் தவிர வேறு என்ன செய்வது?

அவசரப்படுவதில் பயன் ஒன்றுமில்லை. நம்மால் இவ்வுலகில் இன்னும் ஏதோ பெரிய காரியங்கள் ஆக வேண்டியிருப்பதனாலேதான், தேவி ஜகன் மாதா வெள்ளத்தில் சாகாமல் காப்பாற்றியிருக்கிறாள். ஆதலின் மேலே நடக்க வேண்டியதற்கும் துர்க்கா பரமேசுவரியே வழி காட்டுவாள் அல்லவா?

அன்று பகல் சென்றது. இன்னும் ஓர் இரவும் பகலும் கழிந்தன. புயல், தான் சென்றவிடமெல்லாம் அதாஹதம் செய்து கொண்டே மேற்குத் திசையை நோக்கிச் சென்றுவிட்டது.

தூவானமும் விட்டு விட்டது. ஆனால் துர்க்காதேவியின் கோயிலில் அகப்பட்டுக்கொண்ட பழுவேட்டரையருக்கு மட்டும் விடுதலை கிட்டவில்லை. கொள்ளிடத்து வெள்ளம் குறைந்தது போலக் காணப்பட்டது. ஆனால் உடைப்பு வர வரப் பெரிதாகிக்கொண்டு வந்தது. கோயிலைச் சுற்றிச் சென்ற வெள்ளம் குறையவில்லை. ஆழம் என்னமோ அதிகமாகிக் கொண்டே இருக்க வேண்டும். அதை அளந்து பார்ப்பது எப்படி? அல்லது அந்த உடைப்பு வெள்ளத்தில் இறங்கி நீந்திச் செல்லுவது பற்றித்தான் நினைத்துப் பார்க்கவும் முடியுமா?

கடைசியாக, அன்று சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தில் பழுவேட்டரையர் எதிர்பார்த்தபடி, 'கோயிலுக்கு எதிரேயிருந்த பெரும் வேப்பமரமும் விழுந்தது. விழுந்த மரம் நல்லவேளையாக உடைப்பு வெள்ளத்தின் மேற்குக் கரையைத் தொட்டுக்கொண்டு கிடந்தது. அதன் வழியாக அப்பால் செல்வதற்குப் பழுவேட்டரையர் ஆயத்தமானார். இரவிலே புறப்பட்டு அந்தக் காட்டுப் பிரதேசத்தில் எப்படி வழி கண்டுபிடித்துப் போவது என்பது பற்றிச் சிறிது தயங்கினார். சில கண நேரத்துக்கு மேல் அந்தத் தயக்கம் நீடித்திருக்கவில்லை. உடனே புறப்பட வேண்டியதுதான் என்று முடிவு செய்து, தம்மை அந்தப் பேராபத்திலிருந்து காத்தருளிய துர்க்கா பரமேசுவரிக்கு நன்றி தெரிவிப்பதற்காகச் சந்நிதியை நெருங்கினார். சந்நிதியில் விழுந்து நமஸ்கரித்தார்.

அச்சமயத்தில் அவர் உடம்பு சிலிர்க்கும்படியான குரல் ஒன்று கேட்டது. முதலில் துர்க்கையம்மன்தான் பேசுகிறாளோ என்று தோன்றியது. பிறகு, இல்லை; குரல் வெளியில் சிறிது தூரத்துக்கு அப்பாலிருந்து வருகிறது என்று தெளிவடைந்தார்.

"மந்திரவாதி! மந்திரவாதி!" என்று

கூப்பிட்டது அந்தக் குரல்.

பிறகு மறுபடியும், "ரவிதாஸா! ரவிதாஸா!" என்று மீண்டும் கூவியது. முன் எப்பொழுதோ கேட்ட குரல் போலத் தோன்றியது.

பழுவேட்டரையர் எழுந்து முன் மண்டபத்துக்கு வந்தார். தூண் மறைவில் நின்று குரல் வந்த இடத்தை நோக்கினார். உடைப்பு வெள்ளத்துக்கு அப்பால், விழுந்த வேப்ப மரத்தின் நுனிப்பகுதிக்கு அருகில், ஓர் உருவம் நின்றுகொண்டிருக்கக் கண்டார். "மந்திரவாதி! மந்திரவாதி!" என்னும் கூக்குரல், அவருக்குத் தம் சகோதரன் முன்னொரு சமயம் கூறியவற்றை ஞாபகப்படுத்தியது. துர்க்காதேவியின் கருணையினால் தாம் அதுவரை அறிந்திராத மர்மத்தை அறிந்து கொள்ளப் போகிறோமோ என்ற எண்ணம் உதித்தது. ஆகவே அசையாமல் நின்றார்.

அக்கரையில் நின்ற உருவம் விழுந்த வேப்ப மரத்தின் வழியாக உடைப்பு வெள்ளத்தைக் கடந்து வரத் தொடங்கியதைப் பார்த்தார்.

தம் வாணாளில் அதுவரை செய்திராத ஓர் அதிசயமான காரியத்தைப் பழுவேட்டரையர் அப்போது செய்தார். கோவில் முன் மண்டபத்தில் சட்டென்று படுத்துக் கொண்டார். தூங்குவது போலப் பாசாங்கு செய்தார்.

ரவிதாஸன் என்னும் மந்திரவாதியைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆசை அவரை அவ்வளவாகப் பற்றிக்கொண்டது. அவன் நந்தினியைப் பார்ப்பதற்காகச் சில சமயம் அவர் அரண்மனைக்கு வந்த மந்திரவாதியாகவே இருக்க வேண்டும். அவனுக்கும் நந்தினிக்கும் உள்ள தொடர்பு உண்மையில் எத்தகையது? அவனை இந்த இடத்தில் இந்த வேளையில் தேடி அலைகிறவன் யார்? எதற்காக தேடுகிறான்? இதையெல்லாம் தெரிந்துகொண்டால், ஒருவேளை நந்தினி தம்மை உண்மையிலேயே வஞ்சித்து வருகிறாளா என்பதைப் பற்றி அறிந்து கொள்ளலாம் அல்லவா? ரவிதாஸன் மட்டும் அவரிடம் சிக்கிக் கொண்டால், அவனிடத்திலிருந்து உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் விடுவதில்லை என்று மனத்தில் உறுதிகொண்டார்.

தூங்குவதுபோல் பாசாங்கு செய்தவரின் அருகில் அந்த மனிதன் வந்தான். மீண்டும் "ரவிதாஸா! ரவிதாஸா!" என்று கூப்பிட்டான்.

ஆகா! இந்தக் குரல்? கடம்பூர் மாளிகையில் முன்னொரு தடவை வேலனாட்டம் ஆடிக் குறி சொன்னானே, அந்தத் தேவராளன் குரல் போல அல்லவா இருக்கிறது? இவனுடைய கழுத்தைப் பிடித்து இறுக்கி உண்மையைச்



சொல்லும்படிச் செய்யலாமா? வேண்டாம்! இன்னும் சற்றுப் பொறுப்போம். இவன் மூலமாக மந்திரவாதி ரவிதாஸனைப் பிடிப்பதல்லவா முக்கியமான காரியம்?

"மந்திரவாதி! சூரியன் அஸ்தமிப்பதற்குள்ளேயே தூங்கி விட்டாயா? அல்லது செத்துத் தொலைந்து போய் விட்டாயா?" என்று சொல்லிக்கொண்டே வந்த மனிதன் பழுவேட்டரையரின் உடம்பைத் தொட்டு அவருடைய முகம் தெரியும்படி புரட்டினான். அப்படிப் புரட்டியும் பழுவேட்டரையர் ஆடாமல் அசையாமல் கிடந்தார்.

பின்மாலையும் முன்னிரவும் கலந்து மயங்கிய அந்த நேரத்தில், மங்கலான வெளிச்



சத்தில், தேவராளன் (ஆமாம்; அவனேதான்!) பழுவேட்டரையரின் முகத்தைப் பார்த்தான். தன் கண்களை நன்றாகத் துடைத்துக்கொண்டு இன்னொரு தடவை உற்றுப் பார்த்தான். பீதியும், பயங்கரமும், ஆச்சரியமும், அவ நம்பிக்கையும் கலந்து தொனித்த ஈனக்குரலில் "ஊ ஊ!" "ஓ! ஓ!" "ஆ! ஆ!" என்று ஊளையிட்ட வண்ணம் அவ்விடத்தை விட்டு ஓட்டம் பிடித்தான்.





பழுவேட்டரையர் கண்ணைத் திறந்து நிமிர்ந்து உட்கார்ந்து பார்ப்பதற்குள்ளே அவன் கோயிலுக்கு முன்னாலிருந்த பலி பீடத் திறந்த மண்டபத்தை இரண்டு எட்டில் தாண்டிச் சென்று, வேப்பமரப் பாலத்தின் மீது வேகமாக நடக்கத் தொடங்கி விட்டான்.

திரும்பிப் பார்ப்பதற்குக்கூட ஒரு கணமும் நில்லாமல் அதி விரைவாக அம்மரத்தின் மீது ஓட்டமும் தாவலுமாகச் சென்று அக்கரையை அடைந்தான். மறுகணம் புதர்களும் மரங்களும் அடர்ந்த காட்டில் மறைந்துவிட்டான்.

பழுவேட்டரையர் அவன் மிரண்டு தாவி ஓடுவதைக் கண் கொட்டா வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தார். காட்டில் அவன் மறைந்ததும், சமயம் நேர்ந்தபோது அவனைப் பிடிக்காமல் தாம் விட்டுவிட்டது தவறோ என்ற ஐயம் அவரைப் பற்றிக்கொண்டது. உடனே, அவரும் குதித்து எழுந்து ஓடினார். தேவராளனைப் போல் அவ்வளவு வேகமாக மரப் பாலத்தின் பேரில் அவரால் தாவிச் செல்ல முடியவில்லை. மெள்ள மெள்ளத் தட்டுத் தடுமாறிக் கிளைகளை ஆங்காங்கு பிடித்துக்கொண்டுதான் போக வேண்டியிருந்தது.

அக்கரை அடைந்ததும் காட்டுப் பிரதேசத்துக்குள்ளே ஒற்றையடிப் பாதை ஒன்று போவது தெரிந்தது. அதை உற்றுப் பார்த்தார். சேற்றில் புதிதாகக் காலடிகள் பதிந்திருந்தது தெரிந்தது. அந்த வழியிலேதான் தேவராளன் போயிருக்க வேண்டுமென்று தீர்மானித்து மேலே விரைவாக நடந்தார்.

அது முன்னிலாக் காலமானாலும் வானத்தில் இன்னும் மேகங்கள் சூழ்ந்திருந்தபடியால் நல்ல இருட்டாகவே இருந்தது. காட்டுப் பிரதேசத்தில் என்னவெல்லாமோ சத்தங்கள் கேட்டன. புயலிலும் மழையிலும் அடிபட்டு, கஷ்டங்களுக்கு உள்ளாகியிருந்த காட்டில் வாழும் ஜீவராசிகள் கணக்கற்றவை மழை நின்றதினால் ஏற்பட்ட மகிழ்ச்சியைத் தெரிவித்துக் குரல் கொடுத்துக்கொண்டு அங்குமிங்கும் சஞ்சரித்தன.

ஒற்றையடிப் பாதை சிறிது தூரம் போய் நின்றுவிட்டது. ஆனால் பழுவேட்டரையர் அத்துடன் நின்றுவிட விரும்பவில்லை. அன்றிரவு முழுதும் அந்தக் காட்டில் அலைந்து திரியும்படி நேர்ந்தாலும் அந்தத் தேவராளனையும் அவன் தேடிப் போகும் மந்திரவாதி ரவிதாஸனையும் பிடித்தே தீருவது என்று தீர்மானித்துக்கொண்டு, காட்டுப் புதர்களில் வழிகண்ட இடத்தில் நுழைந்து சென்றார்.

ஒரு ஜாம நேரம் காட்டுக்குள் அலைந்த பிறகு சற்றுத் தூரத்தில் வெளிச்சம் ஒன்று தெரிவதைப் பார்த்தார். அந்த வெளிச்சம், நின்ற இடத்தில் நில்லாமல் போய்க் கொண்டிருந்தபடியால், அது வழி கண்டுபிடிப்பதற்காக யாரோ கையில் எடுத்துச் செல்லும் களுந்தின் வெளிச்சமாகவே இருக்க வேண்டும்.

அந்த வெளிச்சத்தைக் குறி வைத்துக் கொண்டு வெகு விரைவாக நடந்தார். வெளிச்சத்தை நெருங்கிச் சென்றுகொண்டிருந்தார்.

கடைசியாக, அந்தச் களுந்து வெளிச்சம் காட்டின் நடுவே ஒரு பாழடைந்த மண்டபத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுவது போல் காட்டிவிட்டு உடனே மறைந்தது. அந்த மண்டபம் திருப்புறம்பயத்திலுள்ள பிருதிவீபதியின் பள்ளிப்படைக் கோவில்தான் என்பதைப் பழுவேட்டரையர் பார்த்த உடனே தெரிந்துகொண்டார். பள்ளிப்படையை நெருங்கி ஒரு பக்கத்துச்சுவர் ஓரமாக நின்று காது கொடுத்துக் கேட்டார்.

ஆமாம்; அவர் எதிர்பார்த்தது வீண்போகவில்லை. இரண்டு பேர் பேசிக் கொண்டிருந்தது கேட்டது. உரத்த குரலில் பேசியபடியால் பேசியது தெளிவாகக் கேட்டது.

"மந்திரவாதி! உன்னை எத்தனை நேரமாகத் தேடிக் கொண்டிருக்கிறேன், தெரியுமா? நீ ஒருவேளை வர முடியாமற் போய் விட்டதோ, அல்லது உன்னையுந்தான் யமன் கொண்டு போய் விட்டானோ என்று பயந்து போனேன்!" என்றான் தேவராளன்.

மந்திரவாதி ரவிதாஸன் கடகடவென்று சிரித்தான்.

"யமன் என்னிடம் ஏன் வருகிறான்? சுந்தர சோழனையும் அவனுடைய இரண்டு பிள்ளைகளையுந்தான் நெருங்கிக் கொண்டிருக்கிறான். நாளைய தினம் அவர்களுடைய வாழ்நாள் முடிந்துவிடும்!" என்றான் மந்திரவாதி.

அச்சமயம் வானத்தையும் பூமியையும் பிரகாசப்படுத்திக்கொண்டு மின்னல் ஒன்று மின்னியது.

(தொடரும்)

நெஞ்சில் நியாயம்

One & Only

அன்புள்ள மல்லிகாவுக்கு,

எப்படி இருக்கிறாய்? நான் நலமாக இல்லை. காரணம், பாழும் வயிற்று வலி. அடிக்கடி வருகிறது. சமயங்களில் லேசாகக் காய்ச்சலும் இணை சேர்கிறது. டாக்டரிடம் செல்வதற்குப் பயம்; தயக்கம். புரியாத வியாதி பெயர் சொல்லிப் பணம் பிடுங்குவாரோ என்று இருக்கிறது.

என் வலி போக, மருந்து எதுவென்று எனக்கே தெரியும். ஊருக்கு வந்து உன் கையால் சில நாட்கள் சிறு கவளங்கள் சாப்பிட்டாலே போதுமே!

ஆனால் என்னடி செய்வேன் கண்ணம்மா? கடை கடையாகச் சென்று மலிவு விலை சோப்பு வில்லை விற்பனை செய்பவன் நினைத்த உடன் கிளம்பி விட முடியுமா? திருநெல்வேலியிலிருந்து சென்னை எவ்வளவு தொலைவு... போய், வர ஆகும் செலவுக்கு நான் என்ன செய்வேன்? எங்கே செல்வேன்? சென்னை புழுதி தாங்கி வரும் பஸ்களை ஏக்கமுடன் பார்த்துக் கொள்கிறேன்.



மனம் முழுவதும் உன் காதல் நினைவுகளுடன் கட்டை சம்பளத்திற்கு வீதி, வீதியாக வெயிலில் அலைகிறேன். கிடைத்த நேரத்தில், கிடைத்ததைத் தின்கிறேன். நாட்கள் எப்படியோ நகர்கின்றன. கூடுதல் கமிஷனுக்காக முதலாளியை மிகவும் நச்சரித்துள்ளேன். மல்டி நேஷனலுடன் மலிவு விலை எப்படி ஐயா போட்டி போடும் என்கிறார். இருந்தும், பார்க்கலாம் என்றிருக்கிறார். பார்க்கலாம்.

நான் அனுப்பிய பணம் உனக்குப் போதாது என்று தெரியும். வீட்டுச் செலவுகளையும், கடன்காரர்களையும் எப்படிச் சமாளிக்கிறாயோ? நினைக்கவே நடுக்கமாக இருக்கிறது. கவலைப்படாதே. மேலும் உடலை வருத்தி உழைக்கிறேன். விளக்க முடியாத அளவு சிக்கனத்திலும் இருக்கிறேன். பணம் சேர்ந்ததும் உடனே அனுப்பி வைக்கிறேன்.

இப்போதைக்கு உனக்கு நான்-எனக்கு நீ; தொலைவிலிருந்தபடியே! ஹூம்.. கதைகளில் மட்டுமே காதலை ரசிக்கும் நம் பெற்றவர்கள்! மற்றவை அடுத்தக் கடிதத்தில்.

இப்படிக்கு
உன் அன்புக்
கணவன் கேசவன்

கடிதம் எழுதி முடித்ததும் படித்துப் பார்த்தான் கேசவன். கண் கலங்கினான். உடனே அடுத்தக் கடிதம் எழுதத் துவங்கினான்.

அன்புள்ள மல்லிகாவுக்கு,

எப்படி இருக்கிறாய்? நான் நலமாக இருக்கிறேன். விரைவில் பணம் அனுப்புகிறேன். நம்பிக்கையுடன் இரு. எவருக்கும் எந்த வேளையிலும் எந்த கதவும் திறக்கும். வாழ்க்கைச் சக்கரத்தில் வாழ்ந்து காட்டுவோம்!

அன்புடன்
உன் கணவன், கேசவன்

முதலாவது கடிதத்தைக் கிழித்துப் போட்டுவிட்டு இரண்டாவதை போஸ்ட் செய்தான்.

பத்மா ரவிசங்கர்



• ஏ. வீரப்பன்

இது காமெடி அல்ல!

கவுண்டமணி – செந்தில் காமெடி ஜோடிக்கு ரசிகர்கள் மத்தியில் புகழ் கிடைத்தது என்றால் அதற்கு முக்கியக் காரணம் பழம்பெரும் நகைச்சுவை எழுத்தாளர் ஏ. வீரப்பன். கவுண்டமணியும் செந்திலும் நகைச்சுவை இரட்டையர்களாகத் தோன்றிய ஐம்பதுக்கும் மேற்பட்ட படங்களுக்கு காமெடி டிராக் எழுதிய இவருக்கு, இப்போது கண் பார்வை இல்லை.



சாலிகிராமத்தில் ஒரு பழைய அடுக்கு மாடிக் குடியிருப்பு. அதன் கீழ் தளத்திலேயே உள்ள ஒரு வீட்டில் தமது மனைவியுடன் வசித்து வருகிறார் வீரப்பன். நாம் சென்றபோது கதவு திறந்தே இருந்தது. ஒரு சிறு கட்டிலில் அமர்ந்து இலக்கில்லாமல் எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். குரல் கொடுத்த பிறகே நமது வருகையை அறிந்து, பேசத் தொடங்கினார்.

''பணத்தோட்டம் படத்துல தான் முதன் முதல்லே அறிமுகம் ஆனேன். என்னோடு சேர்ந்து நாகேஷும் அறிமுகமானார். தமிழ் சினிமாவில் நாங்கதான் முதல் காமெடி இரட்டையர்கள். அந்தக் காலத்துல நகைச்சுவை நடிகர்களே தங்களுக்கான டிராக்கை எழுதி, நடிக்கணும். பணத்தோட்டம் படத்துல புதுவித காமெடி எழுதினேன். எம்.ஜி.ஆர்தான் ஹீரோ. படம் பயங்கர ஹிட்.

அதுக்கு அப்புறம் வீரப்பன் – நாகேஷ் ஜோடிக்கு நிறைய ரசிகர்கள். சினிமாவுக்கு முன்பு நான் ஒரு நாடக நடிகன். ருத்ரதாண்டவம் என்ற நாடகத்தை எழுதினேன். அதில் வி.கே. ராமசாமியும் நாகேஷும் நடித்தார்கள். அது ஒரு சோஷியல் சடையர் நாடகம். சென்னையில் மட்டும் எழுநூறு காட்சிகள் நடந்தன. இந்த நாடகத்தைப் பார்க்க வந்த எம்.ஜி.ஆர்., என்னைப் பாராட்டி அப்போதே பத்தாயிரம் ரூபாய் பரிசு கொடுத்தார்! அவரது படங்களில் நடிக்க வாய்ப்பும் கொடுத்தார். கலைஞர்களைக் கண்கலங்க விடக்கூடாது என்பதை அந்தக் காலத்தில் ஒரு கொள்கையாகவே கடைபிடித்தார்கள்'' என்ற வீரப்பனுக்கு பெரிய திருப்புமுனையாக அமைந்தது, மெட்

ராஸ் டு பாண்டிச்சேரி படம்தானாம்.

அந்தப் படம் பாம்பே டு கோவா என்ற பெயரில் அமிதாப்பச்சன் ஹீரோவாக நடித்து அவரது முதல் சில்வர் ஜுப்லி படமாகவும் அமைந்தது.

"அந்தப் படத்தின் கதை வசனமும் நான் எழுதியதுதான்" என்கிறார்.

"கவுண்டமணி செந்திலுக்கு எப்போது எழுதத் தொடங்கினீர்கள்?"

"உன்னை நான் சந்தித்தேன் படத்தில் கவுண்டமணிக்கு முதன் முதலில் எழுதினேன். அதன் பிறகு உதய கீதம் படத்தில் கவுண்டமணி – செந்திலுக்கு எழுதினேன். அவர்களின் ஜோடி சகாப்தம் தொடங்கியது இந்தப் படத்தில்தான். இந்தப் படத்தில் கவுண்டமணி ஜெயிலில் இருப்பார். செந்தில் தண்டனை பெற்றுப் புதிய கைதியாக உள்ளே வருவார். 'என்ன குற்றம் செய்தாய்' என்று கவுண்டமணி கேட்க, சில்லறைத் தட்டுப்பாடு அதிகம் இருந்தது; ஐம்பது பைசா நாணயம் அடித்தேன் என்று செந்தில் சொன்னதும் அவருக்குப் பளார் என்று ஒரு அறை கொடுத்து, 'நூறு இருநூறு அடிச்ச ஆட்களோட மரியாதை என்னடா ஆகிறது? சொந்த ஊரு எது' என்பார்.

செந்தில் கோயமுத்தூர் என்றதும் மீண்டும் பளார் என்று ஒரு அறை விழும். கவுண்டமணி கோபத்துடன், 'கோயமுத்தூர் மானத்தையே வாங்கிட்டியேடா' என்பார்.

"இந்தக் காட்சி எடுத்தபோது அருகே நின்று கொண்டிருந்த அந்தப் படத்தின் தயாரிப்பாளர் கோவைத்தம்பி 'என் தலையிலேயே கை வெச்சுட்டீங்களே அண்ணே' என்று சிரித்துக் கொண்டே சொன்னார். அத்தனை நல்ல மனிதர் அவர்!" என்கிறார்.

"இப்போது கவுண்டமணிக்கு ஒரு டிராக் எழுதிக் கொண்டிருக்கிறேன். அதில் அவர் ஒரு புகழ்பெற்ற மேடைப் பேச்சாளர். ஆனால் சர்க்கரை வியாதி காரணமாக நாக்கை வெட்டி எடுத்து விடுவார்கள். இந்த நேரத்தில் அவருக்கு நிறைய வாய்ப்பு வரும். இதுதான் கான்செப்ட். இந்த காமெடிக்கு பெரிய வரவேற்பு கிடைக்கும்!" என்று நம்பும் வீரப்பனுக்கு சர்க்கரை நோய் காரணமாகத்தான் கண்புரை வளர்ந்து, கண் பார்வை இழப்பு ஏற்பட்டுள்ளது.

"கண் தெரியாமல் கஷ்டப்படும் உங்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள கவுண்டமணியோ செந்திலோ உதவி செய்யவில்லையா?" என்றதும் தன்மானத்துடன் மறுக்கிறார்:

"நான் எழுதியதற்கு நான் பணம் வாங்கிக் கொண்டேன். அவர்கள் நடித்ததற்கு அவர்கள் பணம் வாங்கிக் கொண்டார்கள். இப்படியிருக்க, அவர்களிடம் உதவி கேட்பதில் நியாயமில்லை"என்கிறார்.

ஆனால், இரட்டையரில் ஒருவரான செந்திலைத் தொடர்பு கொண்டபோது, வீரப்பனுக்கு முன்பு பல சமயங்களில் இயன்ற அளவு உதவியிருப்பதாகவும் தற்போது கண்புரை அறுவைச் சிகிச்சைக்கும் உதவ இருப்பதாகவும் தெரிவித்தார்.

"நடிப்பதற்கும், எழுதுவதற்கும் கொடுக்கறதைக் கொடுங்க என்று வாங்கிக் கொள்ளும் வீரப்பன், பல பேரை வாழவைத்திருக்கிறார்!" என்கிறார்கள் நாகேஷும் வி.கே. ராமசாமியும்.

— ஜேசுதாஸ்

படம்:
வெங்கடேஷ்



ஒரு நடை ஊருப் பக்கம் வரக்கூடா தாய்யா என்று அம்மாவின் கடிதம் பல தடவை கெஞ்சியிருக்கிறது. வருவாயா, மாட்டாயா என்று அதட்டியிருக்கிறது. முடிவாக இந்தத் தடவை வரவில்லை என்றால் இனிமேல் நீ எப்பொழுது வந்தாலும் உன் முகத்தில் விழிக்க மாட்டேன் என்று கோபமாகச் சீறியிருக்கிறது.

உறவின் மிகச்சிறு இழையொன்று ஊடுபாவினின்றும் பிசகி, தனித்துத் தொங்க, பிடித்து இழுத்துச் சேர்த்துக் கட்டுவதற்குத்தான் எத்தனை பிரயத்தனம் வேண்டியிருக்கிறது?

பழைய கோபமேதும்



இப்போதில்லை எனக்கு; அம்மாவைப் போலவே. போய்ப் பார்க்கவும் கொஞ்சவும் சீராடவும் ஆசைதான். வயசு கிடக்கட்டும். எட்டு கழுதை வயசானாலும் வெட்டி விடுகிற விஷயமா என்ன? ஆனால் திடுதிப்பென்று புறப்பட இது என்ன அரசாங்க உத்தியோகமா! வியாபாரம். நான் இருந்தால் மட்டுமே நடக்கிற சில காரியங்கள் இருக்கிறது. நாலைந்து நாள் தொடர்ந்து கடை சாத்த முடியாது. வியாபாரப் போட்டியில் பக்கத்துக் கடைக்காரனிடம் வாடிக்கையாளர்களைப் பறி கொடுத்துவிட்டு ஏமாற வேண்டியிருக்கும். யாரையும் நம்பி கல்லாப் பெட்டியைக் கையில் கொடுக்கவும் முடியாது. அதற்காக, 'இந்தத் தள்ளாத வயதில் அங்கயும் இங்கயும் அலைய முடியாது ராசனே! பாத்து நாளாச்சு மவனே! கண் மூடுறதுக்கு முன்னால ஒரு தடவை உன் மொகத்தையும் உன் பொஞ்சாதி முகத்தையும் காட்டிட்டுப் போ செல்லமே!' என்ற அம்மாவின் கெஞ்சலையும்


அழுகையையும் சாதாரணமாக ஒதுக்க முடியவில்லை.

கனகம்தான் என்னை விரட்டினாள்: "போதும் நீங்களும் உங்க வியாக்கியானமும். உங்களுக்குன்னு வாடிக்கையாளர்கள் ஊர்ல ஒலகத்துல இல்லாமலா போவாக? ஒரு பேச்சுக்குத்தான் சொல்றேன். நாளைக்கு உங்க அம்மைக்கு ஒன்னு கெடக்க ஒன்று ஆயிப் போச்சுன்னாலும் இப்படிதான் வியாபாரம் போயிடுமேன்னு இங்கயே கெடந்து கடைய கட்டிட்டு அழுவிகளா...?"

புறப்பட்டு விட்டோம்.

வெகு காலத்துக்குப் பிறகு தாம்பரத்தைத் தாண்டி இப்போதுதான் போகிறேன். இதுதான் முதல் பயணம். அந்தப் பதினைந்து வயதில் வறுமையினால் சொல்லாமல் கொள்ளாமல் வீட்டை விட்டு ஓடி வந்து சென்னையில் விழுந்தது பயணமாகுமா...? தவித்த வாய் தண்ணீருக்கும், ஒரு வாய் சோற்றுக்கும் அங்கயும் இங்கயும் ஓடி சாடியது பயணமாகுமா? அது பெயர் அலைச்சல் இல்லையா.

அப்பாவுக்கு இந்த வேலைதான் என்று இல்லை. விவசாயம்தான் முக்கியம். இல்லாத நாளில் கல்லுடைக்கவும் போவார். கொத்து வேலையும் செய்வார். மழைக்காலம் கோடை காலம் என்று கிடையாது. எல்லா காலத்துக்கும் ஏதாவது ஒரு வேலை பார்த்துக்கொண்டு இருப்பார். ஓய்ந்தோம், சாய்ந்தோம் என்று ஒருநாள் அவர் வீட்டில் படுத்தது கிடையாது. அம்மாவும் அப்பாவுக்கு ரொம்ப ஒத்தாசையாகத்தான் இருந்தாள். அறுவடை நாட்களில் களத்து மேட்டில் நிற்பாள். பனையேற்ற நாட்களில் பனங்காட்டுக்கு



லீலா சித்தர்

வந்துவிடுவான். சித்தாள் வேலைக்கும் போவான். அம்மாவின் வருமானம் குடும்பத்துக்கு ரொம்பக் கையேந்தலாக இருந்தது. பசி, பட்டினி பிள்ளைகளைத் தொடாமல் பார்த்துக்கொண்டது.

எல்லாம் அப்பா உசிரோடு இருக்கும்வரைதான். கண் மூடி திறப்பதற்குள் சகலமும் முடிந்து போயிற்று. எதிர்பாராமல் ஒரு சாதிச் சண்டை அப்பா உயிரைப் பறித்துக்கொண்டு போயிற்று.

இத்தனைக்கும் அப்பா சாதி சனம் பார்த்துப் பழகுகிறவர் இல்லை. சொந்த சாதியில் நெருக்கமாக நண்பர்கள் கூடக் கிடையாது. கொண்டவன் கொடுத்தவன் விட்டின் நல்லது பொல்லாததுக்குக்கூட ,அப்பா போய் ஒரு நாளும் நின்றது கிடையாது. அம்மாவைத்தான் அனுப்பி வைப்பார்.

சாதிச் சண்டை வருவதற்குப் பெரிய காரண காரியங்கள் இருந்ததாகச் சரித்திரம் இல்லை. சீத்துக் கோட்டையில் உட்கார இடம் பிடிப்பதில் ஏற்பட்ட தகராறு பெரிய சாதிக் கலவரமாக வளர்ந்து விட்டது. ஒருநாளும் இல்லாத திருநாளாய் சினிமாவுக்குப் போன அப்பா, அதில் சிக்கிக்கொண்டு அநியாயமாகக் கொலையுண்டு போனார்.

நடுத்தெருவுக்கு வந்த விட்டோம். அம்மாவின் உழைப்பு தந்த கூலி ஆறு ஜீவன்களின் வாய்க்கும் வயித்துக்கும் போதவில்லை. தொட்டுக்கோ துடைத்துக்கோ என்று இருந்தது.

வறுமை விரட்ட, சென்னைக்கு ஓடி வந்து பெரும் பணக்காரனாகவும் வளர்ந்தாயிற்று. உள்ளூர் வியாபாரிகளிடம் அண்ணாச்சி என்று அழைக்கும் மரியாதை பெற்றாயிற்று.

அம்மாவைப் பார்க்கிற ஆவல், விழுப்புரத்தைத் தாண்டும் முன்பே என் மனதை அழுத்திக்கொண்டிருந்த வியாபார நினைப்பை முழுசாகக் கலைத்துவிட்டது.

திமர் என்று போக்குவரத்து குறைந்து போனதை நாங்கள் கவனிக்கவில்லை. வழியெல்லாம் ஊர்கள் ஆள் சந்தடியற்று அடங்கிக் கிடப்பது எங்கள் கலகலப்பை உடைத்துக் கொண்டு கவனத்தைத் தொடவில்லை.

அருப்புக்கோட்டைக்கு மிகவும் பக்கமாக இருக்கும். ஒரு பத்து நிமிடம் பயணித்தால் அருப்புக்கோட்டையைத் தொட்டிருக்க முடியும்.

எதிர்பாராமல் ஒரு கும்பல் அரிவாளும் கத்தியுமாக எங்களை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தது. என்ன ஏது என்று யோசித்து, சுதாரித்து, காரைத் திருப்புமுன் அந்தக் கும்பல் எங்களை வளைத்துவிட்டது.

ஆளுக்கு ஆள் காரைத் தட்டினார்கள். உதைத்தார்கள். எல்லோர் கையிலும் ஏதாவது ஒரு ஆயுதம் இருந்தது. கத்தி, அரிவாள், கடப்பாரை, கம்பு என்று.

ஆளுக்கு ஆள் கத்துவது தெரிந்தது. சத்தங்களை எங்கள் காதில் விழ விடாமல் கண்ணாடி தடுத்தது.

கண்ணாடியை உடைத்து விடுவார்கள் என்ற பயத்தில் கீழே இறக்கினேன். அவர்கள் ஒரு ஜாதி சங்கத் தலைவரை வாழ்த்திக் கூச்சலிட்டார்கள். மற்றொரு சாதி சங்கத் தலைவரையும், அந்த சாதியையும் மிகவும் மட்டமாகத் திட்டினார்கள்.

இங்கே இரண்டு சாதிக்காரர்கள் மோதிக் கொள்வதும் வெட்டு, குத்து என்று பெரிய கலவரம் நடப்பதும் இப்பொழுதுதான் தெரிய வந்தது. என் அப்பா போலவே சம்பந்தம் இல்லாமல் ஒரு சாதிக்கலவரத்தில் மாட்டி சாகப் போகிறேனோ என்ற பயம் பிடித்துக்கொண்டது.

"எங்க சாதிக்காரங்களை துள்ளத் துடிக்க அந்தப் பயலுவ வெட்டி கொன்னுட்டானுக தெரியுமா... ஒன்னா, ரெண்டா? நாலு உசிருவே! அவன் சாதிக்காரன் செலைக்கு செருப்பு மாலை போட்டமாம். பார்த்தானா, கண்டானா? வெட்றான்லெ, ஊடு புகுந்து வெட்றான்ங்க! தூங்குற மக்க மனுசன வெட்றான்ங்க, விட மாட்டோம்! அந்தச் சாதியில ஒரு புழு பூச்சி இந்த மண்ணுல வாழ விட மாட்டோம்! ஆமா நீங்க எந்த ஊருல, எங்கிருந்து வாரிய, என்ன சாதி?"

கனகம்தான் மென்று விழுங்கிக்கொண்டு சாதிப் பெயரைச் சொன்னாள். திடீரென்று ஒரு



"என்ன உன் தாத்தா ஆரம்பித்து, அப்பா செய்த வேலையை நீயும் செய்கிறாயா? அப்படி என்ன வேலை?"

"டி.வி.யில் மெகா சீரியல் தயாரிக்கும் வேலை!"

— எஸ். சுந்தரராஜன்

அமைதி வந்தது. பின்னால் அங்கே இங்கே கத்தியவர்களையும் ஒரு பெரிசு கையமர்த்தியது.

என்ன கிளை என்று அடுத்தக் கேள்வி கேட்டார். அதற்கும் கனகம் தான் பதில் சொன்னாள். பூர்வீகத்தைத் தெரிந்துகொண்டார்.

"அட, கடைசில நம்ம சாதி புள்ளை! நல்ல காரியம் பண்ணுனீங்க... போங்க தம்பி. இப்படியா வெவரம் இல்லாம வெட்டு குத்துன்னு நடக்குற இடத்துல பொட்ட புள்ளயோட வந்து நிக்குறது! சட்டு புட்டுன்னு புறப்பட்டுப் பொழுதோட ஊர் போய்ச் சேருங்க. அங்க இங்க அந்த பயலுக நிக்கப் போறான்ங்க."

பெரியவர் கூற, கூட்டம் விலகி வழி விட்டது.



மகிழ்ச்சியில் பிரசாந்த்!

'அப்பு' பட கேஸட் எக்கச்சக்கமாக விற்பனையானதில் ரொம்பவே மகிழ்ச்சியில் இருக்கிறார் பிரசாந்த். இதுவரை மெழுகு பொம்மை மாதிரி வந்துவிட்டுப் போன அவருக்கு இந்தப்படம் முற்றிலும் வித்தியாசமான அனுபவம் என்கிறார். கேஸட் அதிகமாக விற்றுள்ளதால் படமும் நன்றாக ஓடும் என்பது அவரது நம்பிக்கை(!) படத்தின் கதை மற்றும் நடிப்பைப் பார்த்துப் பூரித்துப் போய் தெலுங்கு உரிமையை பிரகாஷ்ராஜே வாங்கி இருக்கிறார்.

— அப்பு

படம்: நிகில்

தொடர்ந்து போகலாமா, இல்லை திரும்பி விடுவோமா என்று யோசித்து ஒரு முடிவுக்கு வரும் முன்பே ஐந்தாறு கிலோ மீட்டர் தாண்டி விட்டோம். தூரத்தில் மீண்டும் கூச்சல் கேட்டது. எரிந்த புகையின் நாற்றம் மூக்கைத் தொட்டது. பூட்டிக் கிடக்கும் வீடுகளும், ஆள் அரவமற்ற வீதிகளும் பயத்தை ஏற்படுத்தியது. திரும்பி விடுவதுதான் சரி என்று தோன்றியது.

அதற்குள் வீதியின் ஓரங்களில் இருந்த சின்னச் சின்ன சந்துகள் வழியாக மனிதர்கள் கூட்டம் - கூட்டமாக வீதியில் இறங்கினார்கள்.

அவர்கள் காரைத் துரத்த, அங்கும் இங்குமாகப் போக்குக் காட்டிவிட்டு வேகம் எடுத்தேன். வெகு சீக்கிரத்திலேயே சாலையின் குறுக்கே விழுந்து கிடந்த பெரிய மரம் எங்களைக் கையும் களவுமாகப் பிடித்து அவர்கள் கையில் கொடுத்துவிட்டது.

அவர்களைப் போலவே இவர்களும் கோபத்தில் துடித்தார்கள். அவர்கள்தான் தங்களை முதலில் சீண்டியதாகச் சீறினார்கள்.

அவர்கள் போட்ட கூச்சலோடும், கேட்ட கேள்விகளோடும்தான் இவர்களும் எங்களை நெருங்கினார்கள்.

"என்ன சாதிவே நீங்க?" என்ற அவர்களின் கேள்விக்கு இந்தத் தடவை நான்தான் பதில் சொன்னேன்.

"எந்த சாத்தானைக் கும்பிடுதே? உன் குல தெய்வம் யாரு?" - கேள்வியைத் தொடர்ந்தார்கள்.

"சரிய்யா! அக்கம்பக்கத்துல நம்ம சாதிசனத்துல உள்ள சொந்தபந்தம் இருந்தா அவுங்க பேரைச் சொல்லேன், நம்புறோம்" என்று மடக்கினார்கள்.

என் பதில்கள் திருப்தி தந்ததை அவர்கள் முகம் சொன்னது. காரை வேகமாக எடுத்தேன். கனகம் என் தோளில் சாய்ந்தாள்.

கனகத்தில் கூந்தலில் இருந்து வந்த வாசம் எங்களைத் தொடர்ந்து வந்த கருகிய வாடையை விரட்டிவிட்டது.

கனகம் அந்தச் சாதி வெறியர்களிடம் இருந்து நாங்கள் தப்பித்ததைப் பற்றி சுவாரஸ்யமாகப் பேசத் துவங்கினாள். அந்தப் பேச்சில், பின்னால் கேட்ட கூச்சல் அமுங்கிப் போயிற்று. ஆரம்பக் கலகலப்பு கைவராவிட்டாலும் நிம்மதியாகப் பயணத்தைத் தொடர்ந்தோம்.

அம்மாவிடம் சொல்ல வேண்டும்; கலப்புத் திருமணத்தில் இப்படியொரு நன்மையும் உண்டு என்று. ○



வாசற்படி ஏறும்போதே சுவாதியை காப்டன் விஷ்ணு ராம் கவனித்து விட்டார்.

"வாம்மா. உங்க பயிற்சியாளர் உன்னைப் பற்றி ரொம்பப் பெருமையாக என்னிடம் பேசியதை இப்பதான் இவகிட்டே சொல்லிக்கிட்டிருந்தேன்" என்றார்.

"நம்ம சுவாதியைப் பற்றி வேறே எப்படிப் பேச முடியும்? ஆனா ஒண்ணுங்க, இந்தப் பெண்ணை முதல் தடவை நீங்க வீட்டுக்கு அழைச்சிக்கிட்டு வந்தப்போ இவளா விமானத்திலே வித்தை காட்டப் போறாண்ணு சந்தேகமா இருந்தது. ஆனா இப்ப என்னடா'ன்னா ஜமாய்க்கிறா'' என்றார் அவர் மனைவி.

சுவாதிக்கு நிறைவாக இருந்

தது. அவள் பழகிய எந்தக் குடும்பத்திலும் இப்படியொரு இனிய பாசத்தைக் கண்டதில்லை. கடந்த ஆறுமாத விமானப் பயிற்சிக் காலத்தில் இவர்கள் வீட்டுக்கு அவள் ஏழெட்டு முறை வந்ததில் இப்படிப் பட்டது அவளுக்கு.

எப்படி இவர்களால் தன்மீது இப்படி பாசத்தைப் பொழிய முடிகிறது? கேட்டால் "இப்போ அமெரிக்காவிலே இருக்கிற எங்க ஒரே மகளுக்கு உன் வயசுதான் இருக்கும். அதுதான் காரணமோ என்னவோ" என்று அந்த அம்மாள் கூறுவார். "நான் இன்னைக்கு நடமாடறேன்னா அது உங்க அம்மா எனக்கு அன்னிக்கு அளித்த ரத்த தானம்தான்" என்று விஷ்ணுராம் சொல்வார். ஆனால் இவற்றைக் காட்டிலும், இயற்கையாகவே அவர்களிடம் மனிதத் தன்மையும், பாச ஊற்றும் தூக்கலாக இருப்பதுதான் முக்கியக் காரணம் என்று பட்டது.

பிடிக்க அவரும் பல முயற்சிகள் எடுத்துக் கொண்டார். தன் பத்திரிகையில் வேலை பார்க்கும் சிலரை ரிஷிகேஷுக்கு அனுப்பி தேடச் சொல்லியும் பயனில்லை.

கோமளா ஆன்ட்டி நடுவில் ஒருநாள் அழத் தொடங்கிவிட்டாள், "என்ன ஆச்சு சத்யாவுக்கு?'' என்று. சுவாதி அவளை சமாதானப்படுத்தினாள்!

"அம்மா ஒரு தைரியமான பெண்மணி. எந்தச் சூழ்நிலையையும் அவங்களாலே சமாளிக்க முடியும். தவிர என் உள்ளுணர்வு பொய்க்காது ஆன்ட்டி. பைலட் லைசன்ஸை நான் வாங்குவதற்குள் நிச்சயம் அம்மாவைப் பார்த்துடுவேன்" என்று சொன்னாலும், "ஏன் இந்த அம்மா ஒரு கடிதம் கூட யாருக்கும் எழுதவில்லை?'' என்ற கேள்வி அவளை அலைக்கழித்தது.

திடீரென்று சில சந்தேகங்கள் எழுந்தன. ரிஷிகேஷுக்குப் போன அம்மா அப்படியே மூசோரிக்குப் போய் விட்டாளோ? அப்பாவின் மறைவு பற்றி அறிந்து புத்தி பேதலித்துவிட்டதோ? அல்லது ஒருவேளை இவளால் குட்டு வெளிப்பட்டு அந்த போலிச் சாமியார் அம்மாவைத் தீர்த்துக் கட்டிவிட்டானோ?

விஷ்ணுராமிடம் இவற்றைச் சொன்னபோது அவர் கேலி செய்யவில்லை. ''அதெல்லாம் இருக்காது'' என்று மொட்டையாக சமாதானம் செய்யவில்லை. "நான் பாத்துக்கறேன்'' என்றார்.

தான் விமானம் ஓட்டுவது அந்த அம்மாளுக்கு ஆச்சரியமென்றால் சுவாதிக்கே கூட தன்னைப் பற்றி வேறு பல ஆச்சரியங்கள்.

தன் சக மாணவர்கள் "ஹலோ" என்று கை நீட்டும்போது தயக்கமின்றிக் கைகுலுக்குகிறாள். சுரிதாரே அதிகப்படி நாகரிகம் என்று நினைத்தவள் இப்போது பாண்ட்- ஷர்ட் போடத் தயங்குவதில்லை. சௌகரியம் என்ற கோணத்தில் அவளது தலைமுடியைக் கூடக் குறைத்துக் கொண்டு விட்டாள்.

வேண்டாமென்று மறுத்தும் ராஜ்குமார் அவளுக்கு ஒரு மொபெட்டை வாங்கிக் கொடுத்துவிட்டார். அம்மாவைக் கண்டு

சுவாதி சென்றபிறகு விஷ்ணுராமின் மனைவி மெல்லக் கேட்டாள். "ஏங்க, இந்தப் பெண் சுவாதியோட சந்தேகங்களெல்லாம் சினிமாத்தனமாக இருக்குதில்லே?''

இதற்கு நேரடியாக பதிலளிக்காமல் ''சுவாதிக்கு எவ்வளவு வயசிருக்கும்னு நினைக்கிறே?'' என்றார்.

"பத்தொன்பது இருக்காது?"

"இந்தச் சின்ன வயசிலே அவ வாழ்க்கை எப்படி ஓடிக்கிட்டிருக்கு?''

''அப்பாவும் போயிட்டார். அம்மாவையும் இன்னும் பார்த்தபாடில்லே. பாவம்தான்.''

22

"அது மட்டுமில்லே. அவளுக்கு சிநேகி தின்னு யாரும் கிடையாது."

"ஏங்க, அக்கம் பக்கத்திலே அவ வயசுப் பொண்ணுங்க யாருமில்லையா?"

"இருக்காங்க. ஆனா இவளாலே அவங் களோட நெருங்கி சிநேகிதத்தை வளர்த்துக்க முடியல்லே. இவ வளர்ந்த விதம் அப்படி. "ஃப்ரெண்ட்லையெல்லாம் ஸ்கூலோட வச்சுக்க"ன்னு சொல்லியே அவங்கப்பா வளர்த்தா ஒரு தடவை சொல்லியிருக்கா. இப்ப சுவாதியோட ஒரே பிடிப்பு அவங் கம்மா வந்துடுவாங்க, தனக்கு ஆதரவாக இருப்பாங்கன்ற நம்பிக்கைதான். அதனாலே தான் வந்து சேராத அம்மாவுக்கு என்ன ஆகியிருக்குமோன்றதைப் பற்றி விதவிதமாக யோசிக்கத் தோணுது அவளுக்கு."

மனைவியிடம் சொல்லவில்லையென்றா லும் அவர் மனத்தில் வேறொரு விஷயமும் மிதந்து கொண்டிருந்தது. சுவாதி மற்றும் சத்யா குறித்துச் சென்ற வாரம் கோமளா விடம் பேசிப் பார்த்தபோது பிரசாத் பற்றி யும் அறிய நேர்ந்தது. "அந்தப் பையனுக்கு இவளைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு கொள்ளை ஆசை. ஆனா தன் அம்மாவும், தன் பைலட் சாதனையும்தான் முக்கியம்னு அந்தக் காதலை விலக்கி வச்சுட்டானாம். என்கிட்டே இதைச் சொல்லும்போது அந்தப் பையன் கண்கலங்கிடுச்சு. நான் என்ன செய்ய முடியும் சொல்லுங்க. சத்யா சீக்கிரம் வந்துட்டா பரவாயில்லை. இந்தப் பொண்ணுக்குப் பல குழப்பங்கள் தீர்ந்துடும்."

இருக்கும் குழப்பங்களோடு, மனம் விரும்பியவனைத் துறப்பது என்பது எவ் வளவு வேதனையான உணர்வு என்பதைப் புரிந்து கொண்டதால் சுவாதியிடம் தோன் றிய அனுதாபம் பலமடங்கு பெருகியது அவருக்கு.

"என்னங்க, காலையிலேயிருந்து அப் பப்போ மார் வலிக்குதுங்க. பதட்டப்படும் படி இல்லேன்னாலும் டாக்டர்கிட்டே காட்டிடலாம்னு தோணுது" என்ற மனைவி யிடம் "அப்படியே செய்யலாம்" என்றார். கூடவே சுவாதியின் சந்தேகங்களைத் தீர்க்க வேண்டி சில முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் முடிவெடுத்தார்.

சில நாட்கள் கழித்து அவளைப் பயிற்சி வகுப்பின் இடைவேளையில் சந்தித்தார்.

"விசாரிச்சுப் பார்த்தேன் சுவாதி. நீ குறிப் பிட்ட இந்தச் சாமியாரை ரெண்டரை வருடம் முன்னாலே போலீஸ் கைது செய்துக்கிட்டுப் போயிட்டாங்க. தீபாவளி யும் அதுவுமா மடத்திலே அன்னதானம், கொண்டாட்டம்னு அவர் அமர்க்களம் செய்து கொண்டிருக்கும்போது, மடத்துக் குள்ளே நுழைந்து போலீஸ்காரங்க அவரை அரெஸ்ட் செய்திருக்காங்க. ஒரு மத்திய அமைச்சர் அந்த சாமியாரின் பாக்கெட்டுக் குள்ளே இருந்தாரு இல்லையா? அந்த அமைச்சரின் அரசியல் எதிரி ஒருத்தர் அந்த அமைச்சர், சாமியார் ஆகியோருடைய வண்டவாளங்களைப் பிட்டுப்பிட்டு வச்சுட்டார். ஆதாரம் அதிகமாக இருந்த தாலே அந்தச் சாமியார் தன் குற்றங்களை ஒத்துக்க வேண்டியதாகப் போயிடுச்சு."

விஷ்ணுராம் கூறியவுடன் பளிச்சென்று ஒரு பனித்திரை விலகியமாதிரி இருந்தது. இரண்டரை வருடங்களுக்கு முன் வந்த அந்த தீபாவளியின் போதுதான் உற்சாகத்துடன் அந்த மடத்துக்குப் போன அப்பா முகம் வெளுத்துப் போய்த் திரும்பி வந்தார். அதைத் தொடர்ந்து நாலைந்து நாட்கள் கல்லூரிக்குப் போகாமல் பித்துப் பிடித்தவர் போல் வீட்டிலேயே அடைந்து கிடந்தார். அதற்குப் பிறகுதான் அவர் தன் வேலையை ராஜினாமா செய்தார். காசிக்குக் குடி பெயர்ந்தார்கள்.

அந்த சாமியார் தெய்வீகத் தன்மை கொண்டவர்; அப்பழுக்கற்றவர் என்ற நம் பிக்கையில்தான் அப்பா, அம்மாவிடம் சீறிப் பாய்ந்து விவாகரத்து வரை சென்றிருக்க வேண்டும். அந்த சாமியாரே தன் குற்றங் களை ஒத்துக் கொண்டவுடன்தான் அப்பா வுக்குத் தன் மனைவிக்குத் தான் செய்த மாபெரும் துரோகம் உறுத்தியிருக்க வேண் டும். அதற்கு ஒரு பிராயச்சித்தம் போலத்தான் அவர் காசியில் ஒரு அர்ச்சகராகத் தன் மீதி நாட்களைக் கழிப்பதாக முடிவெடுத்திருக்க வேண்டும்.

இதெல்லாம் புரிந்தாலும், 'அதற்குப் பிற கும் தன் அம்மாவோடு அப்பா ஏன் சேர்ந்து வாழவில்லை?' 'உன் அம்மா உயிரோடுதான் இருக்கிறாள்' என்று தன்னிடம் ஏன் அவர் உண்மையைச் சொல்லவில்லை?'

"ராப்பிச்சை! எத்தனை வருஷமா இந்தத் தொழில் நடத்திட்டு வர்றே?"

"www.ராப்பிச்சை.comனு என் பேர்ல ஒரு வெப்சைட் இருக்கு. அதுல பார்த்து எல்லா விவரங்களையும் தெரிஞ்சுக்கங்க!"

- பா. ஜெயக்குமார்



எச்சரிக்கை! தமிழகமே ஸ்தம்பிக்கப் போகிறது.



நீலாம்பரி

மனித உறவுகளின் பல நிறங்கள்

பிரியா ராமன் • ரஞ்சிதா • சாதனா • கௌதம் • சரத்பாபு • பிரதாப் சந்திரன் மற்றும் பலர்

vijay TV

A UTV Group Company

திங்கள் — வெள்ளி, இரவு 9.00 மணி

அட, நல்ல விஷயம்பா!

எம்.எஸ். முடித்துவிட்டு, அமெரிக்காவில் வேலைக்குப் போக வேண்டும் என்று முயற்சிக்கும் இளைஞர், அரசு இன்ஜினியரிங் காலேஜில் சீட் கிடைக்க வேண்டும் என நினைக்கும் மாணவி. ரிடையர் ஆகி இரண்டு வருடமாகியும் பிராவிடெண்ட் பண்டு தொகை செட்டிலாகாமல் கஷ்டப்படும் அரசு ஊழியை. மனநிலை பாதிக்கப்பட்ட மனைவி குணமடைய வேண்டும் என்று ஆஸ்பத்திரிகளுக்கு நடையாய் நடக்கும் அவரது கணவர், டிரான்ஸ்பருக்கு முயற்சிக்கும் மனைவி, பெண்ணுக்குக் கல்யாணமாக வேண்டும் என நினைக்கும் அம்மா...இப்படி எத்தனையோ பேர், எத்தனையோ பிரச்னைகள்.



சென்னை மடிப்பாக்கத்தில் உள்ள சுந்தர விநாயகர் கோவிலுக்கு, இது போல ஏகப் பட்ட கடிதங்கள் வருகின்றன. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை எட்டு மணிக்கு, மடிப்பாக்கம் அன்பர்கள் கோவிலில் கூடுகிறார்கள். மைக்கில், ஒவ்வொரு கடிதமாகப் படிக்கிறார்கள். அந்த வாரம் வந்த கடிதங்கள் அனைத்தும் படித்து முடிக்கப்பட்டவுடன், அவர்கள் குறைகள் நீங்கி நலமடைய கூட்டுப் பிரார்த்தனை நடைபெறுகிறது. அதனைத் தொடர்ந்து அனைவரும் பக்திப் பாடல்களைப் பாடுகிறார்கள்.

பின்னர், பிரார்த்தனைக் கோரிக்கை அனுப்பிய அனைவருக்கும் அர்ச்சனை செய்த பிரசாதம் அனுப்பி வைக்கப்படுகிறது.

''நாங்கள் கூட்டுப் பிரார்த்தனை செய்வதற்குக் கட்டணம் ஏதும் வசூலிப்பது கிடையாது. எங்கள் பிரார்த்தனை பற்றிக் கேள்விப்பட்டு, சென்னையிலிருந்து மட்டுமின்றி, வெளியூர்களிலிருந்தும் ஏராளமான கடிதங்கள் எங்களுக்கு வருகின்றன'' என்கிறார் கோவில் நிர்வாகி டி.ஆர். ரங்கநாதன்.

தகவல்: மௌலி

''இவ்வளவும் தெரிந்த பிறகு மற்ற விஷயங்களை மட்டும் மறைத்து விடுவதில் என்ன பயனிருக்க முடியும்?'' என்று கோமளாவுக்குத் தோன்றியிருக்க வேண்டும். சுவாதியிடம் மீதிப் பகுதியைக் கூறி விட்டாள்.

உண்மையை உணர்ந்த பிறகும் அப்பாவுக்கு ஈகோ குறையவில்லை. கடிதம் எழுதிய போது மன்னிப்பு தொனி எதுவும் தென்படாதவாறு தவிர்த்துவிட்டு, சத்யா காசிக்கு வந்தால் அவளை ஏற்க இப்போது தயார் என்கிற வகையில் மட்டுமே எழுதினாராம். மகளைப் பிரித்ததுமின்றி, தான் இறந்ததாக வேறு அவளிடம் கூறி வளர்த்ததில் ஏற்கெனவே புண்பட்டுப் போயிருந்த சத்யாவுக்கு அவரது கடிதம் மேலும் கோபத்தையே கிளப்பியது. இல்லற வாழ்வில் நாட்டமின்றி, இன நன்பன் வளர்ச்சி, சமூகப் பணி இவற்றில் நாட்டத்தைப் பெரிதும் வளர்த்துக் கொண்டிருந்த அவள், தனக்கு காசிக்கு வந்து அவருடன் மீதி நாட்களைக் கழிப்பதில் விருப்பமில்லை என்று எழுதி விட்டாள். ஆனால் தன் மகளை அவனிடமே தந்தால் அவளைத் தானே இனி வளர்ப்பதில் மகிழ்ச்சி அடைவதாகவும் அந்தக் கடிதத்தில் எழுதினாள். பத்திரிகைத் துறையில் பெரும் பெயர் பெற்றுவிட்ட கர்வத்தில்தான் சத்யா அப்படி எழுதியதாக அப்பா பதிலுக்குச் சாட, அம்மா வெறுப்படைந்துவிட்டாள். அவள் மனநிலை மீண்டும் மோசமடைந்து விடுமோ என்ற பயத்தில் கோமளாதான் அவருக்குக் கடிதம் எழுதினாள். ''கசப்புகள் கடிதங்களில் தொடர வேண்டாம். உண்மையாகவே சத்யாவுடன் குடும்ப வாழ்வு நடத்த விரும்பினால் சுவாதியோடு சென்னைக்கு வரவும். நான் பாலமாக இருந்து உங்கள் உறவு மீண்டும் தளிர்க்க முயற்சி செய்கிறேன்'' என்று.

''அந்தக் கடிதத்தைதான் உங்கப்பா பாங்க் லாக்கரில் வைத்திருக்கிறார். அதுதான் உன் கையில் கிடைத்து, இந்த முகவரி உனக்குத் தெரிய வைத்தது.''

''அதுதான் என் அம்மா உயிரோடு இருப்பதையே எனக்குத் தெரிவித்த கடிதமும் கூட'' என்று நினைத்துக் கொண்டாள் சுவாதி.

(தொடர்ந்து பறக்கும்)



தன்னம்பிக்கைப் பயிற்சி

மனத்தை இயக்கிச் சிகரங்களைத் தொடுவோம்!

உங்கள் ஆழ்மனம் சக்தி மிகுந்ததுதான். அதைச் சரியானபடி அறிந்து இயக்கினால் அதன் அளவற்ற சக்தியைப் பயன்படுத்தித் தேவையான **பொருளாதார வளர்ச்சி - விருப்பப்பட்ட இன்ப வாழ்வு - ஆரோக்கியமான நீண்ட ஆயுள் - பெயர் - புகழ் - நன்மதிப்பு** எல்லாவற்றையும் அடைய முடியும்!

ஐரோப்பிய தத்துவங்களையும், இந்தியத் தத்துவங்களையும், மனோதத்துவ விஞ்ஞானத்தையும் முறைப்படி கற்று, கடந்த முப்பதாண்டுகளாகப் பல்கலைக்கழக மாணவர்களுக்குக் கற்பித்து வரும் பேராசிரியர் என்ற முறையிலும் ஆழ்மனத்தை அறிந்து, உணர்ந்து இயக்கிப் பயன்படுத்தி, சொந்த வாழ்வில் வறுமையிலிருந்து வளத்தை அடைந்தவர் என்ற வகையிலும் தாம் பெற்ற இன்பத்தைப் பிறர் பெறச் செய்ய உங்கள் **உள்மனத்தை இயக்கும் 10 வகை நடைமுறை வழிகளை** வகுத்தும், தொகுத்தும் அனுபவப் பயிற்சி அளிக்கிறார்.

தன்முனைப்புப் பயிற்சிகள்

- ❑ நேரமே பணம்
- ❑ முயற்சியும் பயிற்சியும்
- ❑ தளர்ச்சியை நீக்குங்கள்
- ❑ நினைவாற்றலைப் பெருக்குவது எப்படி?
- ❑ மனித நேயம் - மிக மிக முக்கியம்
- ❑ முடிவெடுங்கள் - பொருளாதாரத்தில் உச்சியை அடைய
- ❑ தொடர்ச்சி முக்கியம்
- ❑ சிந்தனை - செயல்பாடு - பயன் அனுபவிப்பு
- ❑ மனோதத்துவ விதிமுறைகள் : X ÷ + −
- ❑ வெற்றி நிச்சயம்

அறிவியல் சார்ந்த, அனுபவபூர்வமான
உடனடி பயனளிக்கும் 3½ மணி நேர தன்முனைப்புப் பயிற்சி

பயிற்சியாளர் - தத்துவத்துறை பேராசிரியர் **பெரியார்தாசன்**

- ★ தமிழ்நாட்டின் தலைசிறந்த தன்முனைப்புப் பயிற்சியாளர்
- ★ பச்சையப்பன் கல்லூரி தத்துவத் துறை உளவியல் பேராசிரியர்.
- ★ 20 ஆண்டுகளாக மனவியல் பயிற்சியாளர்
- ★ பல்வேறு துறைகளில் 21 புத்தகங்கள் எழுதி வெளியிட்டுள்ளார்.
- ★ அமெரிக்கா - கனடா - தாய்லாந்து - மலேசியா ஆகிய நாடுகளில் நடைபெற்ற சர்வதேசக் கருத்தரங்குகளில் தன்னம்பிக்கைப் பயிற்சி அளித்தவர்.
- ★ "கருத்தம்மா" புகழ் திரைப்பட நடிகர்.

நாடெங்குமுள்ள அரிமா சங்கங்கள், ரோட்டரி, ஜேஸீஸ் அமைப்புகள், எக்ஸ்நோரா அமைப்புகள் இந்நிகழ்ச்சியைத் தங்கள் பகுதியில் ஏற்பாடு செய்யத் தொடர்பு கொள்ளலாம். பொது நல அமைப்புகள், வளர்ச்சி நிதி திரட்டும் நிகழ்வு நடத்தவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

தொடர்புக்கு : பேராசிரியர் **பெரியார்தாசன்**

பாலாஜி அடுக்கு மாடி குடியிருப்பு, ஏஜி-129/9, ஏழாவது மெயின் ரோடு,
அண்ணா நகர், சென்னை - 40. தொலைபேசி : 6284517

சுஷ்ருதா பிளாஸ்டிக் மற்றும் காஸ்மெடிக் சர்ஜரி சென்டர்

ஹண்டே மருத்துவமனை

MAKING QUALITY CARE AFFORDABLE

பொது அறுவை சிகிச்சை, காஸ்ட்ரோ என்ட்ராலஜி அறுவை சிகிச்சை, மார்பக அறுவை சிகிச்சை, லேப்ராஸ்கோபி அறுவை சிகிச்சை (பித்தப்பை கல் நீக்கம், குடல்வால் நீக்கம்), பிளாஸ்டிக் மற்றும் காஸ்மெடிக் அறுவை சிகிச்சை (லிப்போசக்ஷன் உள்பட).

44, லட்சுமி டாக்கீஸ் சாலை, ஷெனாய் நகர், சென்னை - 600 030.
போன்: 6442517, 6449422, 6447538

ஹண்டே நர்ஸிங் ஹோம்

97 & 98, இன்னர் ரிங் ரோட், ஜாபர்கான் பேட்,
சென்னை - 600 083.
போன்: 4853290 E-mail hande @ md2.vsnl.net.in


- லிப்போ சக்ஷன் (கொழுப்பை உறிஞ்சி எடுத்தல்)
- கைனே கோமஸ்டியா (ஆண்களுக்கு பெண்களைப் போல் மார்பகம் இருத்தல்)
- ரைனோ பிளாஸ்டி (மூக்கை மாற்றியமைத்தல்)
- முடி மாற்றியமைத்தல் (Hair transplanation)
- பெண்களுக்கு மார்பகங்களை பெரிதுபடுத்துதல்
- மார்பகங்களை குறைத்தல்
- முகத்தை அழகுபடுத்துதல்
- உதடுகளை சரிபடுத்துதல்
- யானைக்கால் வியாதிக்கு அறுவை சிகிச்சை
- கைகள் அறுவை சிகிச்சை
- தீப்புண் அறுவை சிகிச்சை
- புற்று நோய் அறுவை சிகிச்சை
- ரீ கன்ஸ்ட்ரக்டிவ் சர்ஜரி
- மேக்ஸிலோ பேஷியல் சர்ஜரி

கைனே கோமஸ்டியா

(ஆண்களுக்கு பெண்களைப் போல் மார்பகம் இருத்தல்)



அறுவை சிகிச்சைக்கு முன்



அறுவை சிகிச்சைக்கு பின்
(லிப்போசக்ஷன் மூலம்)

வட்டமேஜை

✉ கதையை மட்டும் நம்பி - அதுவும் சில லட்சங்களில், பதினைந்தே நாட்களில் 'சப்பாணி' படத்தை எடுத்து முடித்திருக்கும் தேவராஜன் ஒரு முன்னுதாரண இயக்குனர் என்று சொன்னால் அது மிகையாகாது. தமிழ்ப் படங்கள் சர்வதேச அளவில் பேசப்பட வேண்டுமானால் நல்ல கதையை மட்டும் மூலதனமாகப் போட்டால் போதும்!
மொரட்டுப்பாளையம்
சு.நா. இராஜேஸ்வரன்.

✉ ரேகா ராமச்சந்திரனின் சந்திப்பைப் படித்தேன். பெட் கிடையாது, ஊழல் கிடையாது, வழக்கு கிடையாது என்கிறபோது ட்ரயத்லான் விளையாட்டைத் தேர்ந்தெடுத்ததில் ரேகா ராமச்சந்திரன் சந்தோஷப்பட்டுக் கொள்ள வேண்டியதே தவிர, வருத்தப்பட வேண்டியதில்லை. மனநிறைவைத் தருகிறதே என மகிழ்ச்சி அடைய வேண்டியதுதான்.
லால்குடி,
எம். இராஜேந்திரன்.

✉ அன்பு ஏழைச் சகோதரனுக்கு ஏற்படும் வலி இயல்பாகவே மனத்தினைத் தொடுகிறது. சிறுகதை சிந்தையில் பதிந்து கண்ணீரை வரவழைத்து விட்டது. மும்தாஜ் யாசினுக்கு நெஞ்சம் நிறைந்த பாராட்டுகள்.
மேட்டூர் அணை,
தா. சிவ இராசன்.

✉ தமிழ் வழிக் கல்வியை எதிர்ப்பவர்களைக் கண்டு கோபம் கொள்ளும் 'நக்கீரன் கோபால்' தனது பத்திரிகையில் ஆங்கில வார்த்தைகளை அளவுக்கு மீறி உபயோகிப்பதைத் தவிர்ப்பாரா?
செங்கல்பட்டு,
கே. சங்கரநாராயணன்.

✉ வாக்குரிமை என்ற ஆயுதத்தைப் பயன்படுத்தி நீதிமன்றத்தால் தண்டிக்க முடியாதவர்களை மக்கள் மன்றம் தண்டிக்கலாம் என்ற தலையங்கம் நெத்தியடி!
தஞ்சாவூர் - 9,
தஞ்சை ராகவ். மகேஷ்.

✉ 'அடிக்கிற கைதான் அணைக்கும்' என்ற பாடல் வரிதான் என் நினைவுக்கு வந்தது, ஸ்ரீனிவாசராம் எழுதியிருந்த சிறுகதையைப் படித்தபோது! கூடவே, 'வேதனை' கலந்த மகிழ்வும் நெஞ்சில் இருந்தது!
புனலூர், வசந்தா பரமசிவம்.

✉ அப்துல் ஹமீது கூறிய 'சோகத்தின் க்ளைமேக்ஸ்' சம்பவம் நெஞ்சைப் பிழிந்து உருக்கி, அழ வைத்தது.
பூனாம்பாளையம்,
ஆர்.பி. ஜெயசந்திரன்.

✉ '103 கோடி எங்கே' - கட்டுரை படித்தேன். அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறதோ, ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். நானும் பணம் இழந்தவன் தான். நான்கு வருடங்களாகியும் முடிவு தெரியாமல் தவிக்கிறேன். ஆனால் ஏமாற்றியவர்கள் சொத்துக்களைத் தங்கள் உறவினர்களிடம் மாற்றிவிட்டு சுகமாக வாழ்கிறார்கள்! என்று தீர்ப்பு வருமோ!
சென்னை - 97,
எஸ். பாலசுப்ரமணியன்.



நெத்தியடி!

✉ மனிதர் அல்லாத பிற உயிர்களிடமிருந்து காதல் போன்ற மென்மையான உணர்வுகளைக் கற்றுக் கொள்கிறோம் என்ற செய்தியை இனிமையாகச் சொன்னது யோகியின் 'மீன்கள்' சிறுகதை. கதைக்குப் பொருத்தமாக சித்திரம் இருந்தது.
கடம்பத்தூர்,
என். அண்ணாதுரை.

● மல்லிகை மன்னன், மதுரை – 17.

? 'தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்குப் பொது மக்களிடம் அமோக ஆதரவு இன்னமும் இருக்கிறது; ஆனால், தலைவர்கள் மட்டும் ஆதரவுக்கரம் நீட்டத் தயக்கம் காட்டுகிறார்கள்' என டாக்டர் ராம்தாஸ் சொல்வது சுத்தப் பைத்தியக்காரத்தனமான பேச்சுதானே?

! பல பத்திரிகைகளும் தலைவர்களும் புலிகளை வீரர்களாகச் சித்திரிப்பதால்தான் மக்கள் ஏமாந்து போகிறார்கள். உணர்ச்சி அரசியல் ஒருபோதும் உதவாது. புலிகளுக்கு உதவிக்கரம் நீட்டுவதென்பது புலி வாய்க்குள் தலையை விடுவதுதான்!

● எஸ். இளங்கோ, கீழப்பெருமழை ●

? அணுவெடிச் சோதனையைத் தங்களைப் போன்றோர் ஆதரிக்கவில்லை – ஆனால், அச்சோதனைக்குப் பிறகுதான் வல்லரசுகளின் கண்ணோட்டம் மாறியிருக்கிறது என்பதைக் கவனித்தீர்களா? (குறிப்பாக சீனாவின் குழைவு)

! வல்லரசுகள் கண்ணோட்டம் – குறிப்பாக சீனா பற்றி – தப்புக் கணக்கு போடாதீங்க. "ஹிந்து – சீனி பாய் பாய்" குழைவு மறந்து போய் விட்டதா? அப்போது ஏது போக்ரன்?

● ஜி. ராமதாஸ், சென்னை – 23.

? ஈ.வெ.கி.ச. இளங்கோவன்...?

! வரவேற்பு ஊர்வலமே வசைபாடும் கூட்டமாகவும் போக்குவரத்துக்கு இடையூறு செய்து மக்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டதாகவும் விளங்கியது. முதல் கோணல் முற்றும் கோணலாகி விடாமலிருந்தால் சரி.

● எஸ். கதிரேசன், பேரணாம்பட்டு.

? நடிகர் ஜெய்சங்கர் பற்றி மலரும் நினைவு ஒன்று கூறுங்களேன்...?

! பிறருக்கு உதவும் குணம் கொண்டவர் ஜெய்சங்கர். விழாக்களுக்குச் சிறப்பு விருந்தினராகச் சென்றால், கையில் சில பொம்மைகளை எடுத்துச் செல்வாராம். விழா முடிந்ததும் அவற்றை ஏலம் விட்டு கிடைக்கும் பணத்தை அனாதை இல்லத்துக்கோ, முதியோர் இல்லத்துக்கோ கொடுத்து விடுவாராம்.

மாதம் ஒருவரை

● உமரி பொ. கணேசன், மும்பை – 37.

? தமிழகத்தில் மாதம் ஒருவருக்கு காங்கிரஸ் தலைமை பதவி அளித்தால் கோஷ்டிப் பிரச்னைகள் தீருமா?

! அதெப்படி; வருடத்தில் பன்னிரண்டு மாதங்கள்தானே இருக்கின்றன!

● ஈ. சிதம்பரம், சிவகாசி. ❑

? நீதிமன்றத்தால் கொடுக்க முடியாமல் போன தண்டனையை மக்கள் மன்றம் கொடுக்கலாம் எனத் தலையங்கத்தில் கூறுகிறீர்கள். தினகரன், செல்வகணபதி இருவரும் தேர்தலில் ஜெயித்த பிறகும் மக்கள் மன்றத்தை நம்புகிறீர்களா?

! இதே மக்கள் மன்றம்தான் சேடப்பட்டியைத் தேர்தல் பிரசாரத்துக்குத் தொகுதிக்குள் நுழையவே விடாமல் விரட்டி அடித்தது. நெடுஞ்செழியனுக்கு எஸ்.வி. சேகரைக் காட்டிலும் குறைந்த வாக்குகள் அளித்தது. ஜனநாயகத்தை நம்பி ஏற்ற பிறகு, மக்கள்

• மக்கள்....



• ...மன்றத்





• ...தீர்ப்பு...



• ...மலரும்!



• பெருமை சிறக்கும்!

மன்றத்தை நம்பித்தானே ஆக வேண்டும்!

● ப. இராம் முருகன், சென்னை - 68.

? சென்னை நகரில் விளம்பரப் பலகைகளுக்குக் கொடுக்கப்படும் மின்சாரத்தை ரத்து செய்தால் என்ன...?

! என்ன கிண்டலா? மின்துறை அமைச்சரின் உறவினருக்கு ஏதோ சில விளம்பரப் பலகைகள் சொந்தமாயிருக்கு என்பதற்காக இப்படியெல்லாம் கேள்வி கேட்கலாமா?

● ஜி. ஜெயராமன், கூந்தலூர்.

? அரசியல்வாதிகள் சந்தித்தால் மரியாதை நிமித்தம் என்கிறார்கள். அது என்ன மரியாதை நிமித்தம்...?

! நேரில் சந்தித்தால் மரியாதையாகவும் முதுகு திரும்பினால் அவமரியாதையாகவும் பேசுவார்கள் என்று அர்த்தம்!

● எஸ். தங்கராஜு, சென்னை - 35.

? '1967'க்குப் பிறகு காங்கிரஸ் இழந்த பெருமையை மீட்டு, கோட்டையில் மீண்டும் வெற்றிக்கொடி நாட்டுவோம்' என்று தமிழக காங்கிரஸ் தலைவர் இளங்கோவன் கூறியுள்ளது பற்றி...?

! கோட்டையா! முதலில் அலுவலகம் இயங்க (யாரும் பூட்டிக்கொண்டு போகாதபடி) ஒரு வீட்டைப் பிடிக்கட்டும்!

● ப. உதயகுமார், விழுப்புரம் - 2.

? வாஜ்பாய்க்கு ஜெயலலிதா கொடுத்த தொல்லை - கருணாநிதி, வைகோ, ராம்தாஸ் கொடுக்கும் தொல்லை - ஒப்பிடுக.

! அந்தத் தேள்கடியை ஒப்பு நோக்க, இதெல்லாம் கொசுக் கடி!

● புளியரை கணேசன், சென்னை - 30.

? அருமை அண்ணன், அஞ்சா நெஞ்சன், வீரத் தளபதி, 'தண்டவாளங் கொண்டான்' கீர்த்திவாசன் பற்றி...?



• சிறப்பான விருந்தினர்!



• வீரச் சித்திரிப்பு!



• வரவேற்பும் வகையும்

! அடைமொழிகளெல்லாம் அவரை அடையாளங்காட்டிய சி.பி.ஐக்கு உரியவை.

● கல்லார் ரஹ்மாத், நாகை.

? எதுவும் முடியாத முதுமையிலும் சிலர் மகிழ்ச்சியாக இருப்பது எப்படி?

காங்கிரஸ் தலைவராக்கினால்?

! மகிழ்ச்சியைத் தங்களுக்குள்ளேயே அவர்கள் காண்பதால்.

● கே. வி. ராமன், சென்னை - 73.

? தொடர்ந்து கிறிஸ்துவப் பாதிரியார்கள் கொலை, தேவாலயங்களின் மேல் வன்முறைச் சம்பவங்கள், குண்டு வீச்சு... நம் நாடு மதச்சார்பற்றதா அல்லது மதச்சார்புள்ளதா?

! நாடு மதச்சார்பற்றதுதான். அரசுப் பொறுப்பில் உள்ள முக்கிய கட்சிக்கு இவ் விஷயத்தில் தடுமாற்றம் என்பதால் தான் பிரச்னைகள் எழுகின்றன. மதச்சார்புள்ளவர்களுக்குத் துணிச்சல் பிறக்கிறது.

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
ஈ. சிதம்பரம்,
4/8/1140, முத்துராமலிங்க நகர்,
ரிசர்வ் லைன்,
சிவகாசி (மேற்கு)

✱ ரூ. 25 பரிசு பெறுபவர் :
எஸ். இளங்கோ
கீழப்பெருமழை,
614 703.





உரிமைக்குரல்!

(எம்.ஜி.ஆர் படமல்ல!)

தூக்குக் கயிறை மூன்று முறை முத்தமிட்டு உயிர் மீண்டவர் உண்டா?

உண்டு.

அவர் பெயர் குருசாமி நாயக்கர். வீர பாண்டிய கட்ட பொம்மனின் வாரிசு. ஒரு தனிப்பட்டத் தகராறில் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு ஜெயிலுக்குப் போனவர். சரமாரியாக அனுப்பிய கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட, குருசாமி நாயக்கரை மரணக் கொட்டடியிலிருந்து மீட்டவர்கள் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ.வும், செய்தித் தொடர்பாளர் கே.எஸ். ராதாகிருஷ்ணனும்தான்.

தூக்குத் தண்டனை கொட்டடியில் ஒருவர் நீண்ட காலம் அடைபட்டுக் கிடக்கும் பட்சத்தில் அவரது மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கலாம் என்ற உச்சநீதி மன்ற நீதிபதி சின்னப்ப ரெட்டியின் தீர்ப்பை வழிகாட்டுதலாக எடுத்துக்கொண்டு எல்லா மட்டங்களிலும் போராடி குருசாமியை மரணப்பிடியிலிருந்து மீட்டதை மர்மக்கதைக்கே உரிய திரில்லோடு தனது 'மனித உரிமைச் சட்டங்களும் சில குறிப்புகளும்' என்ற நூலில் சொல்லியிருக்கிறார் கே.எஸ். ராதாகிருஷ்ணன்.

'மனித உரிமை' என்பது புதிய கோஷமல்ல; மனிதன் சிந்திக்கத் தொடங்கிய போதே உரிமைகளுக்கான போராட்டங்களும் துவங்கிவிட்டன. கி.மு. 2350ம் வருடத்தில் மெசபடோமியாவை ஆண்ட மன்னர்கள் காலத்தில் மனித உரிமைகளுக்காக வகுக்கப்பட்ட திட்டங்கள் முதற்கொண்டு, 1993ம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச்சட்டம் வரை விளக்கியிருக்கிறார் ராதாகிருஷ்ணன்.

மனித உரிமைகளைப் பாதுகாக்க மகாசாசனம் (Magna carta) 1297ல் எட்வர்ட் அரசரால் ரன்னிமேடு என்ற இடத்தில் ஏற்கப்பட்டதாம். இன்றுவரை மனித உரிமைக்கும் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் அடிப்படை ஆவணம் இந்த சாசனம் தான்!

மனித உரிமை சட்டங்களைப் பற்றி விரிவாகக் குறிப்பிட்டிருப்பதைத் தவிர அதற்காகப் போராடும் சர்வதேச பொது மன்னிப்பு நிறுவனம் (அம்னெஸ்டி இண்டர்நேஷனல்) பற்றியும் விவரமாக இந்நூல் பேசுகிறது.

தூக்கு தண்டனை அறவே ஒழிக்கப்பட வேண்டும் என்ற வாதத்தையும் பலமாக எடுத்து வைத்திருக்கிறார் ஆசிரியர்.

ஒரு குடிமகனுக்குள்ள உரிமைகள், அவை பாதிக்கப் படும்போது தட்டப்பட வேண்டிய கதவுகள், விதிமுறைகள், வழி முறைகள் என்று சகல பரிமாணங்களையும் உள்ளடக்கிய நூல் இது.

— கௌசி

(மனித உரிமைச் சட்டங்களும், சில குறிப்புகளும் - தொகுப்பு: கே.எஸ். ராதாகிருஷ்ணன், வெளியீடு: தமிழ்ப் புத்தகாலயம், சென்னை 600 017; விலை. ரூ. 52)

பாவை மகளிர் பாலிடெக்னிக்

MVI, (RTO) அலுவலகம் எதிரில், N.H-7,
இராசிபுரம், நாமக்கல் Dt - 637 401.
✆ : 04287 - 52426, 24408.

COURSES OFFERED

- COMPUTER TECHNOLOGY - **DCT**
- ELECTRICAL AND ELECTRONICS ENGINEERING - **DEEE**
- ELECTRONICS AND COMMUNICATION ENGINEERING - **DECE**
- MECHANICAL ENGINEERING - **DME**

- பெண்கள் பாலிடெக்னிக்
- ஆசிரியைகள் மற்றும் அலுவலர்கள் பெண்களே.
- **கண்டிப்பான, பாதுகாப்பான ஹாஸ்டல்.**
- கல்லூரிப் பேருந்து வசதி.
- திறமையான நிர்வாகம்.

Ist Year - 10th Pass with required % of Marks.
IInd Year - 12th Pass (Ist group / Vocational) with required % of Marks.

* Admission Subject to Govt. Rules

நன்கொடை இல்லை

- **மேற்கண்ட டிப்ளமோ வகுப்புகளுக்கு முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு சேர்க்கை நடைபெற்று வருகிறது. நேரில் அணுகவும்.**
- **சேலம், நாமக்கல், இராசிபுரம் நகரங்களிலிருந்து பாலிடெக்னிக் பஸ் வசதி உண்டு.**



ஸ்ரீ ராமஜெயம்

ஸ்ரீ மாருதி டிராவல்ஸ்

தொலைபேசி எண் 5511786 10/6, ராஜேஸ்வரி தெரு, பெரம்பூர், சென்னை - 600 011
(நாம சங்கீர்த்தனத்துடன் அன்பர்களை அழைத்துச் செல்லும் ஆன்மீக சுற்றுலா குழு அமைப்பாளர்கள்)

① 14.7.2000 to 17.7.2000 - குரு, சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு நவக்கிரஹங்கள் சிறப்பு தரிசனம்: 14.7.2000 இரவு சென்னையிலிருந்து டீலக்ஸ் பஸ் மூலமாக புறப்பட்டு நவக்கிரக ஸ்தலங்களை தரிசித்து 17.7.2000 காலை சென்னை வந்தடைதல். பஸ் கட்டணம், திருநெள்ளாறு இரவு பொதுவான கூடத்தில் தங்குதல் உட்பட ரூ. 425 சாப்பாடு செலவு அவரவருடையது.

② 23.7.2000 - ஒரு நாள் பயணம்: நவக்கிரகக் கோட்டை, தாங்கல் ஆசிரமம், வள்ளிமலை பஸ் கட்டணம், டிபன், காபி, சாப்பாடு உட்பட நபர் ஒருவருக்கு — ரூ 180/-

③ ஆகஸ்ட் மாதம்: நவ திருப்பதி. தேதி, கட்டணம் பின்னர் அறிவிக்கப்படும்.

④ 10.8.2000 to 14.8.2000 நான்கு நாட்கள் ஆந்திர மாநில யாத்திரை: அகோபிலம், மந்திராலயம், மகாநந்தி, ஸ்ரீசைலம், 35 இருக்கைகள் கொண்ட டீலக்ஸ் பஸ், சாப்பாடு பொதுவான இரவு தங்குதல் உட்பட கட்டணம் நபர் ஒருவருக்கு Rs. 1150/-

⑤ 15.8.2000 - அரவிந்தர் ஆசிரமம் — பாண்டிச்சேரி பஸ் கட்டணம் ரூ 125/-

⑥ 20.8.2000 to 31.8.2000 - 12 நாட்கள் வெளிநாட்டுப் பயணம் — சிங்கப்பூர், மலேசியா, பாங்காக், ஹாங்காங். பாஸ்போர்ட் இல்லாதவர்கட்கு பாஸ்போர்ட் எடுத்துத் தரப்படும்.

⑦ 11.9.2000 to 26.9.2000 - பத்ரிநாத், கேதார்நாத், ரிஷிகேஷம், ஹரித்துவார், ஆக்ரா, மதுரா, பிருந்தாவனம் — கட்டணம் Rs. 4750/-

⑧ 3.11.2000 to 18.11.2000 பஞ்ச துவாரகை யாத்திரை . கட்டணம் ரூ 5250/-

பங்கு பெறுவீர்! பாக்கியவான்களாவீர்!

முழு விவரமறிய சுய விலாசமிட்ட ரூ. 3/-ஸ்டாம்ப் அடங்கிய கவர் அனுப்பவும். விவரங்கள் அனுப்பப்படும்.


மேலும் விவரங்களுக்கு:
V. சீனிவாசன் (அமைப்பாளர்)



ஸ்ரீ மாருதி டிராவல்ஸ் & கேட்டரிங் சர்வீஸ் பெரம்பூர், சென்னை - 600 011 தொலைபேசி: 5511786


"தலைவர் என்ன திடீர்னு ஸ்கூல் ஆரம்பிக்கிறாரு?"
"முதல்வர் ஆக இதை விட்டா அவருக்கு வேற வழியே இல்லையாம்!"
—பாளை. பசும்பொன்
—உ. ராஜாஜி
"காலைல உன் வீட்டுல கடமுடன்னு சத்தம் பலமா கேட்டுதே என்ன விஷயம் மாமி?"
"வேற ஒண்ணுமில்லே என் மாமியாரோட பல்செட்டுதான்!"
—அம்பை. தேவா
—கே. ஜி. எஸ். கோவிந்தன்


"என்னது வழக்கத்துக்கு மாறானதெல்லாம் உன் வீட்டுல நடக்குதா?"
"ஆமா அழுக்கடைஞ்ச என் புடவையைத் தூக்கிப் போட்டு சொந்தச் செலவில் வாஷிங் மெஷின் வாங்கிட்டார் என் கணவர்!"
-உ. ராஜாரஜி
"பத்து மணிக்கு டான்னு ஆபீஸ் போகணும்னு பார்த்தா முடியலை"
"நீங்க நகரில் ஏதாவது நிக்கலையா?"
"இன்னும் வேலையே கிடைக்கலையே"
-எஸ். மோகன்
ஸ்மைல் டைம்!
"கருப்பாயும் நல்ல சிவப்புமா அழகா இருக்கிற நாலாவது வீட்டு சேகர் நான் எங்கே போனாலும் பின்தொடர்ந்து வர்றாருப்பா!"
"கொஞ்சம் தெளிவாச் சொல்லு... என்னை போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகச் சொல்றியா இல்ல அவன் வீட்டுக்குப் போகச் சொல்றியா?"
-உ. ராஜாரஜி
"நடிகை நளினாஸ்ரீ பொய் பேசறதுல கில்லாடின்னு சொல்றியே, எப்படி?"
"தன்னை விட தன் தங்கச்சிக்கு வயசு அதிகம்னு வாய்கூசாமல் சொல்றாங்களே!"
-சீர்காழி.சி.ரேவதி



மனசு போதும்!

சென்னை நகரத் தெருக்களில் தினந்தோறும் பல இடங்களுக்குப் போய் வந்து கொண்டிருப்பவன் என்ற முறையில் பல விஷயங்களில் கோபப்பட வேண்டும் போல் தோன்றுகிறது. அதிலும் என்னைப் போல அந்தக் காலச் சென்னையை மிக அருகே பார்த்தவர்களுக்கு ஆதங்கம் அதிகமாகவே இருக்கும். 1946/47ல் தி. நகர் பனிங்கு போலச் சுத்தமாக இருக்கும். தெருக்களைத் தினமும் கழுவியது கூட நினைவிருக்கிறது. நீங்கள் நம்புவீர்களோ மாட்டீர்களோ, இப்போது கண்ணதாசன் சிலை இருக்கும் இடத்துக்கு எதிரில் இருபது அடி விட்டத்துக்கு ஒரு கிணறு தோண்டி வைத்திருந்தார்கள். அதைப்போல இன்னும் சில இடங்களிலும் கிணறுகள் இருந்தன. அந்தத் தண்ணீரை எடுத்துத்தான் தெருக்களைக் கழுவினார்கள். ஆனால் ஒரு சொட்டு கூடத் தெரு வில் தேங்காது.

இப்போது?

வேதனையாக இருக்கிறது!

லேசாகத் தூறல் போட்டாலே ரெஸிடென்ஸி ஹோட்டல் பக்கம் முட்டியளவுக்குத் தண்ணீர். மழைக்கு முன்பாகவே மழைநீர் கால்வாய்களைத் தூறு எடுத்தால் என்ன? பம்பாயில் ஜூன் முதல் தேதி பருவமழை தொடங்குகிறது என்றால் ஜனவரியிலேயே கால்வாய்களைச் செப்பனிட ஆரம்பித்து விடுகிறார்கள். இங்கு செய்தால் என்ன? ஏன் மாட்டேன் என்கிறார்கள்?

அடுத்து, எனக்கு இந்தக் குப்பையைப் பார்த்தாலே எரிச்சல் வரும். இப்போது சென்னையில் யூனிபார்ம் போட்ட ஒரு குழு நவீன முறையில் கையில் உறையெல்லாம் போட்டுக் கொண்டு குப்பைகளை அகற்றிக் கொண்டிருக்கிறது. பொது மக்களாகிய நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? ஒவ்வொருவரும் தங்கள் வீட்டுக்கு முன்னால் பத்தடி பரப்பளவைச் சுத்தமாக வைத்துக் கொண்டால் போதுமே. குப்பை எப்படிச் சேரும்? பல சமயங்களில் நம்மீதே எனக்குக் கோபம் வருகிறது.

ஒரு இடத்தை அழகாக வைத்துக் கொள்ள எல்லோராலும் முடியாது. அதற்குப் பணம் தேவை. ஆனால் சுத்தமாக வைத்துக் கொள்ள எல்லோராலும் முடியும். அதற்கு மனம் மட்டும் போதும்.

- ராணிமைந்தன்

படம் : வெங்கடேஷ்

நல்லி குப்புசாமி செட்டியார்

KALKI SHOPPING PAGE



"கல்கி ஷாப்பிங்"

பக்கங்களில்
விளம்பரம்
செய்ய ரூ.1250/-
மட்டுமே. செய்து
பயனடைவீர்!

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை – 97.
போன்: 2345622, 2345623


ஹோமியோபதி / அக்குபஞ்சர்
நவீன மருத்துவ சிகிச்சை

ஆஸ்துமா, மூலம், இரத்த
அழுத்தம் மற்றும் நாள்பட்ட
அனைத்து நோய்களுக்கும்
நிரந்தர குணமாக்கும்
அக்குபஞ்சர் சிகிச்சைக்கு
அணுகவேண்டிய முகவரி:

Dr S.K. THIAGARAJAN, M.D. (Acu).,
M.D. (Medl.Alt) D.H.M.S.,
Dr. KALA THIAGARAJAN, M.D.(Acu).,
M.D. (Medl.Alt)D.H.M.S.,
24, First Floor, P.V. Tower,
Shopping Complex,
22, RANGANATHAN STREET,
T.NAGAR, CHENNAI - 600 017.
PHONE: 4336372 / 4323105 extn - 124
RESI : 8511562

CONSULTING HOURS:
Monday to Sunday 10 A.M. to 12 Noon
& 3 P.M. to 9 P.M.

CONSULTING APPOINTMENT : 851 1562



வேத சாஸ்திர ரக்ஷணத்திற்கு ஓர் வேண்டுகோள்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்யஸ்மரண ஸமிதி (Regd)
42, காமாக்ஷி ஜோஸியர் தெரு, கும்பகோணம் - 612 001.
Website : www-Kumbakonamonline.com/vedapadasala

☎ : (0435)
Off : 425948
Fax : 423777
Patasala :
422866

"வேதாத்யயனம் செய்யும் பாக்யமில்லாதவர்கள், வேதாத்யயனம் செய்துவரும் குழந்தைகளை போஷித்து ரக்ஷிப்பதன் மூலம் ஓரளவாவது தனது கடமையை நிறைவேற்ற முடியும். ஒரு வேதக் குழந்தையின் படிப்பு, பராமரிப்பு செலவை ஒரு குடும்பம் எடுத்துக்கொண்டால், பேருபகாரமாக இருக்கும்" என்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள். அவரின் மூதாதயர்களான ஸ்ரீ நாகமாம்பா ஸமேத பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் கி.பி. 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து 457 ஆண்டுகளாக நடந்துவரும் ராஜா வேத காவ்ய பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்பொழுது 171 மாணவர்களுக்கு 14 வேத, சாஸ்திர அத்யாபகர்கள், புராதனமான குருகுல முறைப்படி ரிக் வேதம், கிருஷ்ண, சுக்ல யஜுர் வேதம், ஸாம வேதத்தை போதித்து வருகிறார்கள். இப்புனித பாடசாலையை ரக்ஷிக்க கீழ்கண்ட திட்டங்களில் அனைவரும் பங்குகொண்டு ஸ்ரீ வேத மாதாவின் அனுக்ரஹத்தால் ஸகல ஸ்ரேயஸ்களையும் அடைய வேண்டுகிறோம். ***புதிய பாடசாலை கட்டிட நிர்மாணப்பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. நன்கொடை வரவேற்கப்படுகிறது.***

தங்கள் நன்கொடைக்கு U/S 80-G பிரிவின்படி வருமான வரி விலக்கு உண்டு திட்ட விபரங்கள்	ஒரு முறைக்கான நன்கொடை தொகை (One Time)	நிரந்தர வைப்பு நிதி 'Corpus Fund'
ஒரு வேளை ஸமாராதனைக்கு (பகுதி தொகை)	Rs. 500	Rs. 5000
அமாவாஸ்யை (or) பௌர்ணமி (or) த்வாதசி ஸமாராதனைக்கு	Rs. 1,500	Rs.15,000
பௌர்ணமி ஆயுஷ்ய ஹோமம்	Rs. 1,000	Rs.10,000
ஒரு வேதம் பயிலும் மாணவனின் பராமரிப்பு ஒரு மாத செலவு ரூ.1000/-	Rs. 12,000 P.A	Rs. 1 Lakh

Cross செய்யப்பட்ட D.D.-ஐ A.V.M.S.G.D.P.S. Samithi என்ற பெயரில் அனுப்பக் கோருகிறோம்.

ஒரு ஸ்பூன் ஜெர்மனி;

மணப்பாறை முறுக்கு, ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவா, பண்ருட்டி பலாச்சுளை, மணியாச்சி போளி, திருநெல்வேலி அல்வா, திண்டுக்கல் திராட்சை -நம் ஊர்ப் பெருமை கூட்டும் உணவு வகைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். ஈடான பெருமையுடன் ஜெர்மனியின் பெருநகரங்களும் சிற்றூர்களும் பறைசாற்றுவது தங்கள் தயாரிப்பான பியரின் (beer) மேன்மைகளை! நுரையும் நறுமணமும்(நாற்றம்?!) தரும்பும் அந்த அசட்டு மஞ்சள் நிற திரவத்தை அவர்க்ள் தேசியபானமாக அறிவிக்கக் கூடத் தயார்தான்!

ஒரே இட்லி- ஆனால் செட்டிநாட்டுப் பக்கம் போனால் 'மாவாட்டும்' பக்குவத்தையும், திருநெல்வேலிச் சிமையில் அரிசி புழுக்கும் பதத்தையும், மதுரையில் மாவைப் புளிக்க வைக்க வேண்டிய கவனத்தையும் பெண்மணிகள் சளைக்காமல் வர்ணிப்பார்கள் அல்லவா?... அதைப் போல்தான் ஜெர்மனியில் ஊருக்கு ஊர் பியர் தயாரிப்புகள் பற்றி நேர்முக வர்ணனை தருகிறார்கள்.

"தங்கள் பியர்தான் உசத்தி என்று



• டுசல்டார்ஃப் பாராளுமன்றம்-ரைன் டவரிலிருந்து



நேற்று டுசல்டார்ஃபில் சொன்னார்களே?" என்று மறுநாள் கலோன் நகரில் போய்க் கேட்டுத் தொலைக்கும் அசட்டுக் காரியத்தை மட்டும் செய்துவிடக் கூடாது. "அவர்கள் கிடக்கிறார்கள்; நீங்கள்



• அழகான வீடுகள், வீதிகள்

சீதா ரவி

2



எங்கள் பியரை ருசித்துப் பாருங்கள்; அப்புறம் அந்தப் பக்கம் தலைவைக்க மாட்டீர்கள்'' என்று நம்மை அல்ஸ்டாட் வீதிகளுக்கு அழைத்துப் போய் விடுவார்கள்.

'அல்ஸ்டாட்'ஆசுப்பட்டது நகரின் ஆதௌ ஜீர்த்தனாரம்பத்துப் பகுதி- கருங்கல் பதித்த பழைய காலத் தெருக்களும் அவற்றின் ஓரத்தில் கரை கட்டிய கணக்கற்ற 'பியரகங்களு'மாக விளங்கும் இடம். வேலை நாட்களில் காந்தாடிக்

இரை ஸ்டூன் ஸ்விட்சர்லாந்து!

கொண்டிருக்கும் இந்தப் பகுதிகளில் வெள்ளிக் கிழமை மாலையானால் பொள்ளாச்சி சந்தைபோல் ஜனக்கூட்டம் குவிகிறது.

கோடையில் இரவு ஒன்பது மணி வரை பொழுது சாய்வதில்லை என்பதால் மிக நீ...ண்ட மாலைப் பொழுதுகளை இந்த பியரகங்களில் செலவிடுகிறார்கள் உள்ளூர் வாசிகள்.

வெளியூரிலிருந்து வியாபார நிமித்தம் வருகிற பலருக்குப் பேரங்கள் படிவதும் இந்த வீதியோர வண்ணக்குடை நிழல்களில் தானாம்.

கண்ணாடி தம்ளர்களை நிரப்பி நிரப்பிக் கணக்கு வைத்துக் கொள்ள மாளாது என்பதால் மேஜையில் சிறு கோடுகள் போட்ட துண்டுச் சீட்டு வைத்து விடுகிறார்கள். ஒவ்வொரு முறை நிரப்பும் போதும் ஒரு கோடு 'டிக்' செய்யப்பட, கடைசியாக மொத்தமாகக் கணக்கு பார்த்து 'பில்' தரப்படுகிறது.



• ஆன்னா

டுசல்டார்ஃபில் போக்குவரத்து ஒழுங்குபடுத்தவோ கண்காட்சியில் காவல் காக்கவோ நிறுத்தப்படாத ஜெர்மன் போலீஸை அல்ஸ்டாட் பகுதியில் பார்க்க முடிந்தது. குதிரை மீது ஆரோகணித்து, ஏதேனும் கலாட்டா நடந்தால் பாய்ந்து தடுக்கத் தயாராய் அணிவகுத்திருந்தனர்.

'ஜன்மம் எடுத்ததே இதற்குத்தான்' என்பதுபோல் பியரில் படிந்து கிடந்தவர்கள் நீங்கலாக ஏனைய வர்கள் காதல் புரிவதிலும் தொண்டை கிழியப் பாடுவதிலும் மும்முரமாயிருக்க, நிடகாத்திர ஜெர் மானிய போலீஸாரை த் தாங்கி நின்ற குதிரைகள் சோர்ந்து தெரிந்தன!

பியருக்கு நிகரான உற்சாகத்துடன் ஜெர்மனியில் பெருக்கெடுத்து ஓடுவது ரைன் நதி.

நதியென்றால் அகண்ட காவிரியையோ கிருஷ்ணா-கோதாவரியையோ கற்பனை செய்துவிட வேண்டாம். டுசல்டார்ஃபிலும் கலோன் நகரிலும் இன்னும் எங்கள் சாலைப் பயணங்களில் ஆங்காங்கேயும் கூடவே ஓடி வந்த ரைன், சென்னை பக்கிங்ஹாம் கால்வாயின் இலே சான என்லார்ஜ்மென்ட் அளவே இருந்தது!

ஆனால், ஆல்ப்ஸ் சிகரங்கள் உருகி உருகி வள்ளன் மையுடன் பெருக்கும் நீரினால் ஆழமும் நிரந்தரமும் கொண்டது ரைன். அதனாலேயே முக்கியமான போக்கு வரத்துத் தடமாகவும் விளங்குகிறது. (சென்னையின் கழிவு களால் பங்கமுறுவதற்குமுன் பக்கிங்ஹாம் கால்வாய்கூட போக்குவரத்துத் தடமாக இருந்ததுதானே!)

பிரும்மாண்டமான கன்டெயினர்களைத் தாங்கி ஓயிலான படகுகள் நதியில் மிதந்து கொண்டேயிருக்கின் றன. ஆங்காங்கே பரவிக் கிடக்கும் தொழில் நகரங்களுக் கிடையே கச்சாப் பொருள் பரிவர்த்தனைக்கும் உற்பத்திப் பண்ட பரிமாற்றத்துக்கும் மிக வசதியாக இருக்கிறது.

இயற்கையின் கொடைக்குச் சற்றும் சளைத்ததல்ல, மனித ஆற்றலால் இங்கே உருவாகியிருக்கும் சாலை வசதி. இரண்டாம் உலகப் போரில் ஏறத்தாழ தரைமட்டமாகி விட்ட நாட்டைப் புனருத்தாரணம் செய்தபோது சீரமைப் புப் பட்டியலில் முதலிடம் பெற்ற அம்சம் சாலைகள் தானாம். கல்கியின் இரண்டு சிறப்பிதழ்கள் கொள்ளாத அளவுக்கு ஜெர்மன் 'ஆட்டோபான்'களின் (சாலைகள்) தொழில்நுட்பம், பராமரிப்பு, அழகு, சொகுசு, சுத்தம் என்று விவரிக்கலாம்... போரடிக்காமல் கவனமாய் நிறுத் திக் கொண்டு ஆன்னாவை அறிமுகப்படுத்துகிறேன்.

டுசல்டார்ஃப் நகரைச் சுற்றிக் காண்பித்த நடுத்தர வயது ஜெர்மன் பெண் ஆன்னா.

நகரின் விமான நிலையத்தில் பணி புரிபவர். "ஷிஃப்ட் நேரத்தில் அங்கே, மலை சுற்றுகிற வேலை; அதனால் அந்தச் சமயம் பார்த்து வருடாந்தர ஹாலிடே எடுத்துக் கொண்டு விடுவேன்" என்றார் சர்வசாதாரணமாக!

விடுப்பை வீணாக்காமல் டூரிஸ்ட் அலுவலகத்தில் பகுதி நேர கைடாகப் பணி புரிந்து கொண்டிருந்தார் ஆன்னா.

கிண்டர்கார்டன் பிள்ளைகளைப் போல் கேள்வி கேட்



• கொலோன் தேவாலயம்

டும் ('உங்களுக்குக் கல்யா ணம் ஆகிவிட்டதா?' 'இந்த மாசம் பனி பெய்யுமா?' 'பாத்ரூம் எங்கே இருக் கிறது?') காணாமல் போயும் ('கடையை விட்டு வெளியே வந்து லெஃப்ட் டுக்கு பதில் ரைட் போய்ட் டேன்') படுத்தியெடுத்த 35 இந்திய டூரிஸ்டுகளைச் சந்தோஷமாகச் சமாளித் தார்.

ரைன் டவர் என்ற காங்க்ரீட் கோபுரத்தின் உச்சாணிக்கு அழைத்துப் போய் டூசல் நதியும் ரைன் நதியும் சங்கமித்து ஸ்ரீரங் கம் பாட்டர்னில் நடுவே ஒரு குட்டி நகரம் உரு வாக்குவதைக் காட்டினார்.

அவர் நயவில் டுசல் டார்ஃப் பற்றி அறிந்து கொண்டவை:

டுசல் என்ற நதிக்கரை யில் அமைந்த கிராமம் டுசல்டார்ஃப். நார்த் ரைன்

வெஸ்ஃபேலியா மாநிலத்தின் தலைநகராக வளர்ந்திருக்கிறது. முக்கியமான தொழில் நகரம். தொலை



• டுசல் - ரைன்

வில் கொஞ்சம் விவசாயமும் உண்டு. பெர்லினுக்கு அடுத்தபடியாக, டுசல்டார்ஃபின் பங்குமார்க்கெட்டைத்தான் ஜெர்மானிய முதலீட்டாளர்கள் ஆர்வமாய்க் கவனிக்கிறார்கள்.

இரண்டாம் உலகப் போரில் நொறுங்கிப் போய் புனர்ஜன்மம் பெற்ற இந்நகரின் ரயில் நிலையம் உலகத்தரத்தது. உள்ளூர் போக்குவரத்துக்கு டிராம்களும் பஸ்களும் அண்டர் கிரவுண்ட் ரயில்களும் ஓடுகின்றன. (க்ருபா விருந்தாளிகள் கண்காட்சி நுழைவுச் சீட்டு வைத்திருந்தால் நகரப் போக்குவரத்து வாகனங்களில் இலவசமாகப் பயணம் செய்யலாம்.)

தொழில் நகரம் என்பதால் கலை வறட்சிதான் என்று முடிவெடுத்து விட வேண்டாம்-மல்காஸ்டென் என்ற (பெயின்ட் பாக்ஸ் என்று அர்த்தம்) ஓவிய நிலையம்-கண்காட்சிக் கூடம் உண்டு.

சிந்தனையாளர் கெதே (Goethe) பெயரைத் தாங்கி நிற்கும் மியூசியம் இருக்கிறது. இதன் தோட்டத்தை அமைத்த நிகோலா என்ற தோட்டக் கலை வல்லுனர் புகழ் வாய்ந்தவர்.

நாடகக் கலைக்கான அருங்காட்சியகம் இருக்கிறது-நாநூறு வருட நாடக வரலாறு பார்க்கலாம்.

ரைன் நதிக் கரையில் மிக அழகான சர்ச் இருக்கிறது. கத்தோலிக்கர்கள்-பிராடஸ்டன்டுகள் 50-50.

இந்த 50-50 தவிர உதிரிகளும் சேர்ந்த டுசல்டார்ஃபின் ஜனத்தொகை எவ்வளவு இருக்கும் என்று நினைக்கிறீர்கள்...?

வெறும் 5,70,000! அதாவது சென்னை சைதாப்பேட்டையில் மட்டுமே இருக்கக் கூடிய மக்கள்தொகை ஜெர்மனியின் வளம் கொழிக்கும் ஒரு மாநிலத் தலைநகரில் பரவி வசிக்கிறது!

ஓடு வேய்ந்த அழகான புராதனப்பாணி வீடுகள்; அதன் கண்ணாடி ஜன்னல்களின் ஓரத்தில் பனி மூட்ட வெண்மையில் லேஸ் திரைச் சீலைகள்; நடுவே அழகான கலைப் பொருட்கள், ஜீவனுள்ள பொம்மைகள், என பார்த்துப் பார்த்து அலங்காரம் செய்யப்பட்ட குடியிருப்புகள்தான்...

ஆனால் குடியும் குடித்தனமுமாக வாழ்கிறார்களா என்றால் அதுதான் இல்லை!

"ஜெர்மனியில் சட்ட பூர்வமாகத் திருமணம் செய்து கொள்ள விரும்புவோர் மட்டும் சர்ச் அல்லது கம்யூனிடி ஹாலில், போய்த் திருமணம் செய்து கொள்ள வேண்டும்'' என்று சர்வசாதாரணமாகச் சொன்னார் கலோன் நகரில் எங்களுக்கு வழிகாட்டிய பெண்மணி.

அன்று கலோனில் இரண்டு மூன்று திருமணங்கள் நடந்து கொண்டிருந்தன. வீதிகளில் சின்ன சின்ன குழுக்களாக வாழ்த்த நின்றவர்களும் விருந்தினர்களும் பலூன் கையுடன் குழந்தைகளுமாக இருக்க, திடீரென்று சாலையில் ஒரு கல்யாண ஊர்வலம் புறப்பட்டது- சற்றே பெரிய சைஸ் சைக்கிள் ரிக்ஷா போன்றதொரு (இயந்திர)



''கே. பாலசந்தர் மறுபடி சினிமா எடுத்தா என்ன டைட்டில் வைப்பார்?''

''அவள் ஒரு மெகா சீரியல்!''

– பாளை பசும்பொன்



''என் காதலி ரொம்பப் பொறுப் புள்ளவ!''

''எப்படி சொல்றே?''

''வீட்ல இருந்தே சுண்டல் கொண்டு வந்துடுவா!''



''உங்கம்மாவுக்குத் துளியாவது மான, ரோஷம் இருக்கா?''

''ஏன் கேட்கிறே?''

''என்ன சொன்னாலும் என் கூட சண்டைக்கு வர மாட்டேங்கிறாங்களே!''

– ஜூனியர் சக்தி

வாகனத்தில் மணிகளும் தோரணங்களும் கட்டியிருக்க, மணக் கோலத்தில் சிரித்த படி ஓர் அழகான தம்பதி. –அவர்கள் மடியில் அழகான கொழு கொழு குழந்தை–சமர்த்தாக புட்டிப்பால் குடித் துக் கொண்டிருந்தது!

கலோன் (Cologne என்பதை ஏக மாகக் கூழாக்கி 'கொழ்ன்' என்று ஜெர் மனில் உச்சரிக்கிறார்கள்) அதன் மிகப் புராதன கதீட்ரலுக்குப் பெயர் போனது.

அதற்கடுத்தபடியாக நகருக்குப் புகழ் 'மணம்' சேர்ப்பது 4711 ஒரிஜினல் யூடி கொலோன். உலகின் முதல் யூடி கொலோன் இதுதான் என்கிறார்கள்– மிக இலேசான மணமூட்டப்பட்ட இந்த ஸ்பிரிட் தண்ணீர்தான் பின்னால் ரெவ் லான், யார்ட்லி முதலான அழகு சாதன நிறுவனங்களால் பிரதியெடுக்கப்பட்ட தாம்!

மே.ஜெர்மனியின் மிகப் பெரிய நகர மான கலோன் பதிமூன்றாம் நூற்றாண்டில் பக்கத்து ஊரான டுசல்டார்ஃபுடன் யுத் தம் செய்திருக்கிறது! அதிகார பலம் கத்தோலிக பிஷப்புகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலம் அது. சாம்ராஜ்ஜிய விஸ் தரிப்புச் சண்டைதான்.

ஆனால் இந்நகரின் வரலாறு இன்னும் பின்னோக்கிச் செல்கிறது. சாட்சி அதன் பெருமைமிகு'கோதிக்'கதீட்ரல். ஒன்பதாம் நூற்றாண்டு கட்டமைப்பு. அதைப் பிரித் தெடுத்துவிட்டு 1248ல் மீண்டும் கட்ட ஆரம்பித்து 600 வருடங்களுக்குக் கட்டோ கட்டென்று கட்டியிருக்கிறார்கள்! இப் போதும் அதைப் பராமரிக்க நூறு பேர் கொண்ட பட்டறை நிரந்தரமாகப் பணி யாற்றுகிறது. லாட்டரி நடத்தி அதன் புன ருத்தாரணத்துக்குப் பணம் சேர்க்கிறது அரசாங்கம். இதன் 157 மீட்டர் உயர கோபுரத்தில் 509 படிகள் ஏறிப் போய்ப் பார்க்க விரும்பினால் அதற்குரிய நேரத் தில் போகலாம்.

இரண்டாம் உலக யுத்த சமயத்தில் விமானத் தாக்குதலிலிருந்து தப்ப பதுங்கு குழிகள் அமைத்தார்கள் கலோனில்... அப்போது ஓர் அதிசயம் கண்டுபிடித்தார் கள்!

(தொடரும்)



பாக்ஜலசந்தியை கடப்பேன்?

குற்றாலீஸ்வரன் மிகச் சிறிய வயதிலேயே புரிந்த நீச்சல் சாதனைகளைப் படிக்கும்போதும், தொலைக்காட்சியில் பார்க்கும்போதும், 'நாமும் நீச்சல் கற்றுக் கொண்டு சாதனை செய்ய-வேண்டும்' என்று மனசு அடித்துக் கொள்ளும். அம்மாவை நச்சரித்து இசைக் கல்லூரி வளாகத்தில் இருந்த ஒரு தனியார் நீச்சல் குளத்தில் பயிற்சி பெறத் துவங்கினேன். பயிற்சி கொடுத்த ஆசிரியர்தான் சோர்ந்து போனாரே தவிர, எனக்கு நீச்சல் வரவில்லை.

அப்புறம் சவேரா, உட்லண்ட்ஸ் என்று மாறி, மாறிப் பல நீச்சல் குளங்களில் முயற்சி செய்தேன். எனக்குப் பயிற்சி கொடுத்தவர்கள்தான் எங்கே எனக்கெதாவது ஆகி விடப் போகிறதோ என்று பயந்து தண்ணீரில் இருந்து மீட்பார்களே தவிர, நீச்சல் எனக்கு எதிர் நீச்சலாகவே இருந்தது.

"இப்படி இருந்தா பாக்ஜலசந்தியைக் கடப்பது எப்போது?" என்று கிண்டல்கள் வேறு. ஏழாவது படிக்கும்போது துவங்கிய என் நீச்சல் முயற்சி இன்னமும் தொடர்கிறது. இப்போது என் ஃப்ரெண்ட்ஸுடன் நீச்சல் குளங்களுக்குச் செல்கிறேன். முன்னேற்றம் இருக்கிறது என்கிறார்கள் அவர்கள். சாதனைகள்? ஹூம். என்றாவது செய்யாமலா போய் விடுவேன்?

அதே போல், சர்ச் பார்க்கில் படிக்கும்போது அத்லெடிக்ஸில் ஆர்வத்துடன் பங்குகொள்வேன். அதுவும் தடை தாண்டும் ஓட்டத்தில் முதலிடம் வருவேன். மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும் என்று ஆசை. ஆனால் குறிப்பிட்ட வருடம் நான் முதலிடம் வந்தும், மாவட்டப் போட்டிகளுக்கு வேறு ஒரு பெண்ணின் பெயரைப் பள்ளி நிர்வாகம் முன்மொழிந்து விட்டது. அப்புறம் நான் போராட, "அந்தப் பொண்ணு பேர் எழுதி அனுப்பிட்டோம். விடுமா... பார்த்துக்கலாம்'' என்று சொல்லி விட்டார்கள். பல நாட்கள் நொந்து போயிருந்தேன்!

- ரமா

'தில்லானா... தில்லானா' மேதா

நடக்குமென்பார், நடக்கும்!



மகர ராசிக்காரரான ரஜினிகாந்த், புதிய முயற்சிகளைக் கொஞ்சம் தள்ளிப் போடறது நல்லது.

மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

பொருளாதாரப் பிரச்னைக்கு இந்த வாரம் வழியில்லை. பல வழிகள்ல இருந்து பணம் வரும். உங்க திறமைக்கு பாராட்டுக்கள் வரும். வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி ஒண்ணு வரப் போகுது. புதுசா பொருட்கள் வாங்குவீங்க. தகவல், போக்குவரத்துத் துறைகள்ல இருக்கறவங்க வளர்ச்சி பெறுவாங்க. அலைச்சல் அதிகமாக இருக்கும். மனசுல சின்ன சலனம் இருந்துட்டே இருக்கும். நிதானமா பேசுங்க. எதுக்கும் பதற்றப்படாதீங்க.

ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

வீட்ல விசேஷம் நடக்க வாய்ப்பு இருக்கு. மக்கள் நலம் சீரா இருக்கும். எழுத்து, பத்திரிகை, வியாபாரம் போன்ற துறைகளில் இருக்கறவங்களுக்கு திடீர் அதிர்ஷ்டம் உண்டு. பொருளாதாரம் சீராக இருக்கும். ஆனா அதிகமா செலவாகும். சிக்கனமா இருங்க. எதிலும் அவசரம் வேண்டாம். பேச்சில் நிதானம் தேவை. டென்ஷன் ஆகாதீங்க.

மிதுனம் : *(மிருக சீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

உங்கள் புகழ் கூடும். மற்றவங்க பாராட்டைப் பெறுவீங்க. முக்கியமான சில திட்டங்களை நிறைவேற்றுவீங்க. வீட்டுல விசேஷங்கள் நடக்க சந்தர்ப்பம் வரலாம். பணநடமாட்டம் சீரா இருக்கும். ஓவியம், சிற்பம் போன்ற துறைகள்ல உள்ளவங்க வரவேற்பைப் பெறுவாங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு இது நல்ல காலம். பிறரால நீங்க ஏமாற்றப்படலாம். எச்சரிக்கை அவசியம்.

கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

உங்க நிர்வாகத் திறமை வெளிப்படும். அரசாங்கத்தால பயன் கிடைக்கப் பெறலாம். அரசுப் பணியாளர் நிலை உயரப் பெறுவாங்க. புகழ் பாராட்டுக்குப் பஞ்சம் இருக்காது. குடும்பத்துல நல்ல காரியம் நடக்கலாம். புதிய பட்டம் பதவி உங்கள் வீட்டுக் கதவைத் தட்டலாம். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு நல்ல பலன் இருக்கு. பெண்களுக்கு உற்சாகமான சூழ்நிலை ஏற்படும். புதுசா துணிமணிகள் நகைகள் வாங்க சான்ஸ் இருக்கு.

சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

புதிய பதவி பட்டம் தேடி வரும். எந்தத் தொழில் செய்து வந்தாலும் வளர்ச்சி காண்பீங்க. சில சாதனைகளையும் செஞ்சு முடிப்பீங்க. பெரிய மனுஷங்க தொடர்பு பலன் தரும். அரசியல்வாதிகளுக்கு இது நல்ல காலம். எதிர்ப்புகள் இருக்காது. வழக்குகளில் நல்ல திருப்பம் வரும். சிலருக்கு திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்கு சான்ஸ் இருக்கு. உங்களோட எந்த முயற்சியும் வீண் போகாது.

கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

உங்க தோற்றப் பொலிவு பளிச்சிடும். அரசியல்வாதிகளுக்கு கௌரவம், மதிப்பு உயரும். பக்திமார்க்கத்தில் இருக்கற

வங்களுக்கு வரவேற்பும் பாராட்டும் இருக்கு. பொருளாதார நிலை அபிவிருத்தி அடையும். பண விஷயத்துல பஞ்சம் இல்லை. வியாபாரிகளுக்கு நல்ல காலம். எழுத்து, பத்திரிகைத் துறைகள்ல இருக்கறவங்களோட நிலை உயரும். புனிதமான காரியங்கள்ல ஈடுபாடு கூடும். தடைகள் குறுக்கிடுகள் ஏற்படும். எதிலயும் முழுமையான பலனை எதிர்பார்க்க முடியாது. உத்தியோகஸ்தர்கள் சிலருக்கு இடமாற்றம் வரலாம்.

துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

உங்கள் திட்டங்கள் நிறைவேறும். நல்லவங்க உதவமுன்வருவாங்க. பொருளாதாரம் சீரா இருக்கும். உடன்பிறந்தவங்களால உதவிகள் கிடைக்கும். சின்னச் சின்ன பிரச்னைகள் வரலாம். எதிலயும் அவசரம் பதற்றம் கூடாது. கலைத் துறையில உள்ளவங்களுக்கு நல்ல காலம் இது. உற்சாகமான சூழ்நிலை உருவாகும். வெளியூர், வெளிநாடுகளிலிருந்து நல்ல தகவல் வரலாம். புதுப் பொருட்கள் வாங்க சான்ஸ் இருக்கு. ஏற்றுமதி இறக்குமதி லாபம் கொண்டு வரும்.

விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

உங்கள் செயல்பாடு, நிர்வாகத்திறமை, அறிவாற்றல் வெளிப்படற நேரம் இது. எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் கணிதத் துறையில இருக்கிறவங்களோட நிலை உயரும். தொழிலாளிகளோட திறமை பளிச்சிடும். பொதுநலப் பணியாளர்களுக்கு வரவேற்பு அதிகமா இருக்கும். குடும்பத்துல சின்னச் சின்ன பிரச்னைகள் வரலாம். அதைச் சமாளிச்சுடுவீங்க. கொடுக்கல் வாங்கல்ல எச்சரிக்கை அவசியம். எந்த விஷயத்தையும் ஒருமுறைக்கு ரெண்டு முறை சிந்திச்சு செயல்படறது நல்லது.

தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

உங்க திறமை, ஆற்றல் வெளிப்படும். எடுத்த காரியங்களை எப்பாடுபட்டாவது நிறைவேற்றிடுவீங்க. பொருளாதார நிலை சீராக இருக்கும். தன்னம்பிக்கை, துணிச்சல், திறமை அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு மதிப்பு – பாராட்டுக்குப் பஞ்சம் இருக்காது. எதிரிகள் ஓடி ஒளிவாங்க. வழக்கு விவகாரங்கள்ல அனுகூலமான போக்குத் தென்படும். வெளிநாட்டுல இருந்து நல்ல தகவல் வரலாம். வீடு, மனை இந்த வகையில் அளவோடு பயன் ஏற்படும். கலைத்துறையில் உள்ளவங்க ஜாக்கிரதையா இருக்கிறது அவசியம். பிற மொழி, மதக்காரங்களால பிரச்னை வரலாம். ஜாக்கிரதை!

மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

உங்க திட்டங்கள் எண்ணங்கள் நிறைவேற நல்ல நேரம் வந்திருக்கு. இதுவரை இருந்த பண நெருக்கடி இனி இல்லை. புதிய முயற்சிகளை இன்னும் கொஞ்சம் காலத்துக்குத் தள்ளிப் போடுங்க. அவசரம், பதற்றம், கோபம் வேண்டாம். பொருளாதாரம் சீரா இருக்கும். வயிறு சம்பந்தப்பட்ட வியாதி வரலாம். கவனம். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு அனுகூலமான வாரம் இது. எதிர்ப்புகளை சமாளிக்கிற ஆற்றல் வந்துருக்கு. அதனால அதைப் பற்றிய கவலை வேண்டாம். வீட்ல நல்ல காரியம் நடக்க வாய்ப்பிருக்கு. பயணத்துல எச்சரிக்கை அவசியம்.

கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு நல்ல வாரம். உங்களோட திட்டங்கள் நிறைவேறும். மாணவர்களோட திறமை வீண் போகாது. தகவல் தொடர்புகளைச் சேர்ந்தவர்கள் வெற்றிநடை போடுவாங்க. பிற மொழி மதக்காரங்க உதவ முன்வருவாங்க. புதுசா ஆடை அணிகலன்கள் வாங்க நேரிடலாம். ஏற்றுமதி இறக்குமதியில் லாபம் இருக்கு. வீண் செலவுக்கு குறைச்சலிருக்காது. சிக்கனம் அவசியம். வீட்ல விசேஷம் நடக்க வாய்ப்பிருக்கு.

மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

உங்களோட அறிவாற்றல் வெளிப்படும். குடும்பத்துல மகிழ்ச்சி நிலவும். சிலர் புதிய பதவி, பட்டங்கள் பெறலாம். துணிச்சலான காரியங்கள்ல ஈடுபடுவீங்க. இதுவரை நிறைவேறாத காரியங்கள் இப்ப நிறைவேறும். பொருளாதாரம் கொஞ்சம் இழுபறி நிலைல இருக்கும். கொடுக்கல் வாங்கல் விவகாரத்துல எச்சரிக்கை அவசியம். அரசியல்வாதிகள் முன்னேற்றமான போக்கைக் காணலாம். தொழில்ல வளர்ச்சி காணலாம். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு வரவேற்பும் பாராட்டும் கூடும். செலவு அதிகமாகும். வழக்கு – விவகாரங்கள்ல சாதகமான திருப்பம் வரலாம். ❍

குறையொன்றுமில்லை

தேவனான மஹாவிஷ்ணு எப்போது தெய்வத்வம் அடைகிறான்?

உபநிஷத் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்கிறது.

ச்ரத்தையுடன் கூடி இருக்கும்போது அவன் தெய்வத்வம் அடைகிறான். ச்ரத்தா என்றால் மஹாலக்ஷ்மி. அவள் இல்லையென்றால் அவனுக்குப் பெருமை இல்லை. லக்ஷ்மியுடன் கூடியவனான அவனைத்தான் பற்றவேண்டும் என்று உபநிஷத் சொல்கிறது.

நரசிம்ஹனுக்கு 'பத்ரன்' என்று ஒரு பெயர். ஆதி சங்கர பகவத்பாதர் நரசிம்ஹ தாபனீய உபநிஷத்துக்கு விசேஷமாக பாஷ்யம் எழுதியிருக்கிறார். அந்த பாஷ்யத்திலே பத்ரம் என்கிற சப்தத்தினால் நரசிம்ஹன் சொல்லப்படுகிறான் என்கிறார். பத்ரம் என்ற பதத்துக்கு மங்களம் என்று அர்த்தம் சொல்லி விளக்குகிறார் :

மங்களமான மூர்த்தி நரசிம்ஹன். அவனுக்கு பத்ரன் – மங்கள மூர்த்தி என்று ஏன் பெயர் வந்தது?" என்று கேட்டால்

ஸ்ரீயாச பத்ரயா ஜுஷ்ட:

ஜுஷ்ட : என்றால் சேர்ந்திருத்தல் என்று அர்த்தம்.

ஸ்ரீயா – என்றால் 'மஹாலக்ஷ்மியுடன் கூட' என்று பொருள். மஹாலக்ஷ்மிக்கு என்ன பெயர் என்றால், பத்ரா என்று பெயர்! அதனால் அவன் பத்ரன் ஆனான்!

மாங்கல்ய ஸ்தவம் என்று ஒரு ஸ்தோத்திரம். ஸ்த்ரீகள் விசேஷமாகச் சொல்ல வேண்டிய ஸ்தோத்திரம் இது. நித்ய சுமங்கலிகளாய் பரிபூரணமாக பர்த்தாவுடன் கூட இந்த உலகத்தில் சிரகாலம் ஆனந்தமாக இருக்க வேண்டும் என்று சொன்னால் இந்த சுலோகத்தைச் சொல்லு என்கிறார்கள் மஹரிஷிகள்.

அப்படிப்பட்ட உயர்ந்த ஸ்தோத்திரத்திலே வருகிறது : லக்ஷ்மியோடு சேர்ந்து அவன் எழுந்தருளியிருக்கிறான். தேவதைகளெல்லாம் ஓடி வந்து பணிவிடை பண்ணுகிறார்களாம். லக்ஷ்மியோடு சேர்ந்த நரசிம்ஹனை உபாஸனை பண்ண தேவதைகள், அசுரர்கள் ஒருத்தர் பாக்கியில்லாமல் ஓடி வருகிறார்கள். எப்போது வருகிறார்கள்?

ரூப கேசரியானவன் (கேசரங்களை – பிடரி மயிரை – உடையவன் கேசரி) லக்ஷ்மியோடு சேர்ந்து உயர்ந்த ரக்ஷகன் ஆகிறான் என்னும் போது.


லக்ஷ்மியோடு சேர்ந்து சர்வதா ரக்ஷகன், சர்வத்ர ரக்ஷகன் ஆகிறான். ஸ்ரீயஃப்பதியாக இருப்பதுதான் அவனது முதல் பெருமை. அதனால்தான் ஆசார்யர்களெல்லாம் உபன்யாஸம் ஆரம்பிக்கிறபோது ''ஸ்ரீயஃப்பதியாய் அவாப்தசமஸ்தகாமனாய்...'' என்று முதலில் ஸ்ரீயுடன் அவனைக் குறிப்பிட்டுச் சொல்லி அழைக்கிறார்கள்.

இப்படி விஷ்ணுவினுடைய பெருமையையெல்லாம் அவள் ஏற்றாள்; அவளுடைய பெருமை முழுவதையும் அவன் ஏற்றான்.

பாஞ்சராத்ர ஆகமம் என்று சொல்லும்படியான ஆகம சாஸ்திரம் இருக்கிறது. பகவானே ஐந்து ராத்திரிகளில் உபதேசம் பண்ணியது. அதிலே 'அந்நியோன்ய பிரதிபாதகம்' என்று சொல்லப்படுகிறது – லக்ஷ்மி நாராயண தத்வம் அழகாக விளக்கப்படுகிறது : 'சூக்ஷ்மமான இரட்டை அது. எப்போது இணைந்தது என்று யாராலாவது சொல்ல முடியுமா? ஆதியிலிருந்தே அப்படித்தான் இருந்து வருகிறது. அந்நியோன்ய பிரதிபாதகம் என்பது, இதைச் சொல்கிறபோது அதன் பெருமையும், அதைச் சொல்கிறபோது இதன் பெருமையும் வெளிப்படுகிற நிலை. அப்படி ஒன்றின் பெருமை மற்றொன்றினிடத்திலே பரிபூரணமாய் இருக்கிறது என்பதை, ஆகம சாஸ்திரமானது சொல்கிறது. பரஸ்பரம் அவர்கள் சேர்ந்திருப்பதை நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

ஸ்ரீ சூக்தத்தின் பிரார்த்தனை என்ன? 'மஹாலக்ஷ்மி இருக்கிறாளே அவள் வந்து என்னை அடையட்டும். அலக்ஷ்மி என்னை விட்டுப் போகட்டும்' – இதுதான் ஸ்ரீசூக்த சாரம்! ஆனால் இந்தப் பிரார்த்தனை யாரிடத்திலே செய்யப்படுகிறது என்றால் விஷ்ணுவினிடத்திலே!

''ஹே ஜாதவேதா! ஹே நாராயணா,



விஷ்ணு! உன்னுடைய தர்மபத்னி இருக்கிறாளே, அவள் பொன் போன்று ஜொலிக்கிறாள். அப்படிப்பட்ட ஏற்றமுடைய ஹரிணீம் எல்லா பாபங்களையும் ஹரிக்கிறவள்; மான் போன்று அழகாக இருக்கக் கூடியவள்; சுவர்ண மாலைகள், வெள்ளி மாலைகள் எல்லாம் அணிந்து கொண்டிருக்கிறாள். அப்படி சந்திரனைப் போன்று பிரகாசிக்கும்படியான உத்தமியான மஹாலக்ஷ்மி என்னிடத்திலே இருக்கும்படி நீ பண்ணு'' என்று விஷ்ணுவினிடத்தில்தான் பிரார்த்தனை.

அதனால்தான் திருச்சானூருக்கு முதலில் புறப்பட்டுப் போக வேண்டும். அலமேலு மங்கா, பத்மாவதி தாயாரிடத்திலே கைகூப்ப வேண்டும். அங்கே ஸ்ரீ ஸூக்தமோ மஹாலக்ஷ்மி ஸ்தோத்திரமோ சொல்லக் கூடாது. அதையெல்லாம் அவள் விரும்ப மாட்டாள். அவள் கேட்க விரும்புவது அவள் பர்த்தாவினுடைய பெருமையை. அதைச் சொன்னால் ஆனந்தமாகக் கேட்பாள்!

கூரத்தாழ்வார் சொல்கிறார் - பகவான் செயல்படுவது, அவன் நம்மை அனுக்கிரஹிப்பது எல்லாமே எதன் மூலம் பண்ணுகிறான் என்றால் மஹாலக்ஷ்மியுடைய திருமுகக் குறிப்பைக் கொண்டுதான் பண்ணுகிறான். அவள் கொஞ்சம் புருவத்தை நெரித்தால் ஒன்றும் பண்ண மாட்டான். யாராவது போய் அவனிடத்தில் ஏதாவது கேட்டால், அவளைத்தான் திரும்பிப் பார்ப்பான்!

அதனால்தான் திருவேங்கடமுடையானிடம் போனால் அவனை ஸ்தோத்திரம் பண்ணக் கூடாது. இவன் பெருமையையெல்லாம் அங்கே சொன்ன மாதிரி அவள் பெருமையையெல்லாம் இங்கே சொல்ல வேண்டும்.

அப்படிச் சொன்ன பெருமை யாருக்காவது ஏற்பட்டிருக்கிறதா என்றால் சொல்லின் செல்வனான ஆஞ்சநேயனுக்கு ஏற்பட்டிருக்கிறது. அவன்தானே அங்கிருப்பதை இங்கு சொல்லி, இங்கிருப்பதை அங்கே சொன்னான்.

இப்படி அங்கிருப்பதை இங்கே சொல்பவர்களை நாம் கலகப்ரியர்கள் என்கிறோம்! ஆனால் ஆஞ்சநேயன் விஷயம் அப்படிப்பட்டதல்ல! அது உயர்த்தியான காரியம். அதனால்தான் வீரராகவ பெருமாள் விஷயமாகத் திருமங்கையாழ்வார் சொல்கிறபோது, ''அந்த ஆஞ்சநேயனைத் தூது அனுப்பியவன்தான் இங்கே படுத்துக் கொண்டிருக்கிறான்'' என்கிறார்.

ஆஞ்சநேயன் பண்ணிய தூத்யம் இருக்கிறது பாருங்கள் - அது பூரண பலனைக் கொடுத்தது.

ஆஞ்சநேயனிடத்தில் அந்த ஆண்டவனே தூத்யம் கற்றுக் கொண்டானாம்! எதற்கு என்றால், அடுத்த அவதாரத்திலே இவன் தூது போக வேண்டியிருந்ததாலே!

ஆஞ்சநேயனின் தூத்யம் பலித்தது; கிருஷ்ணனின் தூத்யம் பலிக்கவில்லை! யுத்தத்தைத்தான் கொண்டு வந்தான். ஆகையால், ஆஞ்சநேயனை ஆசார்ய ஸ்தானத்திலே வைத்திருக்கிறது.

ஸ்வாமி தேசிகன் சங்கல்ப ஸூர்யோதயம் என்கிற நாடகத்திலே ஆஞ்சநேயனைக் கொண்டாடுகிறார். அவன் ஆசார்ய ஸ்தானத்தில் இருக்கக்கூடியவன் என்பதைச் சொல்கிறார். ராமனையும் சீதையையும் சேர்த்து வைத்தவன் என்று சொல்கிறார்.

லக்ஷ்மி - நாராயண தத்வத்தைச் சேர்த்து வைத்தவர்கள் பெருமை அடைந்தார்கள். ராமனை மாத்திரம் விரும்பி லக்ஷ்மியை விட்டாள் சூர்ப்பணகை. காதறுபட்டு, மூக்கறுபட்டு, பங்கப்பட்டுப் போனாள்.

ராவணனிருக்கிறானே - அவன் சீதையை மட்டும் பற்றி ராமனை விட்டான். அவன் கிளையோடு தானும் மாண்டான். இரண்டு பேரையும் சேர்த்து வணங்கிய விபீஷணன் உயர்த்தியை அடைந்தான்.

ஆகையினாலே, இந்த இரட்டையைப் பிரிக்கவே கூடாது.

ஆசார்யனானதாலே ஆஞ்சநேயன்

அருள்வாக்கு

பிரபஞ்சத்தின் சகல ஆட்டத்துக்கும் காரணம் ஒரே ஒரு பராசக்திதான். அந்த ஒரே ஈச்வரனுடைய ஆக்ஞைப்படிதான் உலக இயக்கம் முழுதும் நடக்கிறது. அவன் பல விஷயங்களைச் சம்பந்தப்படுத்தி விடுகிறான். இந்த உலகத்தில் எதுவுமே தொடர்பில்லாமல் நடக்கவில்லை. நமக்குச் சம்பந்தமில்லாதவையாகத் தோன்றுவதை எல்லாம் உள்ளூறச் சம்பந்தப்படுத்தி வேடிக்கை பார்க்கிறான் ஸர்வேச்வரன்.

ஒருவர் செய்கிற கர்மம், அதன் பலன் இவையே மனித வாழ்வின் சுக துக்கங்களுக்கு முதற் காரணம். இதற்கே துணைக்காரணமாக - அல்லது அடையாளமாக - கிரகசாரம், தெய்வ குற்றம், ஆரோக்கியக் குறைவு முதலியன அமைகின்றன.

ஜாதக ரீதியில், வைத்திய ரீதியில், மாந்திரீக ரீதியில் எப்படி வேண்டுமானாலும் பரிகாரம் தேடிக் கொள்ளலாம். நம் கர்மா தீருகிறபோது அவை பலன் தரும். பகவான்விட்ட வழி என்று பக்தியோடு நம் வாழ்க்கையை ஈச்வரார்ப்பணம் செய்துவிட்டுப் பேசாமல் கிடக்கிற பக்குவம்

தராக கொண்டு நிறுக்கிறான் :

'ராமனுக்குச்சமானமாய் எல்லா விதத்திலேயும் அவள் இருக்கிறாளே! எந்த விதத்திலும் குறைவில்லை – இரண்டு பேரும் சமம், என்பதை எடைபோட்டு நிறுத்துச் சொல்கிறான் ஆஞ்சநேயன்.

பங்குனி உத்திர நாளன்று ஸ்ரீரங்கத்தில் ஓர் அழகான சேவை. சேர்த்தி அறை என்று பெயர். தாயார் சந்நிதியிலே ரங்கநாதன் எழுந்தருள்வான். ரங்கநாயகித் தாயார் அவனைப் பார்த்துக் கொண்டிருப்பாள்.

அப்படியொரு அழகான சேவை. பாஷ்யகாரர் ராமானுஜர் போய் அங்கே சேவித்தார். சேவித்தவுடனே அவர் வாக்கிலே அனுபவ பரீபாவம் :

'பகவானுக்குச் சமமான ரூபம், குணம், சீலம் எல்லாம் நிரம்பியிருக்கும் உத்தமியே!' என்று மஹாலக்ஷ்மியை ஸ்தோத்திரம் பண்ணுகிறார்.

அவன் பகவான் என்றால், இவள் பகவதி. அவன் ஈச்வரன் என்றால் இவள் ஈச்வரி. எல்லோருக்கும் அவன் எஜமானன் என்றால் இவள் அவன் பக்கத்திலிருந்து சர்வத்தையும் நிர்வாகம் பண்ணுகிறாள்.

தம்பதி என்ற சொல் 'ஜாயா–பதி' என்பதிலிருந்து வந்தது. ஜாயா என்றால் பத்னி. பதி – கணவன். இவர்கள் இரண்டு பேரும் சேர்ந்து நின்றால் அந்த இரட்டைக்குத் தம்பதி என்று பெயர்.

தம்பதி ஜகதாம்பதி – ஜகத்துக்கெல்லாம் பதியான அந்த திவ்ய தம்பதியிருக்கிறார்களே அவர்கள்தான் பிரதம தம்பதி.

ஒரு பானை உண்டாக வேண்டும் என்றால் குயவனும் வேண்டும், மண்ணும் வேண்டும். இந்த உலகம் சிருஷ்டிக்கப்பட வேண்டும் என்றால் லக்ஷ்மியும் வேண்டும் நாராயணனும் வேண்டும்.

மஹாலக்ஷ்மிக்கு ஓர் உயர்ந்த பெயர் ஸ்ரீ: ஆளவந்தார் என்ற ஆசார்யர் சொல்கிறார் – "அம்மா தாயே! உனக்கு ஸ்ரீ: என்று பெயர் இருக்கிறதே, அந்தப் பெயர் இருக்கும் போது உன்னை வேறு என்ன சொல்லி அழைக்க முடியும்?" என்கிறார்.

'ஸ்ரீ'க்குப் பக்கத்தில் இரண்டு புள்ளி வைத்து எழுத வேண்டும்.

வியாகரண சாஸ்திர ரீதியாக ஸ்ரீ : என்பதற்கு ஆறு விதமான அர்த்தம் சொல்கிறார்கள் ஆசார்யர்கள்.

ஸ்ரீ நாதி – நம்மிடத்துள்ள தோஷங்களைப் போக்குபவள். பகவான் நம்மை உவக்கும்படியாக அவள்தான் மாற்றுகிறாள்.

ஸ்ரீயதே – எப்போதும் பகவானை ஆச்ரயித்தே இருக்கிறாள்.

நாம் ஆச்ரயிக்கத் தகுந்தவளாகவும் இருக்கிறாள்.

நாம் சொல்கிற குறைகள், கஷ்டங்கள் எல்லாவற்றையும் பொறுமையாக உட்கார்ந்து கேட்கிறாள். – ச்ருணோதி.

அது மட்டுமல்ல... நாம் சொல்வதையெல்லாம் கேட்டு அவனிடத்திலே போய் ரொம்ப அழகாக எடுத்துச் சொல்லுவாளாம் – அவன் அப்படியே உருகி, ஓடிவந்து ரக்ஷிக்கும்படியாக ரொம்ப அழகாகச் சொல்லுவாளாம்.

அவன் சொன்னதையே அவனுக்கு எடுத்துச் சொல்லி நினைவூட்டுவாளாம் – 'நீங்கள் தானே சொன்னீர்கள்... இப்போது மாறி நடக்கிறீர்களே, நியாயமா?' என்று அவன் சொன்னதையே சொல்லுவாளாம். அதனால் வாயை மூடிக் கொண்டு விடுவான் பகவான்!

இப்படி அவன் வார்த்தையையே அவனுக்கு நினைவூட்டி நம்மிடத்திலே விசேஷ அனுக்கிரஹம் பண்ணும்படியான தயை – 'அந்த தயைக்கு நிலைக்களமாய் இருப்பதனாலே, அம்மா உனக்கு ஸ்ரீ : என்று பெயர் இருக்கிறதே! வேறு எப்படி உன்னை அழைக்க முடியும்?' என்று வரத வல்லபா ஸ்தோத்திரத்தில் மஹாலக்ஷ்மி பிரபாவத்தை அழகாக எடுத்துச் சொல்கிறார் ஆளவந்தார்.

ராமாயணத்திலேயும் இதற்குப் பிரமாணம் உள்ளது. அதை அடுத்த வாரம் பார்ப்போம்.

(தொடரும்)



இருந்தால் எல்லாவற்றையும் விட அது சிலாக்கியம். அதுவே பெரிய பரிகாரம்; உண்மையான பரிகாரம்.

பூர்வ கர்ம சமாசாரம் எப்படிப் போனாலும் இனி மேலாவது கர்மபாரம் ஏறாமல் பார்த்துக் கொள்வதே முக்கியம். பழையதற்குப் பரிகாரம் தேடுவதை விட, புதிய சுமை சேராமல, பாவம் பண்ணாமல் வாழ்வதற்கு ஈசுவரனைத் துணை கொள்வதே முக்கியம்.

பூர்வ கர்மத்துக்குப் பரிகாரம் ஈசுவர தியானம் தான்; இனிமேல் துக்கத்துக்கு விதை போட்டுக் கொள்ளாமல் இருக்கிற உபாயமும் ஈசுவர தியானம்தான். துக்கம் தருவதாக இன்னொரு வஸ்துவே இல்லை என்ற அத்வைத அநுபவம் சித்திப்பதே இதன் முடிந்த முடிவான துக்க பரிகார நிலை. அங்கே துக்கமும் இல்லை, சுகமும் இல்லை ; இரண்டுக்கும் ஆதாரமான சத்தியம் மட்டும் சுயம் பிரகாசமாக இருக்கும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

கதை நேரம்

சஷி

ஹீரோ சான்ஸ் ஓஓணம்!



பாலுமகேந்திராவின் 'கதை நேர'க் கதாநாயகன் சஷியைச் சந்தித்து, கொஞ்சம் சொந்தக்கதை நேரம் ஒதுக்குங்கள் என்று கேட்டோம். உற்சாகமாகப் பேசத் தொடங்கினார்.

"எனக்குப் பூர்விகம் கேரளா. ஆனால் படித்து, வளர்ந்ததெல்லாம் கோவைதான். நான் ஒரு இன்ஜினியராக ஆகணும். இதுதான் அப்பா அம்மாவின் விருப்பம். மெட்ரிகுலேஷன் முடித்ததும் என்னை என்ஜினியரிங் டிப்ளோமா சேர்த்து விட்டார்கள். காலேஜ் சேர்ந்த பிறகுதான் கட் அடிச்சுட்டு நிறைய படம் பார்க்க முடிந்தது. அப்படி நான் பார்த்த முதல் படம் பூ விழி வாசலிலே. அந்தப் படத்தைப் பார்த்து விட்டு மறுநாள் அதைப் பற்றி டிஸ்கஸ் செய்துகொண்டு இருந்தோம். அப்போது, 'ரகுவரன் என்ன எக்ஸலண்ட்டாக நடிச்சிருக்கார்'னு நண்பன் சொல்ல, 'என்னடா பெரிய நடிப்பு! இப்படித்தானே டயலாக் பேசினார்'னு, அவர் மாதிரியே ஒரு டயலாக் பேசிக் காட்டினேன். ஒட்டுமொத்த நண்பர் கூட்டமும் ஆடிப் போயிட்டாங்க. எனக்கு நடிப்பு நல்லா வர்றதா சொன்னாங்க. நானும் நம்பிட்டேன். அப்புறம் கல்லூரியில் நான்தான் மிமிக்ரி ஹீரோ! கல்லூரி முடிஞ்சதும் வாகன உதிரிப்பாகங்கள் தயாரிக்கும் ஒரு பெரிய கம்பெனியில் மார்க்கெட்டிங் ரெப் வேலை கிடைத்தது. மாதம் ஆறாயிரம் ரூபாய் சம்பளம். ஆனால் கோவையிலேயே வேலை. இதற்கு இடையிலே என்னைச் சந்திக்கிற நண்பர்கள், 'நீ சென்னைக்கு நடிக்கப் போகாமல் இன்னும் இங்கே என்ன செஞ்சுக்கிட்டு இருக்கே'ன்னு திட்டினாங்க. நம் திறமையில் மத்தவங்களுக்கே இவ்வளவு நம்பிக்கை இருக்கேன்னு அப்போதுதான் ஓர் உறுதி வந்தது. ஆனால் அம்மாவும் அப்பாவும் ஒப்புக் கொள்ளவில்லை. போராடிய பிறகு, 'உன் விருப்பம் போல செய்'னு சொன்னாங்க.

"ஆனா உனக்கு மூணு வருஷம் தான் டைம். அதுக்குள்ள ஜெயிக்க முடியலேன்னா வந்துடணும்"ன்னு கண்டிஷன் போட்டாங்க!

எனக்கும் அந்த கண்டிஷன் பிடித்தது. இந்த நேரம் பார்த்து என்னோட கம்பெனி நிர்வாகம் "சென்னை ஆபீஸ்"க்கு உங்களை டிரான்ஸ்ஃபர் பண்றோம். இரண்டாயிரம் ரூபா இன்கிரிமெண்ட்'னு சொன்னாங்க.

எனக்குத் தலைகால் புரியலை! உடனே சென்னை வந்தேன். வேலை நேரம் போக

மத்த நேரங்கள்ல சான்ஸ் தேடி அலைஞ்சேன். நான் சினிமா வாய்ப்புத் தேடி அலையறது கம்பெனிக்கு எப்படியோ தெரிய ஆரம்பிச்சது.

''உங்களை மறுபடியும் கோயமுத்தூருக்கே மாத்தப் போறோம்''ன்னாங்க.

''நான் என்னோட வேலையைச் சரியா செய்துக்கிட்டுத்தானே இருக்கேன்''னு விவாதம் பண்ணினேன். ஆனால் நிர்வாகம் கேட்கலை. இந்தக் கட்டத்துல சினிமாதான் முக்கியம்னு வேலையை ராஜினாமா செய்துட்டு வந்துட்டேன்.

அப்புறம்தான் கோடம்பாக்கத்து யதார்த்தம் உறைக்க ஆரம்பிச்சது.

கையில் இருந்த பணமெல்லாம் தீர்ந்திடுச்சி. வாடகை கொடுக்க வழியில்லே. இந்த நேரத்துல என்னைச் சாப்பாடு போட்டு, தங்க இடம்



கொடுத்து காப்பாற்றியது என்னோட நண்பர்கள்.

தாக்குப்பிடிக்க முடியாத சூழ்நிலை வந்ததும் ஜெயா டீவியில் வீடியோ எடிட்டராக வேலைக்குச் சேர்ந்தேன்.

பல தொலைக்காட்சித் தொடர்கள்லே வாய்ப்புகள் கிடைச்சது. எல்லாம் நண்பர்கள் தயவு. இயக்குனர் களஞ்சியம் தன்னோட கேசவன் படத்துல வில்லன் ரோலுக்கு என்னை செலக்ட் பண்ணிட்டார். அதுக்காக தாடி மீசை வளர்க்க ஆரம்பிச்சுட்டேன். ஆனா படம் நிமர்னு நின்னு போச்சு. இதற்கு இடையில் என்னோட நண்பர் ஒருவர், என்னை பாலுமகேந்திரா சார்கிட்டே அழைச்சுக்கிட்டுப் போனார்.

''நீ பணக்கார வீட்டுப் பையன் மாதிரி இருக்கே, எனக்கு ரவுடி மாதிரி ஆள்தான் தேவை''னு சொல்லிட்டார்.

நான் உடனே தலைமுடியை கலைச்சு விட்டு, தாடியை சொறிந்து விட்டேன். இந்தத் தோற்றத்தைப் பார்த்ததும் ஓகே சொல்லிட்டார்.

மறுநாள் ஷூட்டிங்.

நான் நடிச்ச முதல் கதை 'நிஜத்தைத் தேடி' சுஜாதா சார் கதை. ஆனா அந்தக் கதையில் வர்ற ரவுடி ஒரு வாரமா சாப்பிடாத கேரக்டர்னு எனக்குத் தெரியாது. ஏன்னா கதை கேட்க முடியாது. நான் செய்யப் போறது பட்டினி கிடக்கிற ஒரு ரவுடி கேரக்டர்னு தலைவாசல் விஜய் சொன்னதும், யூனிட்ல கொடுத்த சாப்பாட்டை வேண்டாம்னு சொன்னேன்.

இயக்குனர் ஏன் சாப்பிடலேன்னு கோபப்பட்டார். ''என்னோட கேரக்டர் பட்டினி கிடக்கிறதா சொன்னாங்க. நீங்க இவ்வளவு சாப்பாட்டைக் கொடுத்தா எப்படி சார்? நான் சாப்பிடாமலே நடிக்கிறேன்''ன்னு சொன்னேன்.

என்னை அமைதியாகப் பார்த்தார்.

''நீ பெரிய நடிகனா வருவே''ன்னு சொன்னார். அப்போ அவர் கையைப் பிடிச்சுக்கிட்டு ஒரு குழந்தை மாதிரி நடிக்க ஆரம்பிச்சேன். இப்போ இருபத்து மூன்று கதைகளில் நடித்து விட்டேன். அவர் நடித்துக் காண்பிக்கிறதுல இருபத்தஞ்சு சதவீதம் ஃபாலோ பண்ணினா போதும். பெரிய நடிகனா ஆகிடலாம்!

''உனக்கு தாடிதான் ப்ளஸ் பாயிண்ட். அதை எடுக்காதே''ன்னு சொல்லிட்டார்.

ரசிகர்களும் என்னை தாடிக்காரன், தாடிவாலா – இப்படித்தான் கூப்பிடுறாங்க. ஒருமுறை பஸ்ல போகும் போது ''நீ மட்டும் எப்படி சின்ன வீடு வெச்சுக்கலாம்''னு கற்பு கதையைப் பார்த்துட்டு ஒரு அம்மா பஸ்லேயே காச்மூச்சுன்னு கத்த ஆரம்பிச்சிட்டாங்க! இதுமாதிரி மக்கள் மத்தியிலே தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு நல்ல நடிகனாக இருக்கவே விரும்புறேன். ஹீரோ சான்செல்லாம் வேணாம்!''

சந்திப்பு: **விஷுவல்தாசன்**
படம்: **வெங்கடேஷ்**



• நாளைய நட்சத்திரங்கள்: ஆர். ராகவேந்திரா, எஸ். ராகவேந்திரா

கலோனியல் கஸின்ஸில்லீங்க! அது ஹரிஹரனும் லெஸ் லூயிஸுஃம்னு தெரியாதா என்ன? இது கச்சேரி கஸின்ஸ்! மும்பை, பாண்டுப் ஃபைன் ஆர்ட்ஸ் நடத்திய இசை நிகழ்ச்சியில் விருந்து படைத்த நண்டு சிண்டு கஸின்ஸ்.

கச்சேரி கஸின்ஸ்!

நண்டு-ஆர். ராகவேந்திரா, 12 வயது; சிண்டு-எஸ். ராகவேந்திரா, 11 வயது. பெயர் எங்கேயோ கேள்விப்பட்டது போலிருக்கிறதா? அப்படியானால் நீங்கள் கோல்கேட் சப்தஸ்வரங்கள், ஹம்மா ஹம்மா 'ஃபேன்கள்' என்று அர்த்தம். இரண்டு போட்டிகளிலும் முதல் பரிசைத் தட்டிச் சென்றது இந்த கஸின்ஸ் தானே?

நிகழ்ச்சியின் முதல் பகுதியில் பத்மா சாண்டில்யன் பாட- (பெயரிலிருந்தே கண்டுபிடித்திருப்பீர்களே? எழுத்தாளர் சாண்டில்யனின் பெண்தான்) தொடர்ந்து இவர்கள் கச்சேரி செய்தார்கள்.

ராகவேந்திரா ஸீனியர், சாண்டில்யனின் பேரன் (பத்மாவின் மகன்); ராகவேந்திரா ஜூனியர், ஸீனியரின் (தந்தை வழி) கஸின். இவர்கள் குரல் வளமும், பெரிய்ய சங்கீத வித்வான்கள் போல் பாடல்களை அனுபவித்துப் பாடிய விதமும், கூட்டத்தை அசர வைத்து விட்டன!

பக்கவாத்தியக்காரர்களான வயலின் ராமச்சந்திரனுக்கும், மிருதங்கம் ஸ்ரீராமுக்கும், மோர்சிங் வெங்கடேஷுக்கும் இந்தக் குட்டீஸுக்கு வாசிக்கையில், உற்சாகம் கரை புரண்டு ஓடியது.

கஸின்ஸ் இருவருக்கும் பத்மாவே குரு.

"மஹா வால்கள்! ஓரிடத்தில் உட்கார்ந்து எங்கே பாடம் கேட்கிறார்கள்? நின்றும், நடந்தும், ஓடியும், ஆடியும் பாடுவார்கள்" என்கிறார், ஈன்ற பொழுதின் பெரிதுவப்பவர். "ஆனால் இசை நிகழ்ச்சி என்று வந்து விட்டால், நன்றாகப் பாடவேண்டுமென்று ஒரு பிடிவாதம் வந்துவிடும்!"

"இந்தக் காலத்தில் குழந்தைகளெல்லாம் ரொம்ப டாலண்டட் ஆகத்தானிருக்கின்றனர். ஆனால் பிறந்த முதலே இசைமயமான சூழலில் வளர்ந்தது இவர்களுக்குப் பெரிதும் கைகொடுத்திருக்கிறது" எனும் பத்மா, "எட்டு மாசத்திலிருந்தே இசை வடிவங்களை உணர்ந்து கொண்டு, அப்படியே மழலையில் பாடிக் காட்டுவான்" என்கிறார் தன் பிள்ளையான ஸீனியர் 'ரா'வைப் பற்றி.

ஸீனியர் வளர வளர இசை ஆர்வமும் வளர்ந்திருக்கிறது. இசைப் போட்டிகளில் வெல்வதென்பது அவனுக்கு வெல்லம் சாப்பிடுவது போலவாம்! அண்மையில் மத்திய அரசின் ஸ்காலர்ஷிப்பும் (ஜூனியர்ஸ்-vocal) கிடைத்திருக்கிறது ஸீனியர் 'ரா'வுக்கு. 'ஜவஹர் சில்ரன்ஸ் வெல்ஃபேர் ஸ்கீம்'மால் நடத்தப்படும் இசைப் போட்டியில், மாநில லெவலுக்கு வந்திருக்கிறானாம். இனிமேல்தான் இறுதிச் சுற்றாம். இந்த இசைக் குயிலுக்குப் பிடித்த பாடகர் சஞ்சய் சுப்ரமண்யன்தானாம்.

பாடும்போது 'குரு'வை அவ்வப்போது பார்த்துக் கொண்டே பாடினாலும், மேடை பயமெல்லாம் கொஞ்சமுமில்லை. குரலுக்காக ஐஸ்க்ரீம், கூல்ட்ரிங்ஸ் எதையும் தியாகிப்பதில்லை! இத்தனை ஏன், 'சாதகம்' என்று அக்கம் பக்கத்தவரை தொல்லைப்படுத்துவதுமில்லை.

"இருபது வயதாகும் வரை இவர்களை மேடை ஏற்றுதாகவேயில்லை" எனும் பத்மா, "என் கணவருக்கு இதெல்லாம் பிடிக்காது; இவர்களுக்கு இன்னும் கச்சேரி எல்லாம் செய்யும் வயதாகவில்லை; நிறைய கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது என மறுத்துப் பார்த்தார். ஆனால் குடும்ப நண்பரான சேஷாத்ரி (பாண்டுப் ஃபைன் ஆர்ட்ஸின் காரியதரிசி) அவர்களின் பேச்சைத் தட்ட முடியாமல் ஒப்புக் கொள்ள வேண்டியதாகிவிட்டது" என்றார், மகிழ்ச்சியும் தயக்கமும் கலந்தபடி.

— ஜெயஸ்ரீ ராஜ்

பில்ராத்
மருத்துவமனை

முதன்முதலில்
அதிநவீன லேசர் கருவியுடன்
லேப்ராஸ்கோப்பி
சிகிச்சை



வயிறு

சம்பந்தப்பட்ட அனைத்து
நோய்களுக்கும் ஓர் முழுமையான

தீர்வு

- அல்சர்
- அபண்டிஸைடிஸ்
- குடல் இறக்கம் (Hernia)
- பித்தப்பை கற்கள் (Gall Bladder Stones)
- கர்ப்பப்பை நோய்
- ஓவரியில் கட்டி எடுத்தல் (Ovarian Cyst Removal)
- குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சை

சிறப்பு அம்சங்கள்

- ரத்த இழப்பு இல்லை
- தழும்பு ஏற்படாது
- உடனே பழைய நிலைக்குத் திரும்பலாம்

♦♦♦

அறுவை இல்லா
மூல வியாதி
சிகிச்சை

சிறப்பு சிகிச்சை :

- லேசர் சிகிச்சை
- கிரையோ சிகிச்சை
- கதிர் வீச்சு சிகிச்சை

BILLROTH HOSPITAL
24 HOURS SERVICE

43, லட்சுமி டாக்கீஸ் சாலை, செனாய் நகர், சென்னை-600030. போன் : 6440020 / 6441777.

J

உங்க மானேஜரோட குழந்தைக்குப் பிறந்தநாள் விழா. விழாவுக்கு வந்திருந்தவங்க குழந்தையைப் பத்தி ஆஹா.. ஓஹோன்னு புகழ்ந்துக்கிட்டிருக்காங்க.

உங்களுக்கும் குழந்தையை இங்கிலீஷ்ல வர்ணிக்கணும்னு ஆசையா இருக்கு. ஆனா எப்படி வர்ணிக்கறது, என்ன வார்த்தையை யூஸ் பண்றதுன்னு யோசிச்சிட்டிருக்கீங்க.

இப்போ உங்களுக்குக் குழந்தையை வர்ணிக்க வார்த்தைகள் வேணும். அவ்வளவு தானே?

ஒருவரைப் புகழ்ந்து கூற (வர்ணிக்க) இங்கிலீஷில் வார்த்தைகளுக்குப் பஞ்சமே இல்லை. எல்லாத்தையும் சொல்றேன். தேவையானதை select பண்ணிக்குங்க.

குழந்தையைப் பார்த்து,

So cute!
So charming!
So pretty!
What a lovely child!
What an active child!
What a clever child!
What a smart child!

இவைகள்ள ஏதாவது ஒண்ணை use பண்ணுங்க. பிறந்தநாள் விழாவானதால குழந்தையைச் சுத்தி நிறைய பேர் இருப்பாங்க. அவங்க காதுல விழற மாதிரி கொஞ்சம் சத்தமா so cute, so pretty, so sweet, so charmingன்னு சொல்லுங்க.

ஸார், நான் குழந்தையை வர்ணிக்கறது மானேஜர் காதுல விழணும். அவர் அதைக் கேட்டு சந்தோஷப்படணும்னு நீங்க ஆசைப் படுவீங்க.

அது போல நீங்க ஆசைப்பட்டா, மானேஜர்கிட்ட பேசும்போது,

Sir, your son is very cute. உங்க பையன் ரொம்ப அழகா துறுதுறுன்னு இருக்கான்.

Sir, your son is very active.
ரொம்ப சுறுசுறுப்பா இருக்கான்.

Sir, your son is so bright.
ரொம்ப புத்திசாலி என்று வர்ணிக்கலாம்.

அதுக்கு முன்னால ஒரு விஷயம். மானேஜரோட குழந்தைக்கு என்ன வயசுங்கறதைத் தெரிஞ்சுக்கிட்டு (குழந்தை ஆணா, பெண்ணாங்கறதையும் தெரிஞ்சுக்கிட்டு) பேச (வர்ணிக்க) ஆரம்பிங்க.

ஆங்கிலமே



ஒரு வயசுக்குட்பட்ட குழந்தையா இருந்தா "baby" ன்னு சொல்லுங்க. சிறுமியா இருந்தா your girl, your daughterங்கற வார்த்தையை யூஸ் பண்ணுங்க.

இனிமே குழந்தைங்கள இங்கிலீஷ்ல ஈஸியா வர்ணிக்க ஆரம்பிச்சுடுவீங்கன்னு நினைக்கறேன்.

நோ க்ரீச்... க்ரீச்!

வேலைக்குச் செல்லும் பெண்மணிகள் தங்களது குழந்தைகளைக் குழந்தைகள் காப்பகத்தில் விட்டுச் செல்வதுண்டு.

இந்த குழந்தைகள் காப்பகத்தை 'creche' என்கிறோம். இதை 'க்ரெய்ஷ்' என்று உச்சரிக்க வேண்டும். 'க்ரீச்' அல்ல!

சில பேருக்குக் குழந்தைங்களைக் கண்டாலே அலர்ஜி. இப்படித்தான் பாருங்க. என் பக்கத்து வீட்டுக்காரர் ஒருநாள் என்கிட்ட வந்து 'அவரோட பக்



அருகில் வா!

கத்து வீட்ல இருக்கற பசங்க அடிக்கற லூட்டி தாங்க முடியலை. அவங்கள இங்கிலீஷ்ல திட்ட நல்லதா ஒரு நாலு வார்த்தை சொல்லுங்க'ன்னு கேட்டார்.

நான் தமாஷா ஏன் ஸார் தமிழ்லயே திட்டுங்களேன்னு சொன்னதும், மனுஷன் ஏகக் கடுப்பாயிட்டார். அப்புறமா சமாளிச்சுக்கிட்டு ஸார், அந்தப் பசங்களெல்லாம் கான்வென்ட்ல படிக்குதுங்க. நான் ஏதாவது திட்டினா டபஸ் புஸ்னு இங்கிலீஷ்ல கத்துதுங்க. எனக்கு ஒண்ணும் புரிய மாட்டேங்குது. அதனாலதான் இங்கிலீஷ்ல ஒரு நாலு வார்த்தை கேட்டா, நீங்க ரொம்ப தமாஷ் பண்றீங்க' என்றார்.

உங்களில் சில பேருக்கும் இது போல குழந்தைகளை (பக்கத்து வீட்டுப் பசங்களை) இங்கிலீஷ்ல திட்டணும்னு ஆசையா இருந்தா அதுக்கான வார்த்தைகளைச் சொல்றேன். தேவைப்பட்டா யூஸ் பண்ணிக்குங்க.

வி. ராஜகோபாலன்

குழந்தைத்தனமாக சேட்டை செய்யும் சிறுவர்களை mischievous (மிஸ்ச்சிவ்அஸ்) என்று சொல்வதுண்டு.

He is mischievous.

He is a mischievous boy

என்றெல்லாம் சொல்லலாம்.

குறும்புத்தனம் ரொம்ப ஜாஸ்தியா இருந்தா 'சரியான வால்'னு சொல்லுவோம். இது போன்ற 'வால்'களை இங்கிலீஷில் 'brat'ன்னு சொல்லலாம்.

That kid is a real brat! அந்தக் குழந்தை சரியான வால்!

குறும்புத்தனம் ரொம்ப, ரொம்ப ஜாஸ்தியா இருந்தா சரியான **"குட்டிச்சாத்தான்'**னு திட்டுவோம்.

குட்டிச் சாத்தானுக்கு இங்கிலீஷ்ல 'Imp' (இம்ப்)னு பேரு. மத்தவங்க குழந்தைகளைத் திட்ட இந்த மூணு வார்த்தைகளே போதும்னு நெனைக்கறேன்.

மற்ற விஷயங்களை அடுத்த வாரம் பார்க்கலாம்.

(தொடரும்)

எதையும் சாதிக்க

"பெண்களில் படித்தவர்கள் பலரிருந்தாலும் தம் துறையைத் தேர்ந்தெடுக்கும் சுதந்தரமுள்ளவர்கள் இங்கே அதிகமில்லை. அத்தகைய விழிப்புணர்வை நம் பெண்களிடம் ஏற்படுத்துவதே என் லட்சியம்!" என்கிறார் ஹேமலதா.

இந்த ஆண்டு வெளிவந்த ஐ.ஏ.எஸ் தேர்வு முடிவுகளில் அகில இந்திய அளவில் 10வது இடத்தையும் தமிழகத்தில் முதலிடத்தையும் பெற்ற ஹேமலதாவின் வயது 23. சொந்த ஊர் விருதுநகர் என்றாலும் வசிப்பது மதுரை



• ஹேமலதா

பதினைந்தாயிரம் ரசிகர்களின் கைதட்டல் ஒலிகளுக்கிடையே, இரண்டு கைகளையும் விரித்து கண்களை மூடித் திறந்த அந்தச் சில நிமிடங்களில், அவர் அடைந்த ஆனந்தத்திற்கு வேறு எதையும் ஒப்பிட்டிருக்க முடியாது! அதற்கு அப்போதைய அவரின் முகமே சாட்சி!

அவர் - டென்னிஸ் வீராங்கனை மேரி பியர்ஸ்.

பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியில் எந்த உள்ளூர் 'பார்ட்டி'யுமே தோல்வியையே தழுவிக் கொண்டிருந்த நேரத்தில் முப்பத்து மூன்று வருடங்களுக்குப் பிறகு கோப்பையை வென்றிருக்கிறாரே!

ஜூன் பத்தாம் தேதியன்று போட்டி துவங்கும் முன்பே ரசிகர்கள் மேரி பியர்ஸை மொய்த்து, "கண்டிப்பாகப் பட்டம் வாங்க வேண்டும்" என்று குரல் கொடுக்க 'ஐ வில் ட்ரை நாட் டு க்ரை!' என்று சொல்லிவிட்டுக் களத்திற்கு வந்தார். களத்தில் கோஞ்சிதா மார்டினஸ்! (முதல்முறையாக ஃபைனலுக்கு வந்திருக்கும் இவருடன் மேரி பியர்ஸ் பதினேழு முறை மோதி, பதினோறு முறை வெற்றி பெற்றிருக்கிறார்)

ஆனாலும் கடுமையான போட்டிதான். இரண்டாவது செட் ஆடும்போது 4-3, 5-4 என்று திரில்லிங்காகச் செல்ல, டென்ஷனில் இருந்தனர் மேரி பியர்ஸின் ரசிகர்கள். அடுத்து 5-5 என்ற செட் கணக்கு வர, 'உச்' கொட்டிக் கொண்டு, கையைப் பிசைந்தபடி ரசிகர்கள் தொந்து கொண்டிருக்க, 6-5 நிலையை பியர்ஸ்

அடைந்ததும் கைதட்டல்களில் மிதந்தது ஸ்டேடியம்!

பிரெஞ்சு முன்னாள் டென்னிஸ் வீராங்கனை தர் (Darr) மற்றும் மார்டினா நவரத்லோவாவும் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தையும் கோப்பையையும் மேரி பியர்ஸிடம் வழங்கினர். கண்களில் இருந்து கண்ணீர்த் துளிகள் எட்டிப் பார்க்கும் நிலையில் சொன்னார் பியர்ஸ்:

"நான் என் தந்தைக்கு நன்றி சொல்ல வேண்டும்!" சற்று நிறுத்தி, சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, "ராபர்ட் ஐ லவ் யூ!" (பாய் பிரண்டாம்!) என்று அத்தனைக் கூட்டத்துக் கிடையிலும் சொல்ல, மீண்டும் கைதட்டல்!

"என் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்ச்சி இது. இந்த டோர்னமெண்ட்டை வெல்ல வேண்டும் என்ற என் கனவு நனவாகி விட்டது. எனக்கு இது கஷ்டமான மேட்ச் தான். நான் ஜெயிப்பேன் என்று நினைக்க வில்லை. குறிப்பாக இரண்டாவது செட் என்னைப் படுத்திவிட்டது. சொந்த மண்ணில் ஜெயிக்க மாட்டோம் என்று நினைத்தேன். ஜெயித்து விட்டேன். கனவு நனவாகி விட்

நனவான கனவு!

டியும்!

யில். மின்துறையில் ஓய்வு பெற்ற பொறியாளர் பூவேல் போஸ் - பங்கஜம் தம்பதியரின் ஒரே மகள்.

பதவிக்காகவோ, சமூக அந்தஸ்துக்காகவோ ஐ.ஏ.எஸ் படிப்பைத் தாம் தேர்ந்தெடுக்கவில்லை என்கிறார் ஹேமலதா.

''பெண்ணாகப் பிறந்ததினாலேயே இந்தத் துறைக்குப் போக முடியலேங்கிற எண்ணம் பலருக்கு இருக்கு. பெண்கள் என்றால் இந்தத் துறைக்கு வேண்டாம் என்று ஒதுக்கக்கூடிய சமூகக் கட்டுப்பாடும் இருக்கு. இவற்றிலிருந்து விடுபடணும். நான் ஐ.ஏ.எஸ் பாஸ் பண்ணியவுடனேயே இந்தத் துறை இப்படியிருக்கும், மிரட்டுவாங்க, என்றெல்லாம் சொன்னார்கள். அதையும் மீறி சாதிக்கணும்கிறதுதான் என் எண்ணம். இது, அடுத்தத் தலைமுறைக்கும் ஒரு நம்பிக்கை தருமல்லவா!'' என்று கேட்கிறார்.

ஐ.ஏ.எஸ் தேர்வுகளில் தமிழ்நாட்டில் அதிகம் பேர் வெற்றி பெற முடியாததற்குக் காரணம், சரியான வழிகாட்டிகளும், ஐ.ஏ.எஸ் தேர்வுகளுக்கு ஆயத்தப்படுத்தக்கூடிய அளவுக்குப் புத்தகங்கள், இதழ்கள் தொகுப்பு, பயிற்சியாளர்கள் இல்லாததுமே என்று தெரிவிக்கும் ஹேமலதா, தாம் இதற்காக டெல்லியில் மூன்று மாதங்கள் சிறப்புப் பயிற்சி பெற்றதாகச் சொன்னார்!

''கல்லூரிகளில் இப்போது போதிக்கிற அளவைவிடக் கூடுதலாகப் பொது அறிவுப் பாடங்கள் இடம் பெற வேண்டும். இந்தச் சூழ்நிலை உருவானால்தான் தமிழ்நாட்டில் நிறையப் பேர் ஐ.ஏ.எஸ் ஆக முடியும்'' என்கிறார் ஹேமலதா.

தம்மைச் சந்திக்க வரும் அனைத்துப் பத்திரிகையாளர்களிடமும் ஹேமலதா தவறாமல் ஒரு வேண்டுகோள் வைக்கிறார்:

''சார், நீங்க தினமும் மக்களைச் சந்திக்கறீங்க. அவங்களோட தேவைகள், அடிப்படை எதிர்பார்ப்புகள் என்னென்ன சொல்லுங்க சார்!''

அட, ஒரு சின்ஸியர் ஆபீசர் கிடைத்துவிட்டார்!

- கி. சிங்காரவடிவேல்



டது''
என்று வெண்பற்கள் தெரிய அழகாகச் சிரிக்கிறார் பியர்ஸ்.

''நான் பயந்துகொண்டே ஆடினேன். ஆதலால்தான் சரியாக ஆடவில்லை. பியர்ஸ் நன்றாக ஆடினார். இந்தப் பட்டம் அவருக்குக் கிடைத்ததில் மகிழ்ச்சியே'' அடக்கமாக முடித்துக் கொண்டார் மார்ட்டினஸ்.

பியர்ஸுக்கு இது இரண்டாவது கிராண்ட்ஸ்லாம் பட்டம். ஒரு மணி நேரம் ஐம்பத்திரண்டு நிமிடங்கள் நடந்த இப் போட்டியில் வென்றதற்கு அவருக்குக் கிடைத்தப் பரிசு எவ்வளவு தெரியுமா? 575 டாலர்கள். அதாவது இரண்டு கோடியே 86 லட்சம் இந்திய ரூபாய்!

— ஏக்நாத்.செ



கெட்ட ஆவிகள்
வட்டமிடுவதாக
சந்தேகிக்கப்பட்ட
இந்த வீட்டில்
தண்ணீர்ப்பஞ்சமில்லை.

●

பிரபலங்கள் மீது
பரவுவதுண்டு
வதந்திகள்
வதந்திகளாலேயே
பிரபலமான
வீடிது.

●

குறைச்சலான வாடகை
குடைச்சலில்லாத
வீட்டுக்காரர்
இவற்றுக்கு மத்தியில்
சுவரின் ஒட்டடைகள்
ஜரிகைகளாய்த்
தோன்றியதெனக்கு.

●

வேண்டாம் பிடிவாதம்
வீடா கிடைக்காதென்றனர்

பெருமாள் கோயில்
தீர்த்தத்தில்
பீடை போகுமென்றனர்
வேறு சிலர்

●

ஆயினும்
கடந்து போன
ஒரு மாத காலத்தில்
உணரப்பட்ட உண்மை—

வாடகை தருவதற்கு
வக்கில்லாதவர்களால்
உருவாகுபவை
பேய் வீடுகள்.

●

மேலும்
பெரும்பாலான வீடுகளில்
பேய்களிருக்கின்றன

என் வீட்டிலில்லை
தொலைக்காட்சி.

யுகபாரதி

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 *
Registered No. TN / Chief PMG-141 / 2000 * Licensed to post without prepayment
under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka